Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20

# ஈழநாடு

தேசிய வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விகாரி, தை 3- ஆம் நாள். றஜபு பிறை 16 (16-1-60) சனிக்கிழமை இதழ் 50.

# "சிங்களவர் தமிழ் கற்க வேண்டும்"

## யு. என். பி. கட்சி கூறுகிறது "ஆங்கிலம் எல்லாருக்கும் கட்டாய மொழியாக இருக்கும்"

— நமது அரசியல் நிருபர் —

**அரசாங்க சேவையில் புக விரும்பும் சிங்களவர், மற்ற தேசிய மொழியான தமிழை ஓரளவு கற்கவேண்டும். அதே மாதிரி தமிழர் ஓரளவு சிங்களம் கற்க வேண்டியிருக்கும்.**

இவ்வாறு பொருட்படும்படி யு. என். பி. யின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மொழிக் கொள்கை குறிப்பிடப்பட்டிருக்கிறதென்றும், இக் கொள்கை முறை தீவெங்கும் நடைமுறைக்கு வந்தால் அதுவே அநேகமாக "சம அந்தஸ்து" ஆகுமென்றும் யு. என். பி. யைச் சேர்ந்த ஒருவர் கூறுகின்றார்'

சிங்களவர் தமிழ் கற்கவேண்டியிருக்குமென்று கூறினால் யு. என். பி. கட்சிக்கு தேர்தலில் சிங்களவரின் ஆதரவு கிடைக்க முடியுமா? அல்லது இதில் ஏதாவது சூது இருக்குமா? என்று சந்தேகிக்கப்படுகிறது.

களனிமகாநாட்டில்சேர்ஜோன் கொத்தலாவலையின் தலைமையில் யு. என். பி. மொழிக் கொள்கை விஷயமாக ஒரு "இமாலயத்தவறை" செய்தது. இரு தேசிய மொழிகளும் அரசாங்க மொழிகளாகச் 'செயலில்' இருந்து வந்தபோது, அதைச் சட்ட பூர்வமாகச் செய்துவிடுவீர்களா?என்று திரு. பேரின்பநாயகம் யாழ்ப்பாணத்துக்கு சேர்ஜோன்வந்திருந்தபோது ஒரு கூட்டத்தில் கேட்டார்.

"இதைப்பற்றி யோசிக்கலாம்"என்று சேர்ஜோன்,ஒருவிதமான ஆதரவுஅளிக்கவே,இது பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் பிரசுரிக்கப்பட்டது. உடன் அவரது அரசியல் எதிரிகள் இதை வைத்து அவருக்கு மாருகப் பிரசாரம் செய்ததுடன், "சிங்களம் மட்டும்" கோஷத்தையும் எழுப்பினர்.

தமது "தவறை" உணர்ந்த சேர்ஜான், பின்னர், அவசர அவசரமாக திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவின் தூண்டுதல் மீது களனி மகா நாட்டில்சிங்களம்மட்டும்"தீர்மானத்தைநிறைவேற்றி, பார்லிமெண்டையும் 18 மாதம் முன்னதாகவே கலைத்து தேர்தல் பிரசாரம் செய்தார்.

அச்சமயத்தில் டட்லி சேனநாயக்கா, யு. என். பி. கட்சியிலிருந்து ஒதுங்கி இருந்தார்.

'தனிச் சிங்களம்' என்று கூறியும், தேர்தலில் யு. என். பி. படுதோல்வி அடைந்தது. 'நியாயமான தமிழ்' என்று கூறிய 'எம். ஈ. பி' க்கு வெற்றி கிடைத்தது.

ஆனல் எம். ஈ. பி. தனிச் சிங்கள சட்டத்தை அவசரமாக நிறைவேற்றியதால், வகுப்பு வெறிகள் கிளம்பின. கட்சி அலங்கோலமாகியது. பண்டாரநாயக்காவும் கொலை செய்யப்பட்டார். கழுதை தேய்ந்து கட்டெறும்பாயிற்று.

ஏற்கனவே நிறைவேற்றிய மொழிச் சட்டத்தை மாற்ற சிங்களக் கட்சிகளெல்லாம் பயப்படுகின்றன.

"நியாயமான தமிழ் உபயோகச் சட்டம்" அவசர நெருக்கடி காலத்தில் நிறைவேற்றப்பட்ட

9 ஆம் பக்கம் பார்க்க

## தமிழன் தமிழ் மொழி மூலம் ஆளப்பட வேண்டும


### சமசமாஜ அபேட்சகரின் விளக்கம்

யாழ்ப்பாணம்

"சிங்களம் சட்ட பூர்வமாக அரச கரும மொழியாக்கப்பட்டு விட்டது. அதே போல தமிழையும் சட்ட பூர்வமாக அரச கரும மொழியாக்க வேண்டும். இதுவே நாங்கள் கோரும் சம அந்தஸ்து. தமிழன் இலங்கையின் எப்பகுதியில் வசித்தாலும் அரசாங்கத்துடன் தன் தாய்மொழி மூலம் கருமம் நடத்தும் உரிமை இருக்க வேண்டும். தாய் மொழியில் கல்வி கற்று, தாய்மொழியில் பரீட்சிக்கப்படும் உரிமை இருக்க வேண்டும். சுருங்கக் கூறின் தமிழன் தமிழ் மொழியில் ஆளப்பட வேண்டும். இவ்வாறு காங்கேசன் துறையில் சமசமாஜக் கட்சியின் சார்பில் போட்டியிடும் திரு வி. காராளசிங்கம் "ஈழநாடு" பிரதிநிதியிடம் தெரிவித்தார். "இவ்வித உரிமை அளிப்பதால் சிங்களத்துக்கு ஆபத்து வந்துவிடுமென்றும் இது பழைய 50—50 கோரிக்கைக்குச் சமானமானதென்றும் சிஙளகவர் சிலர் பிரசாரம் செய்கிறார்கள். தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து வழங்குவதால் சிங்களருக்கு எதுவித ஆபத்தும் உண்டாகாது. இப்பொழுதிருக்கும் நிலையில் வடக்கு கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த ஏனைய இடங்களில் வசிக்கும் தமிழர் தங்கள் பெயர் தேர்தல் இடாப்புகளில் வந்திருக்கிறதா என்று பார்ப்பதே முடியாத காரியம். ஏனென்றால் அவை சிங்களத்தில் மட்டுமே அச்சிடப்பட்டுள்ளன" என்றும் திரு. காராளசிங்கம் கூறினர்.

"மொழி சம்பந்தமான பிரச்சினையில் எமது கொள்கை மாறவில்லை" என்று அவர் மேலும் வற்புறுத்தினர்.

ஒரு ரூபாவுக்கு மிகுதியான மைல்கள்




BRIDGESTONE TIRES

பிரிட்ஜ்ஸ்டோன் டயர்கள்

*Distributors:*

**Tuckers Autodrome**

ஏகவினியோகஸ்தர்கள்:

ஓட்டோஸ் லிமிடெட்

யாழ்ப்பாணம்.

போன்: 496 தந்தி: "ஓட்டோஸ்"

## இந்தியா - பாகிஸ்தான் நட்பு பலப்படுகிறது

### பங்களூர் இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையின் மகிழ்ச்சி

**இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் கிழக்கு, மேற்கு எல்லைகளில் ஒப்பந்தம் ஏற்பட்டதை, பங்களூரில் கூடியுள்ள 65ஆவது அகில இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை வரவேற்றுள்ளது. இரு தேச மக்களுக்கும் இனி சிறந்த நல்லுறவு ஏற்படுமென்பதற்கு இது நற்சகுனமாகு மென்றும், இரு நாடுகளுக்கும் இனி வர்த்தகம் முதலிய நட்புத் தொடர்புகள் அதிகரிக்கு மென்றும் நம்பிக்கை தெரிவித்து தீர்மானம் நிறைவேறியுள்ளது.**

ஆனல் இந்திய மண்ணில் சீனம் ஆக்கிரமிப்பு நடத்தி, இதனல் ஆபத்து அதிகரித்துள்ளதாயும், அப்பகுதியில் இராணுவ பாதுகாப்புகளை உடன் பலப்படுத்துவதுடன், எல்லைத் தகராறுகளை சமாதானமாகத் தீர்க்க எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்று இந்திய அரசாங்கத்தை வற்புறுத்துவதாகவும் தீர்மானம் நிறைவேறியுள்ளது.

புதிய காங்கிரஸ் தலைவரான திரு. என். சஞ்சீவி ரெட்டியின் தலைமையில் மகாசபை ஆரம்பமாயிற்று. இவர் தமது ஆந்திர முதல் மந்தரி பதவியை ராஜினமாச் செய்துவிட்டு காங்கிரஸ் தலைமை பதவியை ஏற்ருர்.

மூன்ருவது 5 வருட திட்டத்தை,இந்திய கைத்தொழில், அபிவிருத்திக்கான முறையிலும், பாதுகாப்பை பலப்படுத்தும் வகையிலும் நடத்தவேண்டுமென்று நேரு தயாரித்த தீர்மானமும் நிறைவேறியது.

பங்களூருக்குப் பக்கத்திலுள்ள "சதாசிவ" நகரில் ஏராளமான மக்கள் கூடியுள்ளனர். காங்கிரஸ் நகரம் ஜெகஜோதியாகக் காட்சி அளிக்கிறது.

காங்கிரஸ் கூட்டத்துக்கு வந்த இந்திய அரசாங்க மந்திரி ஹபீஸ் முகமது இப்ராகிம், மோட்டாரிலிருந்து இறங்கியபோது, அவர் கால்மீது கார் ஏறி கீழே விழுந்தார்.பின்னல் வந்த நேருஜி உடனே காரிலிருந்து இறங்கி, அவரைத் தூக்கி உதவினர். மந்திரி இப்ராகிம் 3 வாரம் ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் கால் எலும்பு முறிந்திருப்பதாயும் டக்டர் தெரிவித்தார்.

## யப்பானில்பெரிய பூகம்பம்

யப்பான் தலைநகரான டோக்கியோவில் பலத்த பூகம்பம் ஏற்பட்டது. வீடுகளெல்லாம் ஆடின. மக்கள் திகிலுடன் வெளியே ஓடிவிட்டனர். சேதம் பற்றிய விபரம் தெரியவில்லை.

# ஆசிரியருக்குக் கடிதங்கள்

## தமிழினத்தை ஒன்றுபடுத்த ஒரே வழி

ஈழ நாட்டின் அரசியல் மிக நெருக்கடியான சூழ்நிலையில் இருக்கின்றது. தமிழ் பேசும் இனத்தின் மொழியுரிமை, குடியுரிமை யாவும் பறிபோய்விட்டன. இன்று தமிழ் பேசும் மக்கள் யாவரும் நன்கு சிந்தனை செய்து செயலாற்ற வேண்டிய பொறுப்பில் இருக்கின்றார்கள். இப்பொதுத் தேர்தலின் மூலம் தமிழ் பேசும் மக்கள் தமது கருத்துக்களை—கொள்கைகளை, அப்பட்டமாக வெளிப்படுத்துதல் வேண்டும். கடந்த காலங்களில், ஒவ்வொரு முக்கியமான கட்டத்திலும் தமிழினம் எம்மாதிரியான தவறுகளைச் செய்ததோ, அவ்வாறான தவறுகள் எதுவும் இனிமேல் ஏற்படாமல் நடந்து கொள்வது தமிழினம் தமது குறிக்கோளை அடைவதற்கு ஏதுவாகும். எனவே, தமிழ்பேசும்மக்கள் ஒவ்வொருவரும் நன்கு சிந்தனை செய்து சரியான மார்க்கத்தில் ஒன்றுபட்டு ஒரே நோக்கோடு செயலாற்றுவது மிக அவசியமாகும்.

தமிழ் பேசும் இனத்தின் அரசியலுரிமைகளைப் பெறுவதற்கு, தமிழ் மக்கள் யாவரும் ஒரு தாபன முறையிலே ஒன்று சேர்ந்து இயங்கத் தவறியதே முக்கிய காரணமாகும் என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்வது அவசியமாகும். டொனமூர்த் திட்டத்தை எதிர்த்தார்கள். பகிஷ்கரித்தார்கள். பின்னர் ஏற்றுக் கொண்டார்கள். தமிழ்ப் பிரதிநிதிகளும் தமிழ் பேசும் மக்களும் தாபன முறையிலே — கொள்கையிலே — குறிக்கோளிலே ஒன்றுபட்டிருக்காத தன்மையால் எதிர்ப்பும், பகிஷ்கரிப்பும் கைவிடப்பட்டன. அடுத்து சோல்பரி ஒற்றையாட்சித் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டப்படி அரசியல் அதிகாரங்கள் முழுவதும் பெரும் பான்மையினரின் கையில் ஒப்படைக்கப்பட்டன. இதனால் தமிழினம் அடிமைப்பட்ட இனமாக ஆக்கப்பட்டது. இவ்வநீதியான அரசியல் முறையை அன்றுள்ள தமிழ்ப் பிரதிநிதிகள் யாவரும் ஒன்றுகூடி எதிர்த்தார்கள். ஏற்றதொரு சந்தர்ப்பம், தக்கவொரு சூழ்நிலை, அவ்வொற்றை ஆட்சியை சிறுபான்மையினரின் சம்மதம் இல்லாமல் நிலைநாட்ட முடியாமல் இருந்தது. ஒரே கொள்கையில் குறிக்கோளில் தாபன முறையிலே கட்டுக்கோப்பாகத் தமிழ் பேசும் மக்கள் யாவரும் இருந்திருப்பார்களே யானால் தமிழினத்தின் உரிமைகள் யாவும் நன்கு நிலைநாட்டப்பட்டிருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. அன்று தமிழ் பேசும் மக்களின் தலைவர்கள் யாவரும் தனித்தனியாக, ஒரு கொள்கையற்று, குறிக்கோளற்றுப் பிரிந்திருந்தார்கள்.

கொள்கை, குறிக்கோள், கட்சி என்பவற்றைப் பற்றி இன்று நாம் மிக முக்கியமாக கவனிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். கொள்கைகளை நன்குணர்ந்து, குறிக்கோளில் பற்று வைத்து, கட்சியில் ஒன்றுபட்ட இனமே தமதுரிமைகளைப் பெற வல்லது என்பதை நாம் என்றுமே மறைக்கவோ மறுக்கவோ முடியாது. இலங்கைவாழ் தமிழ் பேசும் இனம் தாபன முறையில் கட்டுப்பட்டு ஒன்று சேரத் தவறின் தமிழினம் சின்னாபின்னப்பட்டு சிதைவுற்று அழிந்தொழிந்து விடும் என்பது திண்ணம்.

ஒற்றை ஆட்சியை எதிர்த்துத் தமிழினத்துக்குச் சுய நிர்ணய உரிமை பெற வேண்டும் என்ற குறிக்கோளோடு தமிழ்க் காங்கிரஸ் உருவாகியது. பின்னர் ஒற்றை ஆட்சி மந்திரி சபையில் இடம்பெற்றுத் தமது குறிக்கோளை உதாசீனம் செய்தது. இதனால் தமிழ் பேசும் மக்கள் பெரிதும் ஏமாற்றமடைந்தார்கள். பிரிவுற்றார்கள். அதன் காரணமாகவே சமஷ்டிக்கட்சி தோன்றியது. கொள்கை, குறிக்கோள், என்பவற்றை மதித்து நடக்கின்றது. அந்த தாபனத்தின் கீழ் தமிழினம் ஒன்றுபட்டு ஒரே நோக்கோடு நிலையான கொள்கையோடு உறுதியாக இருக்க வேண்டியது அவசியமாகும். ஜனநாயக முறையிலே, இனத்தின் உரிமைகளைப் பாதுகாத்து ஐக்கிய இலங்கையைத் தோற்றுவிக்கக் கூடிய அரசியல் முறையையும், அவற்றைப் பெறுவதற்காக உழைக்கும் மார்க்கத்தையும் எமக்கு முன்னர் சமர்ப்பித்து இருக்கின்றது. இதனைத் தமிழ் மக்கள் நன்கு பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

தமிழ் பேசும் மக்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து உண்மையான ஜனநாயகத்தை நிலைநாட்டக்கூடிய சமஷ்டிக் கொள்கைக்காக உழைப்பதே சாலச் சிறந்ததாகும். எமது இனத்தினுரிமைகளையும் பாதுகாத்துக் கொண்டு, ஐக்கிய இலங்கையையும் அமைப்பதற்கு இத்திட்டமே ஒரே ஒரு வழியாகும். இந்த நீதியான கோரிக்கைக்காகப் போராடுவதேமுறையாகும்.

மண்டைதீவு — தி. பஞ்சாட்சரம்.

## அனுராதபுரத்தில் தேர்தல் போராட்டம்

— நமது நிருபர் —

அனுராதபுரம்.

நியமன தினம் முடிந்ததிலிருந்து அனுராதபுரத்தின் தேர்தல் பிரசார வேலைகள் மிகவும் உச்ச நிலையை அடைந்து விட்டன. இப் பிரச்சார வேலைகளையும், போட்டிக் கட்சிகளிடையே நிலவும் அபிப்பிராயங்களையும் கவனிக்கும் போது இம்முறை பொதுத் தேர்தல் மிக ருசிகரமாக இருக்கும்.

அனேகமாக எல்லா இடதுசாரிக் கட்சிகளும் யு. என். பி. யை எதிர்க்கும் பொதுப் பணியில் ஈடுபட்டிருக்கின்றன. சில தினங்களுக்கு முன்னர் கொம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவு பெற்ற பல்வேறு தொழிற் சங்கங்கள் ஒன்று திரண்டு அனுராதபுரம் நிவத்தக சைத்திய வித்தியாலய மண்டபத்தில் திரு. பி. எஸ். இராமநாயக்க தலைமையில் கூடினர். இக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய முன்னாள் போக்குவரத்து மின்சக்தி அமைச்சர் திரு. மைத்திரிப்பால சேனநாயக்கா உட்பட, பல பேச்சாளர்கள் யு. என். பி.யின் புனர் ஜன்மம் பற்றிக் குறிப்பிட்டு, அக் கட்சி மீண்டும் பதவிக்கு வந்தால் தொழிலாளருக்கு இப்போதுள்ள உரிமைகள் பறிக்கப்பட்டு விடும் என்றும், தொழிலாளரைப் பழி தீர்க்க முயலும் என்றும் விளக்கினார்கள்.

யு. என். பி. யினர் வடக்கு மாகாணத்தில் போட்டியிடாது ஒதுங்கி விட்டது அவர்களது மொழிக் கொள்கையின் விளைவுகளில் ஒன்று என்று கொம்யூனிஸ்ட், சமசமாஜக் கட்சி ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் கூறினார்கள்.

### தமிழர் வாக்குகள்

அனுராதபுரத் தொகுதியில் மட்டும் ஏறத்தாழ இரண்டாயிரம்தமிழ் வாக்குகள் இருக்கின்றன. இந்தத் தமிழ் வாக்குகள் யாருக்கு கிடைக்கின்றனவோ அவர்களே வெற்றி பெறுவார்கள் என்று கூடச் சொல்லாம். ஏனெனில், இங்கு நடைபெறும் ஒரு சில இயக்கங்களின் படி, கண்டி நாட்டுச் சிங்களவர், கரையோரச் சிங்களவர் என்ற பேதம் காட்டப் பட வேண்டும் என்றும் அப் பிரச்சினை முக்கியத்துவம் பெற்று விளங்கும் என்றும் தெரிகிறது. அப்படியான நிலைமை ஏற்படும் போது சிங்கள வாக்குகளே பிரிந்துவிடும்.

கொம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகர் திரு. ஆரியவன்ஸ குணசேகர நமது நிருபருக்குக் கூறியதாவது: "யு. என். பி. யின் களனி மாநாட்டுத் தீர்மானம் ஏற்பட்ட பின்னரே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் "சிங்களம் மட்டும்!" கோஷம் அதிகமாகியது என்பதை மறந்து விடக் கூடாது. எமது கட்சியின் மொழிக் கொள்கையான பிரதேச மொழி உரிமைபற்றி எமது தலைவர்கள் நன்றாக எடுத்துக் கூறி விட்டார்கள். யு. என். பி. யின் மொழிக் கொள்கை என்ன? அதை ஏன் அவர்கள் இப்போது மிக மிகத் தந்திரமாக மறைக்க வேண்டும்?" என்பதேயாகும்.

சென்ற வார 'ஈழநாடு' இதழில் அரசியல் நிருபர் எழுதியிருந்த டட்லியின் கருத்தை அவருக்கு நமது நிருபர் விளக்கியபோது, "மந்திரிப் பதவி கொடுத்துத் தமிழர்களை விலைக்கு வாங்கிய காலம் மலையேறிவிடவில்லையா ?" என்று கேட்டார்.

### அனுராதபுரத் தொகுதியில்

மேற்கூறிய கொம்யூனிஸ்ட் அபேட்சகரைத் தவிர்த்து, யு. என். பி. சார்பில் புறக்டர் டி. பி. மஹாதில்வவ, சுயேச்சைகளான ஏ. ஜே. ஹெரத் பண்டா, ஆர். எல். எச். ஜயசேகரா, டபிள்யு. பி. அமுனுகம, எஸ். கொடகே (ஸ்ரீ. ல. சு. க) மோஹன்தாஸ் டி'மெல் (எம். ஈ. பி.) டி. எம். குமாரசிங்க ஆகியோர் போட்டியிடுகின்றார்கள்.

திரு. மஹாதில்வவவும் மற்ற மூன்று சுயேச்சைகளும் தேர்தல் களத்தில் இப்போதுதான் முதன் முறையாகக் குதித்திருக்கின்றனர். இவர்கள் நால்வருக்கும் இப்போதைய நிலவரங்களின்படி. சந்தர்ப்பங்கள்சரியாகஅமையாது என்றே தோன்றுகிறது.

எம். ஈ. பி. சார்பில் போட்டியிட முன்வந்துள்ள திரு. மோஹன்தாஸ் டி' மெல், கொழும்பு பௌத்த மகளிர் கல்லூரியின் உரிமையாளரும் பொது நிர்வாகியுமாவார்.

### மதவாச்சியில் நால்வர் மோதல்

சென்ற வார 'ஈழநாடு' தவறுதலாகப் பிரசுரித்திருந்தது போலல்லாமல், மதவாச்சித் தொகுதியில் நால்வர் போட்டியிடுகின்றனர்.

திரு. மைத்திரிபால சேனநாயக்கா இத்தொகுதியின் உறுப்பினராக 1947ஆம் ஆண்டிலிருந்து தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். யு. என். பி.அபேட்சகராகவே இருந்து வந்த திரு. சேனநாயக்கா, திரு. டட்லி சேனநாயக்காவின் மந்திரிசபையில் உள்நாட்டு அமைச்சின் பார்லிமெண்ட் காரியதரிசியாகப் பணியாற்றினார். அரிசி விலை உயர்த்தப்பட்டதை ஆட்சேபித்து யு. என். பி. யிலிருந்து ராஜினாமாச் செய்த திரு. சேனநாயக்கா கடந்த தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அபேட்சகராக வென்று அமைச்சரானார்.

கடந்த தேர்தலில் இவரை ஆதரித்து வேலை செய்த திரு. ஆரிய பத்திரண, காலஞ் சென்ற பண்டாரநாயக்காவின் சிங்கள மகா சபாவிலேயே இருந்து பணியாற்றியவர். திரு. சேனநாயக்காவை இப்போது எதிர்த்துப் போட்டியிடுகின்ற இவருக்கும் செல்வாக்கு அதிகம் என்று தெரிகிறது.

மதவாச்சியைச் சொந்த ஊராகக் கொண்ட திரு. எஸ். எச். மஹாதில்வவ என்பவர் யு. என். பி. சார்பில் போட்டியிடுகிறார். சென்ற தேர்தலில் கட்டுப் பணத்தை இவர் இழந்தவர்.

திரு. தகநாயக்காவின் ஜனநாயகக் கட்சி சார்பிலும் ஓர் அபேட்சகர் போட்டியிடுகிறார். திரு. ஏ. இ. ஓ. வீரசிங்க என்ற இந்த நபர் மதவாச்சித் தொகுதிக்குப் புதியவர்.

## எழுத்தாளரின் பொதுமாநாடு

### 30, 31-1-60இல் கொழும்பில் நடைபெறும்

எழுத்தாளர் சங்கம் நடத்தத் தீர்மானித்துள்ள இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் பொது மாநாடு இம்மாதம் 30 31ஆம் திகதிகளில் நடைபெறும்.

ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள் அனைவரையும் பூரணமாகப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய சிறப்பு மாநாடாக இது விளங்கும் எனலாம். இம் மாநாட்டுக்கு ஈழத்திலுள்ள சகல எழுத்தாளர்களினதும், இலக்கிய வட்டாரங்களினதும், இலக்கிய ஆர்வமுள்ள பொதுமக்களினதும், தேசியப் பத்திரிகைகளினதும் ஒத்துழைப்பும், ஆதரவும் கிடைத்து வருகிறது. நாடெங்கும் பரவிக் கிடக்கும் எழுத்தாளர்கள் ஓரிடத்தில் சந்தித்து இலக்கியத்திற்கும், எழுத்தாளர்களுக்குமுள்ள பொதுப் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடுவதற்கு இந்த மாநாடு சந்தர்ப்பமளிக்கிறது.


ஈழத்து இலக்கியத்தின் தனித்தன்மையான பாரம்பரியத்தையும், மரபையும் ஒருமைப்படுத்தி நமது இலக்கியத்திற்குத் தேசிய வடிவம் கொடுப்பதற்கான இலக்கிய முயற்சிகள் இதுவரை முற்று முழுதாக நடைபெறவில்லை. ஈழத்துத் தமிழ் இலக்கியத்திற்கு ஜீவனூட்டும் பிரச்சினைகளைக் கணக்கிலெடுத்து இம் மாநாடு பல ஆக்கபூர்வமான முடிவுகளைச் செய்யும். இம் மாநாடு சிறப்புடன் நடைபெற இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் புத்தக-பத்திரிகை, புகைப் படக்கண்காட்சியும், கவியரங்கம், கருத்தரங்கம், கலையரங்கம் போன்ற பல நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

இம் மாநாட்டில் பண்டிதமணி கணபதிப் பிள்ளையும், சிலப்பதிகாரத்தைச் சிங்களத்தில் மொழிபெயர்த்த வண. தர்மரத்தின தேரோவும் கௌரவிக்கப்படுவார்கள். அத்துடன் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் தோற்றுவாய்களாகத் திகழும் மறைந்த மாபெரும் எழுத்தாளர்களின் உருவப் படங்களும் திறந்துவைக்கப்பெறும்.

இம்மாநாட்டில் பிரபல சிங்கள எழுத்தாளர்கள் கலந்து கொள்வதுடன் பல நாடுகளின் தலைசிறந்த எழுத்தாளர்களும் பங்குபற்றுவார்கள். இம் மாநாட்டை ஒட்டி சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்படவிருக்கிறது. எனவே, இத்தனை அம்சங்களையும் உள்ளடக்கிக் கொண்டு மிக விரிவானமுறையில் நடைபெறவிருக்கும் இம் மாநாடு பூரண வெற்றியடைய எழுத்தாளர்களினதும், இலக்கிய அபிமானிகளினதும், தமிழ் இலக்கியத்தினதும், மக்களினதும் வளர்ச்சியில் அக்கறையுள்ள சகல தமிழ்பேசும் மக்களினதும் பரிபூரண ஒத்துழைப்பும் நிதி உதவியும் தேவை.

இலங்கை முற்போக்கு
எழுத்தாளர் சங்கம்,
9, பேர்பீல்ட் கார்டன்ஸ்,
கொழும்பு—8.


வி ன் டோ ஜெ னே




வி ன் டோ ஜெ னே

எல்லா வலிகளையும் அதிவிரைவில் குணமடையச் செய்யும் வலி நிவாரணி.

எல்லாவித தசைப்பிடிப்பு, தலைவலி, நரம்புத்தளர்ச்சி, கீல் வாதம், இடுப்புவலி, முடக்குவாதம், தொண்டைப்புண், தடிமன் போன்ற வியாதிகளிலிருந்து உடன் குணமடையச் செய்கிறது.

போலிகள் பற்றி எச்சரிக்கையாக இருக்கவும்.

சோல் ஏஜண்டுகள்:

**சிலோன் அன் போரின் ட்ரேட்ஸ் லிமிட்டெட்**

ஏக விநியோகஸ்தர்கள்:

**புரோவின்ஷியல் சப்ளையர்ஸ் லிமிட்டெட்**

125, மெயின் வீதி, கொழும்பு. போன்: 78653

# ‘உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதே விவசாயிகளின் கடமை’

“எங்கள் நாட்டில் புகையிலை சிகரட், பீடி ஆகிய போகப் பொருள்களை - வியாபார பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்வதில் ஊக்கம் எடுக்கப்படுகின்றது. உற்சாகமும் ஊட்டப்படுகின்றது. உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வது இரண்டாம் மூன்ரும் பட்சமாகிவிட்டது. டக்டர் குமரப்பா போன்ற பண்பட்ட பெருமக்கள் புகையிலை, பீடி, சிகரெட் ஆகியவற்றை உற்பத்தி செய்ய வேண்டாம்; உபயோகிக்க வேண்டாம் என நமக்கு அடிக்கடி போதனை செய்து வருவதை இனிமேலாவது நாம் கவனித்து நடப்போமானல் நமது வாழ்வு புத்துயிர் பெற்றுப் பூரணம் அடையும்” இவ்வாறு திரு. சி. க. வேலாயுதபிள்ளை உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் அகில இலங்கைக் காந்தீய சேவா சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற டக்டர் ஜே. ஸி. குமரப்பாவின் 69 ஆவது பிறந்த தினக் கொண்டாட்டத்தின் போது பேசுகையில் குறிப்பிட்டார்.

சென்னை அரசினர் வைத்தியசாலையில் நோய்ப் படுக்கையில் இருக்கும் டக்டர் குமரப்பாவின் நோய் குணமடைந்து நல்ல ஆரோக்கியத்துடன் தொண்டாற்றப்பூரணசக்தியை ஆண்டவன் அளிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் காந்தி நிலையத்தில் 4-1-60 மாலை பொதுக் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்றது. ஸ்ரீ குமரப்பாவின் வாழ்க்கைச் சாதனையில் சில குறிப்புகள் எடுத்துக் கூறப்பட்டபின், அகில இலங்கைக் காந்தீய சேவாசங்க குறிப்புப் புத்தகத்தில் டக்டர் குமரப்பாஜீ 4-10-59 இல் எழுதியுள்ள போதனைகள் சபையில் வாசித்துக் காட்டப்பட்டன. அதில் அவர் எழுதியிருப்பதாவது:-

“அகிம்சையும் சத்தியமும் அடிப்படையாகக் கொண்ட சாதி வித்தியாசமற்ற சமுதாயத்தை உண்டாக்க நாம் ஒவ்வொருவரும் முயன்று வேலை செய்ய வேண்டும். நமக்கு அத்தியாவசியம் தேவையான பொருளாதார நிலையை உண்டாக்குவதனல்தான் இவ்விதமான சமுதாயத்தைக் கொண்டு வர முடியும். உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றில் சுயதேவைப் பூர்த்தி செய்ய முயல வேண்டும். வியாபார நோக்கமாக உண்டாக்கும் பொருள்களுக்கு முதலிடம் கொடுக்கும் இக் காலத்தில் உணவுப் பொருள்களை உண்டாக்குவதற்குக் காந்தீய சேவாசங்கம் பெரிதும் முயல வேண்டும். உடைக்குரிய பருத்தியை எங்கும் உண்டாக்குவதுடன் கதரை எங்கும் பரப்ப வேண்டும். இத்துடன் வெளிநாடுகளில் இருந்து வரும் பொருள்களை முற்ருக நிற்பாட்டல் வேண்டும். இந்தக் கொள்கைகளில் இளம் வாலிபர்கள் வளர்க்கப்படல் வேண்டும். இதை அடைவதற்கு ஆதாரக் கல்வியைக் கூடியளவு எல்லாப் பாடசாலைகளிலும் ஆரம்பிக்கலாம். அடைவதற்கு அருமையும் சிறப்பும் பொருந்திய இக் கொள்கைகளையெல்லாம் இச் சங்கத்தின் பேரே தன்னுள் அடக்கியிருக்கிறது. இவற்றையெல்லாம் அடைவதற்கு எல்லா விதமான கஷ்டங்களையும் ஊடறுத்துச் செல்லுவீரென நம்புகிறேன்.”

அடுத்தபடியாகப் பின்வரும் தீர்மானம் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

“டக்டர் குமரப்பாவின் போதனைகளை, கருத்துக்களை நாம் சிந்திக்கின்ரேம். நமது நாட்டில் ஏற்படுத்த வேண்டிய காந்தீய—சர்வோதய தத்துவக் கருத்துக்களுக்கமைந்த சமுதாய அமைப்பு முறைகள் வளர வேலை செய்துவர வேண்டும் என்பதை இதய பூர்வமாக உணருகின்ரேம். இதற்காக இயன்ற வரையில் அலுப்புச் சலிப்பின்றி எல்லா விதமான கஷ்டங்களையும் சமாளிப்பதற்கான முயற்சிகளில் ஈ◐படுவதென்றும் தீர்மானிக்கின்ரேம்.”

இத் தீர்மானத்தின் பின் திரு. த. நல்லதம்பி பேசியதாவது:- நமது பிரார்த்தனை ஒரு வைபவமானது அல்ல. உள்ளத் துடிப்புடன் கூடியது. பன்னூற்றுக் கணக்கான மைல் தூரத்துக்கப்பால் இருக்கும் ஸ்ரீ குமரப்பாவின் ஆன்மாவை பிரார்த்தனை மூலம் இதயத்தால் எங்களுடன் சேர்த்துக் கொண்டோம். தன்னம்பிக்கை உள்ள அம் மகான் எங்கள் உள்ளங்களில் புகுந்து பரிசுத்தம் செய்கின்ருர். அவரது கருத்துக்களைச் சிந்திப்பதினல் எங்கள் ஆன்மாக்கள் பரிசுத்தமாகின்றன. நமது பிரார்த்தனை அவரது ஆன்மாவுக்கு உணவாகின்றது. அவரது நோய் குணமடைந்து தேகம் உரம் பெறுவதாகுக.

டக்டர் குமரப்பா குணமடைய வேண்டுமென்ற மௌனப் பிரார்த்தனையுடன் கூட்டம் நிறைவேறியது.

# தெய்வமே காத்தது!

வவனியாவுக்கு அருகில் நடைபெற்ற ரயில் விபத்திலே 25 பேராவது மாண்டிருக்கலாமென்று, அதில் பிரயாணம் செய்த கொக்குவிலைச் சேர்ந்த ஒருபிரயாணி கூறுகிருர். அவர் தெரிவித்ததாவது:-

இரண்டாம் வகுப்பு “பேர்த்” எடுக்க முயன்றேன் கிடைக்கவில்லை. அதனல் இரண்டாம் வகுப்பு டிக்கெட் மட்டும் எடுத்தேன். ஆனல் இரண்டாம் வகுப்புப் பெட்டியில் ஏருமல் 8 வது பெட்டியாக இருந்த 3-ம் வகுப்பில், என் நண்பருடன் இருந்து பேசிக்கொண்டுவந்தேன்.

திடீரென ஏதோ பூமியே சாய்வதுபோல உணர்ச்சி ஏற்பட்டது. கலங்கிவிட்டேன். “முருகா” என்று சொல்லிக் கம்பியைப் பிடித்துக்கொண்டேன். ஒன்றுமே புரியவில்லை. எதிரிலிருந்தவர்கள் அதிர்ச்சியில் என் மீது விழுந்தார்கள். என் தலை பின்புறம் பலகையில் பலமாக இடித்தது. அவ்வளவுதான். எங்களுக்கு முன்னிருந்த ஏழு பெட்டிகளும்நொறுங்கிவிட்டன இரண்டாவது வகுப்பில் நான் டிக்கெட்எடுத்தபடி பிரயாணம் செய்திருந்தால் என்கதி என்ன ஆகியிருக்குமோ? என் கெட்டித்தனத்தால் நான் தப்பவில்லை. தெய்வம்தான் காப்பாற்றியது, என்று உணர்ச்சியுடன் கூறுகிருர்.

விபத்து ஏற்பட்டதும்எங்கும் இருட்டுஒரே கூக்குரல். பிரமை பிடித்தவன் போல் ஆகிவிட்டேன். பெட்டிகள் சுக்குநூருகியிருந்த அலங்கோலத்தைப் பார்த்தபோது, குறைந்தது 25 பேராவது மாண்டிருக்கலாமென்று அஞ்சினேன். ஆனல் மாண்டவர்களை நான் நேரில் பார்க்கவில்லை. வவனியாவிலிருந்து 45 நிமிடத்தில் வந்த இராணுவத்தினர் பல உதவிகளைச் செய்தனர். இதற்கிடையில்கொள்ளைஅதிகம் நடந்தது.

இவ்விஷயமாகப் பொதுவானகொமிஷன்நியமித்துவிசாரணை நடத்தி, உண்மைகளை அறிந்து குற்றவாளிகளைப் பிடித்துத் தண்டிக்க வேண்டும் இன்றேல், இவ்வித விஷமம் மீண்டும் ஏற்படலாம் என்ருர்.

## இரத்தினக் கம்பளம்

பதுமன்

“என்ன! சோஷலிசம் கீஷலிசம் என்று எல்லாம் இந்தக் காலத்திற பேசுகிறீர்களே. ஏர் பிடித்து வேர்வை சிந்துகின்ற நாங்களே உலகம் தோன்றிய நாள் தொட்டு சோஷலிசம் என்ற பேச்சே இல்லாமல் அதனை வாழ்க்கையிற் கடைப்பிடித்து வருகிரேம்” என்று சொல்லிக் கொண்டே மதிப்புக்குரிய ஒரு பெரியார் கம்பளத்தில் வந்திருந்தார்.

பொங்கற் புதுநாளில் விருந்தினரை வரவேற்று உபசரிப்பதற்குப் பட்சணங்களுடனும் பழங்களுடனும் காத்துக் கொண்டிருந்த எனக்குப் பெரியாரின் நல் வருகை மிகுந்த மகிழ்ச்சியை ஊட்டியது.

“கொஞ்சம் விளக்கமாகக் கூறுங்கள்” என்று சொல்லி வெற்றிலைத் தட்டத்தை அவருக்கு முன்னல் தூக்கி வைத்தேன்.

“உழவன், உழைப்பால்தான் பெற்ற தானியவகைகளை உலக மக்களுக்குக் கொடுத்துத் தானும் அனுபவிக்கிருன். தான் ஒரு பங்கை எடுத்துக்கொண்டு மிகுதியைப் பிறருக்குக் கொடுக்கின்ருன். அதுதானே சோஷலிசம்” என்கிருர் அவர்.

“நீர் கூறுவது முழுவதும் சரி” என்று நான் தலையை அசைக்க முன்னர் உழவனின் பஞ்சசீலத்தைப்பற்றி அவர் பேச ஆரம்பித்தார். அதனை மற்ருெரு சமயம் வைத்துக் கொள்வோம் என்று கூறி நான் கதையை மாற்றிவிட்டேன்.

### மக்கள் பீதி

யாழ்ப்பாண மெயில்வண்டி வவனியாவில் விபத்துக்குள்ளான பின்னர் குருநாகலிலும் வேறு சில இடங்களிலும் ரயில் வண்டிகளைக் கவிழ்ப்பதற்கான சதி வேலைகள் நடைபெற்றிருக்கின்றன. இவற்றையெல்லாம் கேள்விப்பட்ட பின்னர் புகையிரதப் பிரயாணிகள் மிகுந்த பீதிக்குள்ளாகி வருகின்றனர். பகல் நேரங்களிற் கொழும்புக்குப் பிரயாணம் செய்வதையே அனேகர் இப்போது விரும்புகின்றனர். கொஞ்சம் காசு கையில் உள்ளவர்கள் கார்களை வாடகைக்கு அமர்த்தித் தங்கள் காரியத்தைப் பார்த்துவருகின்றனர். காரில்செல்வதில் எவ்வளவோ கஷ்டங்கள் உண்டு. இவற்றை எல்லாம் சகித்துக்கொண்டு உயிரைக் காப்பாற்றவேண்டிய நிர்ப்பந்தம் வடபகுதிப் பிரயாணிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

புகையிரதப்பகுதிப் பெருந்தலைவர் திரு. ரம்போலா தெரிவிப்பதைக் கேட்டால் பிரயாணிகளிடையே எவ்வித பயமும் ஏற்படவில்லை யென்றே கருதவேண்டியிருக்கிறது. சதிவேலைகளுக்குப்பின்னரும் வடபகுதியிலிருந்தும் கிழக்கு மாகாணத்திலிருந்தும் கொழும்புக்குப் பிரயாணம் செய்பவர்களின் தொகை குறையவில்லையென அவர் சமாதானம் தெரிவிக்கின்ருர்.

### பக்தர்கள் தவிப்பு

புகையிரதப் பிரயாணிகளின் பீதியைப்பற்றிக் குறிப்பிடும்போது சிதம்பரம் செல்ல விரும்பிய பக்தர்கள் தவியாய்த் தவித்ததைக் குறிப்பிடாதிருக்க முடியவில்லை. மார்கழி மாதத்திலே தில்லைச் சிதம்பரத்தில் நடைபெறும் ஆருத்திரா தரிசனத்துக்காகயாழ்ப்பாணத்திலிருந்து நூற்றுக் கணக்கானேர் செல்வது வழக்கம். இம்முறை இவர்களுக்குப் பிரயாணச்சீட்டுப் போதியளவு கிடைக்கவில்லை. அனுமதிக்கப்பட்ட பிரயாணச் சீட்டுகளை இந்தியாவிலே கல்விபயிலும் மாணவர்கள் ஏதோ ஒருவிதமாகப் பெற்றுக் கொண்டனர். இது காரணமாகப் பக்தர்கள் பலரின் சிதம்பரப் பிரயாணத்துக்குத் தடையேற்படலாயிற்று. புகையிரதப்பகுதியினர் இதனை முன்னரே அறிந்து தகுந்த வசதிகளைச் செய்திருப்பின் யாத்திரிகர்களின் தவிப்பைத் தவிர்த்திருந்திருக்கலாம்.

### ஈக்கள் படையெடுப்பு!

ஓர் அடியில் ஏழுபேரை நிலத்தோடுசாய்த்த வீராதிவீரனைப் பற்றிய கதையைப் பலர் மாணவர்களாக இருந்தபோது படித்திருப்பார்கள். நிலத்திற் சிந்திய பண்டத்தில் ஈக்கள் ‘நொய்’ எனச் சத்தமிட்டு மொய்த்துக் கொண்டன. இதனைப் பார்த்துக்கொண்டிருந்த ஆசாமி ஒருவர் நிலத்தில் பளார் என அடித்தார். என்ன ஆச்சரியம்! ஏழு ஈக்கள் அப்படியே சட்னியாயின. மறுகணம் ‘ஓர் அடியில் ஏழுபேரைத் தொலைத்துக் கட்டிவிட்டேன்’ என முழங்கித்தள்ளிக் கொண்டு தனது வீரச் செயலை நாடறியச் செய்துவந்தான் அந்த வீரன்!

இம்மாதிரிப் பயில்வான்களின் சேவை இப்போது ஆஸ்பத்திரிக்கு அவசியம் வேண்டியிருக்கிறது. வல்வெட்டித்துறையிலுள்ள அரசினர் ஆஸ்பத்திரியில்ஈக்களின்படையெடுப்பைத் தாங்கமுடியாமல் நோயாளரும் பிறரும் தவிக்கின்றனர். படுத்தபடுக்கையிற் கிடக்கும்நோயாளிகள் அத்தனைபேரும்வேப்பிலைக் கொப்பைக் கையில்வைத்து கொண்டுஈக்களுக்குச் ‘சாமரம்’ வீசுகின்றனராம். ஈக்களின் படையெடுப்புக்கு முற்றுப்புள்ளி வைப்பது அவ்வளவு இலேசான காரியமல்ல. எனினும் அவற்றின் வேகத்தையும் படைப்பலத்தையும் குறைப்பதில் ஆஸ்பத்திரி அதிகாரிகளும் ஊழியர்களும் அக்கறை காட்ட வேண்டியது அவசியமாகும்.

### புத்தம் புதிய யோசனை

ஆங்கிலம் உலக மொழியாக அமைவதற்குப் பொருத்தமற்ற ஒரு மொழியென கண்டிச் சீமையிலிருந்து ஒரு குரல் எழுந்துள்ளது. ட்றினிற்றிக் கல்லூரியில் சிங்களமும் சமஸ்கிருதமும் பயிற்றும் ஆசிரியர் சாள்ஸ் டி’ சில்வா தான் இந்த உண்மையைக் கண்டுபிடித்திருக்கிருர். பின்னர் வேறு எந்த மொழி உலக மொழியாக அமைவதற்கு ஏற்றதென்று அவரைக் கேட்டால், அவர் சொல்லுகின்ருர்: 2000 ஆண்டுகளாக இலக்கிய வளம் பெற்று வளர்ந்து வரும் சிங்களம் தான் உகந்தது என்று. முட்டைக்குள் இருக்கும் குஞ்சு அந்த முட்டைதான் உலகம் என எண்ணுவதுண்டு. அதே போல இந்தச் சின்னஞ் சிறு இலங்கையில் உள்ளவர்களும் தங்கள் மொழிதான் பலவகையிலும் செம்மையுற்ற மொழியென எண்ணுகின்றனர். இதிற் பிசகு எதுவுமில்லை. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சுதானே!

### புதிய 5 மந்திரிகள்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் அபேட்சகர்களாக வந்துள்ள 5 மந்திரிகளை (ஆர். ஜி. சேனநாயக்கா, ஜிம் முனசிங்க, சி. ஏ. எஸ். மரிக்கார், எம். மெடிவாக்கே ஹென்றி அப்பயவிக்கிரம) பிரதமர் திரு. தஹநாயக்கா பதவி நீக்கம் செய்துவிட்டு, பின்வருவோரை அப்பதவிகளுக்கு நியமித்துள்ளார்: ஆர். ஈ. ஜெயதிலக்கா, (போக்கு வரத்து, பொது வேலை), சேர்ரஸிக் பாரீத் (வர்த்தகம், உணவு) ஜே. டி. வீரசேகரா (கைத்தொழில், மீன்பிடி), கேட் முதலியார் எம். எஸ். காரியப்பர் (தபால், தகவல், கலாச்சாரம்), எல். ஜெயசுந்தர (தலதாபனம், வீடமைப்பு).

### குமுதமான வேலை

சமீபத்தில் தென் தமிழ் நாட்டிலிருந்து எமக்கு வந்து சேர்ந்த மாத மும்மாரி பெய்யும் பத்திரிகை ஒன்றிலே ‘தாய் மகளுக்குக் கட்டிய தாலி’ பற்றிய திரைச் சித்திரத்தின் விமர்சனம் ஒரே சொல்லில் அமைந்திருந்தது. ‘வெட்கக்கேடு’ எனக் குறிப்பிடப்பட்டு, அந்தப் பக்கம் வெறுமனே விடப்பட்டிருந்தது. சினிமா ரசிகர்கள் இதனைப் பார்த்துவிட்டு ‘அவ்வளவு பாடாவாரிப்படமா இது’ என்று சொல்வதுடன் திருப்தியடைந்தனர். மறுநாட்காலை, பத்திரிகை விற்பனையாளர் ஒருவரிடம் அதே பத்திரிகை இதழை வாங்கித் தட்டிப் பார்த்தபோது அதே இடத்திற் ‘கல்யாணப் பெண்’ விமர்சனம் காட்சி தந்தது! அதன் அருகே சரோஜாதேவி தோளிற் பந்துடன் ஒரு ‘போஸ்’ கொடுத்த வண்ணம் நிற்பதைப் பார்த்தபோது பதுமனுக்குச் சிறிது மயக்கம் ஏற்பட்டது. ‘குமுதமான’ இவ் வேலை எதற்காக நடந்ததோ?

# பாகுபாடற்ற இலங்கையை உருவாக்குவதே

## அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் இலட்சியம்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தனது கொள்கைகளையும் சட்டங்களையும் விளக்கி விடுத்துள்ள அறிக்கையின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

சாதி, மொழி, சமயம் என்னும் வேறுபாடுள்ள மக்கட் தொகுதியினர், பூரண சம அந்தஸ்தோடும் சமாதானத்துடனும், ஒருவருக்கொருவர் நேசபான்மையுடனும் வாழுகின்ற ஓர் இலங்கையை உருவாக்குவதை இலட்சியமாகக் கொண்டு அதற்கர்க உழைத்தல்.

### தமிழர் ஒற்றுமை

1954ஆம் ஆண்டின் பின் தமிழரது நல்வாழ்வுக்குப் பகையான பல சக்திகள் பகிரங்கமாகத் தலைவிரித்தாடத் தொடங்கின; எனவே இச்சூழ்நிலையில் தமிழர் அனைவரையும் ஒன்றுபடுத்தும் முன்னணி ஒன்று ஏற்படுத்துவது வரலாற்றின் ஏடுகளில் என்றும் காணுத அளவிற்கு அவசியமாயிற்று. 1956ஆம் ஆண்டின் பொதுத் தேர்தல்களின் முன்னும் அதன் பின்னும் ஐக்கிய முன்னணி ஒன்றை உருவாக்குதற்கு காங்கிரஸ் முயன்றது. தமிழ் பேசும்மக்களது வாழ்வையே நாசமாக்கும் சக்திகள் சென்ற இரண்டு மூன்று ஆண்டுகளாக வலுவடைந்துள்ளது போல் என்றும் இருக்கவில்லை. எனவே காங்கிரஸ் மறுபடியும், மக்கள் ஒன்றுபடவேண்டுமென மன்ருடுவதோடு உறுதியான் ஒரு ஒற்றுமை முன்னணியை ஏற்படுத்தி, அனைவரது சம்மதத்தையும் பெற்ற சில கொள்கைகளுக்காகச் செயலாற்றும் விஷயத்தில் பூரணமான ஒத்துழைப்பைத் தந்து இயங்குவதாய் வாக்களிக்கின்றது. பெருமையான தன்மானமுள்ள மக்களாய் நிரந்தர நல்வாழ்வைப் பெறுதற்கும், இதுகாறும் நாம் போற்றிப் பூசித்து வந்த உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் இவ்வொற்றுமை அதிக முக்கியமானதாயிருக்கின்றது.

தமிழரது அடிப்படை உரிமைகளையும் இஷ்ட லட்சியங்களையும் பறிக்கும் சட்டங்களை நீடித்துஆக்கவேண்டாம்என்று சிங்கள மக்களையும் அவர்களது அரசாங்கத்தையும் கோருவது.

ஒற்றைஆட்சி முறையின் அடிப்படையில் தமிழ்பேசும் மக்களது பிரச்சினைகளைத் தீர்க்க முடியாதாயின் சமஷ்டி அரசியற் திட்டத்தின் அடிப்படையில் அவை ஒருபோதும்தீர்க்கப்படமாட்டா என்பதை காங்கிரஸ் திடமாகவும் மனப்பூர்வமாகவும் நம்புகின்றது. சமஷ்டி அரசியல் இலங்கைக்குக் கூடாதென்பதையும், தமிழருக்குக் கேடானதென்பதையும் காங்கிரஸ் வலியுறுத்திக் கூறுகின்றது.

### குடியேற்றம்

அரசாங்கம் அண்மையில் கடைப்பிடித்த வெளிப்படையான அடக்குமுறையும், பாரபட்சமும் நிரம்பிய கொள்கைகளை மனதிற்கொண்டு, தமிழரது பரம்பரையான தாயகத்தில் அரசாங்கப்பண உதவியுடன், சிங்களவரைக் குடியேற்றி வசிக்கச்செய்ய, அரசாங்கத்தால் ஏற்படுத்தப்படும் எந்தக் குடியேற்றத் திட்டத்தையும் காங்கிரஸ் தீவிரமாக எதிர்க்கும்.

### அரசியல் திட்டம்

மேல்வரும் உரிமைகளை வெளிப்படையாக வழங்குகின்ற பிரிவுகளடங்கிய ஓர் அரசியல் திட்டத்தை வகுத்தளிக்க ஆவன செய்வதாக காங்கிரஸ் உறுதி கூறுகின்றது.

1. சிறுபான்மையினர் மீது ஆதிக்கம் செலுத்தாத முறையில் எல்லாப் பிரஜைகளுக்கும் இனத்தினருக்கும் சம அந்தஸ்தும் சம வசதிகளும் அளித்தல்.

2. நாடு முழுவதிலும் சிங்களம், தமிழ் என்னும் இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்துக் கொடுப்பதோடு சுய மொழிகள் சிறந்த முறையில் உபயோகித்தற்கேற்றதாகும்வரை ஆங்கில மொழியை உபயோகிக்க வசதியளித்தல்.

3. இலங்கையைத் தனது தாயகமாக்கிக்கொண்ட அனைவருக்கும் பிரஜா உரிமை வழங்குவதோடு, இலங்கைக் குடியேற்ற வெளியேற்றச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு தொடர்ந்து இலங்கையில் ஐந்து வருடங்கள் வசித்தவராய், பிரஜா உரிமை கோரி நிற்பவருக்கும் அவ்வுரிமை வழங்குதல்.

4. ஒரு இனத்தின் அடிப்படை உரிமைகளைப் பாதிக்கின்ற சட்டம் ஒரு அரசாங்கத்தால் ஆக்கப்படும்போது அச் செய்கையை ஐக்கிய தேசஸ்தாபனத்தின் தீர்ப்புக்குச் சமர்ப்பிக்கும் உரிமையோடு,

5. சீராக வரையறுக்கப்பட்டதும் ஒன்ருேடொன்று இணைந்து நிற்பதுமாகிய பிரதேசங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களது சுய நிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்வதோடு, பொதுசன வாக்கெடுப்பின் ஆதாரத்துடன் தமிழ் பேசும் மக்கள் அவ்வுரிமையை உபயோகிக்கலாம் என்பதையும் ஏற்றுக்கொள்ளுதல்.

### கல்வி

1. ஒவ்வொரு தமிழ் பேசும் குழந்தைக்கும், அதன் பெற்ருேர் நாட்டின் எந்தப் பகுதியில் வசித்தாலும், அரிச்சுவடி தொடங்கிப் பல்கலைக்கழகம் வரை கல்வியூட்டப்படுவதற்கு உறுதியும்,

2. இலங்கைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்பேசும் மக்கள் சகல உரிமைகளையும் பெறுவார்கள் என்ற உறுதியும்,

3 தமிழ் பேசப்படும் பிரதேசத்தில் பூரண வசதிகளுள்ள பிறிதொரு பல்கலைக்கழகம் நிறுவப்படும் என்ற உறுதியும்.

அரசாங்கத்தின் ஆதிக்கத்திலடங்கிய ஒரு நோக்குள்ள கல்வித் திட்டத்தையும், பல்வேறு மதத்தினர் நடாத்தும் கல்விக்கூடங்களை அரசாங்கம் ஏற்றுத் தாங்கள் நடாத்தும் திட்டத்தையும் காங்கிரஸ் எதிர்க்கின்றது.

### சமுதாய, பொருளாதாரத் திட்டங்கள்

1. **வீடமைப்பு:** சன நெருக்கடியான இடங்களில் வசிப்பவர்களுக்கும், பிரதானமாகக் கட்டிட நெருக்கமுள்ள இடங்களில் பணவசதியின்மையால் நெருக்கமாகவும், அசுத்தத்தின் மத்தியிலும் வசிக்கின்றவர்களுக்கும், குறைந்த செலவில் வீட்டு வசதியைப் பெறும் திட்டமொன்றை ஏற்படுத்தல்.

2. **விவசாயம்: காணி:** முருகைக் கற்கள் படர்ந்த அல்லது உவர்த்தன்மையுள்ள நிலங்களனைத்தையும் சாகுபடிக்கேற்றவைகளாக்கி அவைகளைத் தோட்டங்களாக்குதல்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குடியேற்றும் நோக்கத்தோடு மட்டுமன்றி பெருமளவில் கூட்டுறவுப்பண்ணைகளை நிறுவுவதற்கும், காணி வசதிகளை அதிகரிப்பதோடு நவீன விவசாயக் கருவிகளைக் கொடுத்துதவி வியாபாரத்துக்கேற்ற வசதிகளையும் செய்து கொடுத்தல்.

3. **கடல் தொழில்:** கடல் தொழில் செய்வதற்கேற்ற கடற்பரப்புக்களை விஸ்தரிப்பதற்கும், கடல்தொழில் வருவாயை அதிகப்படுத்தவும், தொழில்முறைகளை விருத்திசெய்து நவீன முறைகளைக் கையாளுதல்.

4. **கைத்தொழில்கள்:** சீமேந்துத் தொழிற்சாலையின் உற்பத்தியை இரண்டு, மூன்று மடங்காக்குதல்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒரு சீனித் தொழிற்சாலை, நெசவுத் தொழிற்சாலை, உரத் தொழிற்சாலை என்னும் இவைகளை நிறுவுதல்.

இதுகாறும் கைவிடப்பட்டதாகவோ அல்லது ஒதுக்கி வைக்கப்பட்டதாகவோ, பரந்தன் இரசாயனத்தொழிற்சாலையோடு இணைந்து இயங்க இருந்த திட்டங்களைத் திரும்பவும் ஏற்படுத்தல்.

5. **சிறு இயந்திரச்சாலைகள்** தனியார் ஏற்று நடத்த வசதியளிக்கும் நோக்கத்தோடு பல சிறு இயந்திரச்சாலைகளை அரசாங்கப் பணத்தில் நிறுவுதல்

6. **துறைமுகங்கள்:** வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள துறைமுகங்கள் அனைத்தையும் உள்நாட்டு வியாபாரத்துக்கு ஏற்றதாக அபிவிருத்தி செய்தல், திருக்கோணமலைத் துறைமுகத்தையும், வடமாகாணத்தில் ஒரு துறைமுகத்தையும் சர்வதேச வர்த்தகத்திற்கு ஏற்றதாக அபிவிருத்திசெய்தல்.





உத்தரவாதமுள்ள

ஜெயிஸ் பிளூயிட்

நெருப்புத் தண்ணீரையே

வாங்குங்கள்.

'ஜெயிஸ்'

— மார்க்கையும் —

'உதய சூரியன்'

அடையாளத்தையும் தாங்கிய

லேபிளையும் மூடியையுமுடைய

ஜெயிஸ் பிளூயிட்

நெருப்புத் தண்ணீரே சிறந்தது.


# "நாட்டில் ஒழுங்கை நிலை நாட்டுவதே தலையாய கடமை"

— டட்லி சேனநாயக்கா

இந்த நாட்டில் பிரிவு மனப்பான்மை கொண்டோர் ஒழுங்கீனத்தைத் தலை தூக்கச் செய்து,மக்களைத்தூண்டிவிட்டு, நாட்டின் ஒற்றுமையை சீர்குலைத்துவிட்டனர். எனவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலையாய கடன், நாட்டில் ஒழுங்கை நிலைநிறுத்தி, நாட்டின் ஆக்க வேலைகளில் ஈடுபடுவதே,எனக் கட்சியின் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா ஐ. தே. க. தேர்தல் விஞ்ஞாபனத்தின் முகவுரையில் கூறியுள்ளார்.

ஐ. தே. க. கீழ்வரும் உறுதிகளை நாட்டிற்குஅளித்துள்ளது.

1. **நிலையான அரசாங்கம்:** நாட்டில், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தி, ஒரு நிலையான அரசாங்கத்தை ஏற்படுத்தல். நீதித்துறை அட்டர்ணி ஜெனரல் பிரிவு, அரசாங்க சேவை கொமிஷன் ஆகியவை அரசியல் தலையீடின்றி நடக்க வழியமைத்தல்.

நாட்டை ஒரு குடியரசாக்கவும், குறைந்த சமூகத்தினரின் அடிப்படை உரிமைகளை அளிக்கவும், விரைவில் நாட்டின் அரசியலமைப்பை மாற்றியமைத்தல்.

2. **நிர்வாகச் சீர்திருத்தம்:** நாட்டின் தேவைக்கேற்ப நாட்டின் முன்னேற்றத்தைப் பேணும் வழியில் நிர்வாகத் துறைகளை மாற்றியமைத்தல்.

3. **நாட்டின் முன்னேற்றம்:** விவசாயம், மீன்பிடிப்பு, குடிசைத் தொழில், பெரும் தொழில்கள் ஆகியவற்றை முன்னேற்றி, உதவிபெற வழிசெய்தல்.

4. **பிறநாட்டவருக்குச் சொந்தமான தோட்டங்கள்:** நாட்டின் வெளிநாட்டு வருமானத்தின் பெருமளவை உற்பத்தி செய்யும், பிறநாட்டவருக்குச்சொந்தமான தேயிலை, றப்பர் தோட்டங்களைத் தேசியமயமாக்கல், நாட்டின் பொருளாதாரத்தை மிகவும் பாதிக்கும்.

5. **தேசியமய சேவைகள்:** இப்போது தேசியமயமாக்கப்பட்டுள்ள சேவைகள் மீண்டும் தனிப்பட்டோரிடம் சேர்க்கப்படமாட்டா. சேவைகள் நன்கு செயலாற்ற வழியமைக்கப்படும்.

6. **தொழிற்கொள்கை:** தொழிலாளருக்கும், முதலாளிகளுக்கும் நெருங்கிய உறவையேற்படுத்தல். அரசியல் பற்றற்ற தொழிற்சங்கங்கள் வளர்ச்சிக்கும், உடனடியாகத் தொழில் தகராறுகள் தீர்வதற்கும் ஆவன செய்தல்.தொழிலாளருக்குக் கொடுக்கப்படவேண்டிய குறைந்த அளவு வருவாயை நிர்ணயித்தல்.

7. **வேலையில்லாப் பிரச்சினை:** ஐ. தே. கட்சியின் பொருளாதாரத் திட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப் பட்ட பின்பு பலருக்கு வேலைகொடுக்கச் சந்தர்ப்பமேற்படும். கிராமப்பகுதிகளில் குடிசைத் தொழில்கள் வளர ஏற்பாடு செய்தல். தொழிற்கல்விக்கு வழி செய்தல்.

8. **வாழ்க்கைச் செலவு:** பொருளாதாரதிட்டத்தின் மூலம் உற்பத்தியைப் பெருக்கி,வியாபார வசதிகளைப் பெருக்கி, பொருள்களின் விலையைக் குறைத்தல்.

9. **சமூகசேவைகள்:** வைத்திய வசதிகளை விரிவுபடுத்தல்.

10. **கல்வி:** பள்ளிக்கூடங்களை அதிகரித்து, தொழிற்கல்வி பயில வழியேற்படுத்தல். கிராமப்பகுதி பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வுக்கூடங்களை யேற்படுத்தல்.

ஒவ்வொரு குழந்தைக்கும் மதபோதனை அவசியமாகையால், மதப்பாடசாலைகள் தொடர்ந்து அரசாங்க உதவியுடன் நடைபெறும். மதப்பாடசாலைகளை அரசாங்கம் கையேற்று நடத்தாது. ஆனல் தக்கபாடசாலை வசதிகள் ஏற்பட்டபின்பு, தங்கள் மதக் குழந்தைகளையொட்டியே இப்பள்ளிக்கூடங்களுக்கு உதவியளிக்கப்படும்.

உயர்தரக் கல்விக்காக மேலும் பல பல்கலைக்கழகங்களையேற்படுத்தி, பயிற்சிபெறும் ஆசிரியர்களை அதிகரித்தல்.

11. **விளையாட்டு:** விளையாட்டு வசதிகளை அதிகரித்தல்.

12. **மதமும் கலாச்சாரமும்:** எல்லோருக்கும் மத சுதந்திரமளித்தல். இலங்கையின் கலாச்சார, மதஅடிப்படையான கலைகளைப் புத்துயிர்பெறச் செய்தல்.

13. **மொழி:** ஆங்கிலத்திற்குப் பதிலாக சிங்களத்தை நாட்டின் நிர்வாக மொழியாக்கல்.

[5ஆம் பக்கம் பார்க்க]

## புதிய தேர்தல் தொகுதிகள்:

# மத்திய மாகாணம்

இலங்கையின் வேறெந்த மாகாணத்திலும் இல்லாதவாறு மத்திய மாகாணத்திலே குடிசனத் தொகைக்கும் வாக்காளர் தொகைக்குமிடையே பெரிய வித்தியாசம் காணப்படுகின்றது. 1958-ம் ஆண்டு குடிசன மதிப்பிற்கிணங்க இங்குள்ளோரின் தொகை 1,522,600. எனினும் வாக்காளர் 1,000,700 பேர் தான் உளர். இவ்விரு தொகைகளுக்குமிடையே இப் பெரும் வித்தியாசம் ஏற்படக் காரணம், இப்பகுதியில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் தொழிலாளராக வேலை செய்யும் சுமார் 600,000 லட்சம் இந்திய வம்சாவளியினரான தமிழர், புதிய பிரஜா உரிமை மசோதாவின் விளைவாகத் தம் வாக்குரிமையை இழந்ததே. சில தொகுதிகளில் இவர்கள் அதிகமாக வசிப்பதன் காரணமாக, மாகாண சராசரி விகிதமான 43,508 பேருக்கு ஒரு தொகுதி என்ற அடிப்படையில் நிர்ணயம் செய்யமுடியாமற் போயிற்று. அந்த அடிப்படையிலே தொகுதிகளை அமைப்பதாக இருந்தால், நுவரெலியா மாவட்டம் மூன்று தொகுதிகளாக மட்டுமே பிரிப்பது சாத்தியமாகும். அப்படிச் செய்தால் தொகுதிகளின் எல்லைகள் வெகு தூரத்தில் உள்ள பல பிரதேசங்களைத் தன்னுள்ளடக்க வேண்டியிருக்கும். இது செயல் முறையிலே பல விதமான சிக்கல்களை ஏற்படுத்தும். எனவே, நுவரெலியா மாவட்டத்தில் ஒரு தொகுதியின் வாக்காளர் சராசரி 32,000 ஆகக் குறைக்கப்பட்டிருக்கின்றது..

வடக்கில் தென் மத்திய மாகாணமும், கிழக்கில் ஊவா மாகாணமும், தெற்கில் சப்பிரகமுவா மாகாணமும், மேற்கில் மேல் மாகாணமும், மத்திய மாகாணத்தின் எல்லைகளாகும். இதனுள் மாத்தளை, கண்டி, நுவரெலியா ஆகிய நிர்வாகப் பிரிவுகள் அடங்கியுள்ளன.

இப் பகுதியில் குடிசனத் தொகைக்கேற்ப 23 பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான 21 தனிப் பிரதிநிதிகள் தொகுதிகளும், இரு பிரதிநிதிகளுக்கான ஒரு தொகுதியும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அக்குரணைத் தொகுதியில் அதிகமாக வாழும் சோனகர் ஒரு பிரதிநிதியைத் தெரிவு செய்வதற்காக இரு பிரதிநிதிகள் தொகுதியாக இது அமைகின்றது.

புதிய அமைப்பின் கீழ் மாத்தளை மாவட்டத்தில் 4 தொகுதிகளும், கண்டி மாவட்டத்தில் 14 தொகுதிகளும், நுவரெலியா மாவட்டத்தில் 4 தொகுதிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவற்றின் விபரம் வருமாறு:

### மாத்தளை மாவட்டம்

1953-ம் ஆண்டுக்குப் பின்னர் மாத்தளை மாவட்டத்திலிருந்தும் 169 சதுர மைல், புதிதாக ஏற்படுத்தப்பட்ட பொலனறுவை மாவட்டத்தில் சேர்க்கப்பட்டு விட்டதால், மாத்தளை மாவட்டத்தின் பரப்பு குறைக்கப்பட்டாயிற்று.

ஆங்காங்கே, அடிக்கடி மாறுபடும் இயற்கையமைப்பின் விளைவாக இங்கு பிரயாண வசதிகள் வெவ்வேறு இடங்களில் மாறுபடுகின்றன.

முன்பிருந்த தம்புல்ல தொகுதி மிகவும் பரந்த ஒரு பிரதேசத்தை வியாபித்திருந்தமையால் அத்தொகுதி இப்பொழுது, தம்புல்ல, லக்கல ஆகிய இரு தொகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றது. லக்கல ஒரு முன்னேற்றமடையாத தொகுதி. எனவே, இத்தொகுதி தனியாகப் பிரிக்கப்பட்டிருப்பதால், இங்கு தெரிவு செய்யப்படும் பிரதிநிதி இப்பகுதியின் முன்னேற்றத்திற்கு உழைப்பார் என நம்பப்படுகின்றது.

### தொகுதி இல. 33 தம்புல்ல

வடக்கில் வடமத்திய மாகாணமும், கிழக்கில் தென்மத்திய மாகாணம், மாத்தளை கீழ்ப் பிரிவு, மாத்தளை வடக்கு, தெற்கு ஆகியவற்றின் எஞ்சிய பாகங்கள், தெற்கில் மாத்தளைத் தெற்குப் பிரிவு, மேற்கில் வடமேல் மாகாணம், வட மத்திய மாகாணம் ஆகியவை இதன் எல்லைகளாக அமைகின்றன.

உடுகொட உடசியப்பற்று கிராம சங்க வட்டாரம், உடுகொட பல்லேசியப்பற்று கிராம சங்க வட்டாரம், கந்தப்பளகோரலை கிராம சங்க வட்டாரம், வகபனகா பல்லேசியாப் பற்று கிராமசங்க வட்டாரம் இனமலுவ கோரலை கிராம சங்க வட்டாரம், ஆகிய பிரதேசங்கள் இத் தொகுதியின் பிரிவுகளாகும்.

இங்கு வாழும் 53,000 மக்களுள் 50,400 பேர் வாக்காளர். இங்கே மேல் நாட்டுச் சிங்களவர் 74.7 சத விகிதமும், கரையோரப் பகுதிச் சிங்களவர் 11.2 சத விகிதமும், சோனகர் 5.3 சத விகிதமும், இலங்கைத் தமிழர் 2.9 சத விகிதமும் ஏனையோர் (இந்திய வம்சாவளியினர் உட்பட) 5.9 சத விகிதமும் வசிக்கின்றனர். இவர்களில் 81.9 சத விகிதமானோர் பௌத்தர்கள்; 7.0சத விகிதமானோர் இந்துக்கள்; 6.4 சத விகிதமானோர் முஸ்லிம்கள்; 4.5 சத விகிதமானோர் கிறிஸ்தவர்கள்.

### தொகுதி இல: 34 லக்கல

வடக்கில் மாத்தளை வடக்குப் பிரிவு, தென்மத்திய மாகாணம் ஆகியவற்றின் எஞ்சிய பாகங்களும், கிழக்கில் கிழக்கு மாகாணமும் ஊவா மாகாணமும், தெற்கில் கண்டிப் பிரிவும், மாத்தளை கிழக்கின் ஒரு பகுதியும், மேற்கில் மாத்தளை வடக்கு, தெற்குப் பிரிவுகளின் எஞ்சிய பாகங்களும், இதன் எல்லைகளாகும். அம்பன்கங்கை, கோரலை, லக்கல உடசியப்பற்று, லக்கல பல்லேசியப்பற்று, கங்கல உடசியப்பற்று, கங்கல பல்லேசியப் பற்று, வகபனகா உடசியப் பற்று ஆகிய கிராமசங்க வட்டாரங்கள் லக்கல தொகுதியின் பிரிவுகள்.

இங்குவாழும் மக்கள் தொகை 32,800, வாக்காளர் தொகை 24,200. இவர்களில் 63.1 சதவிகிதம் மேல்நாட்டுச் சிங்களவரும் 5.1 சதவிகிதம் கரையோரப்பகுதிச் சிங்களவரும், 4.1 சத விகிதம் இலங்கைத் தமிழரும் 0.7 சதவிகிதம் சோனகரும் 27.0 சத விகிதம் பிறருமாவர். 67.4 சதவிகிதம் பௌத்தர்களும், 30.5 சத விகிதம் இந்துக்களும், 1.1 சத விகிதம் கிறிஸ்தவரும், இங்கு வசிக்கின்றனர்.

### தொகுதி இல: 35 மாத்தளை

மாத்தளைத்தொகுதியின் எல்லைகள்: வடக்கில், மாத்தளை வடக்குப் பிரிவு, கிழக்கில், மாத்தளைகிழக்குப்பிரிவும், மாத்தளை தெற்கின் ஒருபகுதியும், தெற்கில் மாத்தளைத் தெற்கின் எஞ்சிய பகுதிகள், மேற்கில், வடமேல் மாகாணம்.

கம்பஹாசியப்பற்று, அஸ்கிரி பல்லேசியப்பற்று, அஸ்கிரி உடசியப் பற்று ஆகிய கிராம சங்க வட்டாரங்களும், கோஹோன்சியப்பற்று கிராம சங்கத்தின் ஒருபிரிவு ஆகியவை இத்தொகுதியின் பகுதிகள்.

இங்கு வாழும் 59,500 பேரில் 50,400 பேர் வாக்காளர். இவர்களில் மேல் நாட்டுச் சிங்களவர் 50.0 சத விகிதமும், கரையோரப்பகுதிச் சிங்களவர் 15.8 சத விகிதமும், இலங்கைத் தமிழர் 7.6 சத விகிதமும், சோனகர் 9.4 சதவிகிதமும், மற்றவர்கள் 17.2 சத விகிதமும் ஆவர். 65.2 சதவிகிதம் பௌத்தர்களும், 18.6 சதவிகிதம் இந்துக்களும், 11.2 சதவிகிதம் முஸ்லிம்களும் 4.8 சத விகிதம் கிறிஸ்தவரும் இங்கு வாழ்கின்றனர்.

### தொகுதி இல: 36 ரத்தொட்டை

எல்லைகள்: வடக்கில்: மாத்தளை தெற்கு, மாத்தளை, கிழக்குப்பிரிவுகளின் எஞ்சிய பாகங்கள். கிழக்கில்: மாத்தளை கிழக்கு, கண்டிப்பிரிவுகள். தெற்கில்: கண்டிப்பிரிவு. மேற்கில்:கண்டி மாவட்டமும், வடமேற்கு மாகாணமும்.

கோஹோன்சிய கிராமசங்கத்தின் ஒரு பிரிவும், மாத்தளை மெதசியப்பற்று, மாத்தளை உடசியற்பற்று, மாத்தளை பல்லோசியப்பற்று ஆகிய கிராம சங்கங்களின் வட்டாரங்களும் ரத்தொட்டைபட்டினசபைவட்டாரமும் இதன் பிரிவுகளாகும்.

இங்கு வாழும் மக்கள் தொகை 77,300; வாக்காளர் தொகை: 51,400. இவர்களில் 43.5 சத விகிதம் மேல்நாட்டுச் சிங்களவரும், 7.8 சத விகிதம் கரையோரப்பகுதிச் சிங்களவரும், 1.8 சதவிகிதம் இலங்கைத் தமிழரும், 5.2 சத விகிதம் சோனகரும், 35.7 சத விகிதம் பிறரும் வசிக்கின்றனர். இவர்களில் 57.1 சத விகிதம் பௌத்தர்களும், 33.8 சதவிகிதம் இந்துக்களும், 6.1 சதவிகிதம் முஸ்லிம்களும், 2.9 சத விகிதம் கிறிஸ்தவரும் இருக்கின்றனர்.

### கண்டி மாவட்டம்:

இலங்கையில் முன்னேற்றமான,போக்குவரத்துவசதிகள் நிறைந்த பகுதிகளில் கண்டி மாவட்டமும் ஒன்ருகும். இலங்கைச் சோனகருக்குப் பிரதிநிதித்துவம்கொடுக்கும் வகையில் அக்குறணை என்ற இரு பிரதிநிதிகள் தொகுதி யொன்றும் இங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. பழைய கலகாத் தொகுதியின் பரப்புக் குறைக்கப்பட்டு, ஹேவாஹெட்ட என்ற பெயரைப் பெறுகின்றது.

### தொகுதி இல: 37 வத்தேகம

எல்லைகள்: வடக்கில் பாததும்பற, அரிஸ்பத்து பிரிவுகளும், மாத்தளை மாவட்டமும். கிழக்கில், உட தும்பற பிரிவு, தெற்கில் தும்பறையின் எஞ்சிய பிரிவுகள், கண்டி பாத்த ஹேவாஹெட்ட பிரிவு. மேற்கில் அரிஸ்பத்து பிரிவு சேர்ந்துள்ளபகுதிகள்: பள்ளே கம்பஹா, உட கம்பஹா, பலிஸ்பற்று மேற்கு ஆகிய கிராம சங்கப் பிரிவுகள், வத்தேகம நகரசபை வட்டாரம்.

இத்தொகுதியில் வாழும் 71,500 பேரில் 49,700 வாக்காளர் உளர். மொத்த குடிசனத் தொகையில் 50·8 சத விகிதம் மேல்நாட்டுச் சிங்களவரும், 7·8 சத விகிதம் கரையோரப்பகுதிச் சிங்களவரும், இலங்கைத் தமிழர் 2·0 சத விகிதமும், சோனகர் 8·4 சத விகிதமும், ஏனையோர் 31·0 சத விகிதமும் வாழ்கின்றனர். இவர்களில் 58·7 சத விகிதம் பௌத்தர்களும், 28·1 சத விகிதம் இந்துக்களும், 10·0 சத விகிதம் முஸ்லிம்களும், கிறிஸ்தவர் 3·1 சதவிகிதமும் இருக்கின்றனர்.

### தொகுதி இல: 38 அக்குறணை

இத்தொகுதி இரு பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும்.

எல்லைகள்: வடக்கில் வடமேல் மாகாணமும் மாத்தளை மாவட்டமும். கிழக்கில் மாத்தளை மாவட்டமும் பாத்த தும்பற, கண்டி, பாத்த ஹேவாஹெட்ட ஆகியவற்றின் எஞ்சிய பாகங்கள்.

பிரிவுகள்: கங்கபலாத்தை மெதப்பலாத்தை, மெதசியப் பற்று ஆகிய கிராம சங்கங்களின் பிரிவுகளும், குளுகம்மன்சிய பற்று, கலசியப்பற்று, பள்ளே கம்பஹா, உடகம்

[15ஆம் பக்கம் பார்க்க]

## நாட்டில் ஒழுங்கை....

[4ஆம் பக்கத் தொடர்ச்சி]

எவ்வினத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பினும், அரசியல் மொழியில் அவர்கள் அரசாங்கத்துடனே, அன்றி பொது அமைப்புகளுடனே தொடர்பு கொள்ள முடியாதவர்களாக இருப்பின், அவர்கள் வசதிக்கேற்ற மொழியில் தொடர்பு கொள்ள வழிசெய்தல்.

நாட்டின் நிர்வாகத் துறைக்கான பரீட்சைகள் விண்ணப்பம் செய்தவர்களின் தாய்மொழியிலேயே நடைபெறும் என ஐ. தே. க. உறுதிகூறுகின்றது. ஆனல் சேவையில் சேர்ந்தபின்னர் அரசியல் மொழியில் வேலைசெய்வதற்கான அனுபவம் பெற ஆவன செய்தல்.

ஆங்கிலம் கட்டாயபாடமாக இரண்டாவது மொழியாக கல்வித் திட்டத்தில்இடம் பெறும்.

14. இந்தியர் பிரச்சினை: கள்ளக் குடியேற்றம் மேலும் நடைபெருமலிருக்க நடவடிக்கை எடுத்தல். அவசியம் நேரும்போது இந்தியப் பிரஜைகளைத் தங்கள் நாட்டிற்கனுப்புதல். அப்படியில்லாதவர்கள் தாங்களாகவே செல்லுவதற்குத்தக்க வசதிகளைச் செய்தல்.

15. வெளிநாட்டுக் கொள்கை நடுநிலைமை வகித்தல்.

16. பொருளாதாரம்: அரசாங்கத்தின் அனுவசியச் செலவுகள் தாட்சண்யமின்றிக் கட்டுப்படுத்தப்படும். அவசியமெனக் கண்டால் மட்டுமே பொதுமக்களின் செலவில் வெளிநாட்டுக்குச் செல்வது அனுமதிக்கப்படும்.

17. ஒரு நிரந்தர கைலஞ்ச விசாரணைப்பகுதி நிறுவப்படும். அரசாங்க சபைகளின் அங்கத்தினர் தங்கள் சொந்த விபரங்களைக்கூறவேண்டும் எனக் கட்டாயப்படுத்தப்படுவர்.


'ஹென்ற்லி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்ற்லி

★ சேட்
★ ஷோட்ஸ்
★ காற்சட்டை

ஹென்ற்லி சேட், ஷோட்ஸ், காற்சட்டை ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்ற்லி உடைவகையில்
நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினலும்,
அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்ற்லி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை.



# நமது நூல் நிலையம்

**Tamil Element in Ceylon Culture**: By Kalaipulavar K. Navaratnam; Published by: The Eelakesari Ponniah Memorial Publication Society, Tellippalai, Ceylon; Price Rs 3.

இலங்கைத் தமிழருக்கு இக்காலம் ஒரு சோதனைக் காலமாகும். அரசியல் துறையில் அவர்களுடைய உரிமைகள் பறிக்கப்படுவதோடு, இலங்கையில் பல்வேறு துறைகளில் அவர்கள் ஆற்றிய தொண்டுகளும் மறைக்கப்பட்டு வருகின்றன. இவற்றுக்கெல்லாம் காரணம் இந்நாடு பௌத்த மதத்தைச் சேர்ந்த சிங்களருக்கு மாத்திரம் உரித்தானதென்பதைத் தாபிக்க விரும்புவதே.

இந்த இக்கட்டான நிலையில், இலங்கைத் தமிழரின் சரித்திரத்தையும், அவர்கள் இலங்கையில் பல்வேறுதுறைகளில் ஆற்றிய தொண்டுகளையும் விரிவாகக் கூறும் இரு நூல்கள் வெளிவந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். இலங்கைத்தமிழரின் சரித்திரத்தை திரு ஸி. எஸ். நவரத்தினம் என்பவர் எழுதிச் சில மாதங்களுக்கு முன் வெளியிட்டுள்ளார். இப்பொழுது நமது பார்வைக்கு வந்திருக்கும் "இலங்கைக் கலாசாரத்தில் தமிழ்ப் பண்புகள்" என்னும் நூல் கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்களால் எழுதப்பெற்று, ஈழகேசரிப் பொன்னையா ஞாபக வெளியீட்டு மன்றத்தாரால் வெளியிடப்பட்டிருக்கிறது. இவ்விரு நூல்களும் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. இதனல் தமிழறியாத சிங்களர் முதலியோர் படித்துப் பயன் அடையக் கூடியதாயிருக்கிறது. ஆனலும் அவை கூடிய சீக்கிரத்தில் தமிழில் வெளிவரவேண்டும். ஏனெனில் தமது முந்தையோர் செய்த விந்தைகளைத் தமிழர் அறிந்திருக்க வேண்டுமல்லவா?

> மதிப்புரை விரும்புவோர் ஒவ்வொரு நூலிலும் இரு பிரதிகள் அனுப்பவேண்டும்.

இலங்கையின் பூர்வீக குடியினரான நாகரும் இயக்கரும் திராவிடரென்பதும், அவர்கள் நாகரிகத்தில் முன்னேறியிருந்தனரென்பதும் சிங்களர் குடியேற பன்னூற்ருண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழர் இலங்கையில் வாழ்ந்துவந்திருக்கின்றனரென்பதும் சரித்திர ஆசிரியர்கள் கண்ட உண்மையாகும். இவற்றுக்கெல்லாம் போதிய சான்றுகள் காட்டித் தமது நூலில் முதலதிகாரத்தில் கலைப்புலவர் விளக்கியுள்ளார்.

இரண்டாவது அதிகாரத்தில் சிங்களருடைய மொழி, சமயம், சிற்பம், சமூகம் முதலியவற்றின் வளர்ச்சிக்குத் தமிழர் ஆற்றிய தொண்டு விவரிக்கப்பட்டிருக்கிறது. சிங்கள மொழி, அமைப்பில் தமிழ் மொழியைப் பின்பற்றி யிருக்கிறதென்றும், பல தமிழ்ச் சொற்கள் சிங்கள மொழியில் காணப்படுகின்றனவென்றும் முன்னுள் ஆராய்ச்சியாளரான முதலியார் குணவர்த்தனவும் இக்கால ஆராய்ச்சியாளரான டாக்டர் மெண்டிஸ் என்பவரும் கூறியிருப்பதை இந் நூலில் ஆசிரியர் எடுத்துக்காட்டியிருக்கிருர்.


இலங்கையிலே காணப்படும் பௌத்தம் கொள்கையளவில் ஈனயானமாக விருந்தபோதிலும் நடைமுறையில் அது இந்துசமயத்தை ஒத்திருப்பதைக் காணக்கூடியதாகவிருக்கிறது. இதற்குக் காரணம் இந்துசமயத்தின் தொடர்பினல் மக்கள் இந்துசமய வழிபாட்டு முறைகளைப் பின்பற்றுவதே. சிற்பத்துறையில் பல்லவ, சோழ, பாண்டிய, விசய நகரமுறைகள் இலங்கையில் பின்பற்றப்பட்டிருப்பதற்குப் போதிய சான்றுகள் காணப்படுகின்றன. சிங்களருடைய சமூக அமைப்பு, தமிழரின் சமூக அமைப்பை ஒத்திருப்பதை டாக்டர் ஆனந்த குமாரசுவாமி, டாக்டர் ஆரியபாலா முதலியோர் தமது நூல்களில் விளக்கியுள்ளனர் இந்த விபரங்களெல்லாம் இந் நூலில் இடம் பெற்றிருக்கின்றன.

திரு. டி. ரி. தேவேந்திரா என்பவர் சமீபத்தில் எழுதிய நூலில் இலங்கையிற் காணப்படும் சிற்பம் முதலியன கலப்பற்றவை யென்றும் அவற்றுக்கும் இந்திய சிற்பமுறைக்கும் ஒரு தொடர்புமில்லையென்றும் கூறியிருக்கின்ருர். இந்த விபரீதக் கொள்கைகளுக்குத் தக்க விடையை அனுபந்தத்தில்கலைப் புலவர் கொடுத்திருக்கிருர்.

இலங்கைக் கலாசாரத்தின் உண்மையை அறிய விரும்புவோர் இந் நூலை அவசியம் படிக்கவேண்டும்.

'அர்த்தநாரீஸ்வரன்'

நான் விரும்புவது
நெஸ்டோமோல்ட்
ஏனெனில்
அது எனக்கு
எவ்வளவோ
நன்மையளிக்கின்றது..






நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம் இது மோல்ட்டட்பார்லி மற்றும் கோதுமைமாவுடன் முழுப்பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A, $B_2$, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம் ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் பொஸ்பேட்டுகள் மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 மேலதிக விட்டமின் B 1 சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்.

**நெஸில்ஸ்**

இலவச சாம்பிள்

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப்பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில்ஸ் புரொடக்ட்ஸ்
(சிலோன்) லிமிட்டெட்,
த. பெ. 189 கொழும்பு.

மெக்கானிக்குகள் குழந்தைகள், வாலிப வயதினர் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும் இந்த நெஸ்டோமோல்ட் அபார நன்மை அளிக்கவல்லது. சூடானுலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானுலென்ன இழந்த சக்தியை மீட்டுத்தரவும், ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்ட்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்ருல், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பதுதான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி அலாதியானது.

**நெஸ்டோமோல்ட்**

விட்டமின் B1 அடங்கியது.

## நன்றி கூறல்

மண்டைதீவு சிறுப்பிலம் முத்துக்குமாரசுவாமி கோவில் தருமகர்த்தாவாக இருந்தவரும் கார்த்திகேசு வித்தியாசாலை மனேஜராகப் பணியாற்றியவரும் எனது தந்தையாருமான கார்த்திகேசு முத்துக்குமாரு அவர்கள் 6-1-60 புதன்கிழமை காலமானுர். ஈமக்கிரியைகள் அன்று மாலை நடைபெற்றன. எனது தந்தையாரின் பிரிவைக் குறித்து அநுதாபச் செய்திகள் அனுப்பி வைத்த அன்பர்களுக்கும், உற்ருர், உறவினர்களுக்கும், எமது ஊரவர்களுக்கும் நானும் எனது பாரியாரும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்ரேம்.

முத்துக்குமாரு நவரெட்னராசா
கிராமத்தலைவர்
மண்டைதீவு.

## பூஜ்யம் தபால்

விஜயானந்த தகநாயக்கா
அவர்கள்

பிரதம மந்திரி
"டெம்பிள் ட்ரீஸ்"
கொழும்பு.

தலைவரே!

தங்களுக்கும் எனது பொங்கல் வாழ்த்துக்கள்!

தாங்கள் பெரிய அதிர்ஷ்டக்காரர். சுக்ரதிசை பலமாக அடிக்கிறது.

தங்களுக்கு முன்பாக நான்கு பிரதமர்கள் பதவி வகித்தார்கள். ஆனால் அவர்களெல்லாம் சேர்ந்து 12 வருடங்களில் செய்ய முடியாத காரியங்களை 12 வாரங்களில் செய்து இலங்கை சரித்திரமே மறக்க முடியாதபடி தங்கள் பெயரை நிலைநாட்டி விட்டீர்கள்.

"மூன்று மாதங்களுக்குள்ளாக திக்பிரமை பிடிக்கும்படி காரியம் செய்வேன்." என்றீர்கள். சொன்ன சொல் தவறாத அரிச்சந்திரன் போல தினசரி தாங்கள் அரசியல் எதிரிகளைத் திகைக்கச் செய்து வருகின்றீர்கள்.

மற்றப் பிரதமர்கள், பார்லிமெண்ட் சபையில் பதில் சொல்ல வேண்டுமே என்று அஞ்சினர். ஆனல் உங்களுக்கு அந்தப் பயமே இல்லை. பார்லிமெண்ட்தான் கலைக்கப்பட்டு விட்டதே! தாங்கள் அநேகமாக ஒரு சர்வாதிகாரிதான்! தங்கள் இஷ்டப்படி எதுவும் செய்யலாம். இன்னும் எட்டு வாரங்களுக்கு! இந்த அதிர்ஷ்டம் யாருக்கு வரும்?

எட்டு வாரங்களில் தாங்கள் கிடைத்தற்கரிய இந்தப் பதவியை விட் மாட்டீர்களென்றும், ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி, பொதுத் தேர்தலைப் பின் போட்டு, சர்வாதிகார பிரதமராக வெகு காலம் நீடித்திருப்பீர்களென்றும் உங்கள் அரசியல் எதிரிகள் கூறுகிறார்களே. உண்மை தானா?

இதுஎப்படியாயினும்சரி. நீங்கள் நீடூழி பிரதமராக இருக்க வேண்டுமென்பதுதான் எனது விருப்பம்! ஏன் தெரியுமா? வேறு யாராவது பிரதமராக வந்தால், அரசியல் வாழ்வே உப்புச்சப்பே இல்லாது போகும்!

மந்திரி சகாக்களை கால்ப்பந்தடிப்பது போல் அடித்து, வேறு யார் உங்களைப் போல் விரட்டுவார்கள்? ஒரு மந்திரி இரண்டே நாள் தம்மை மந்திரியாக இருக்க விடும்படி மன்றாடினர். "முடியாது போ-ஓடிப் போ". என்று கூறிவிட்டீர்கள்.

அந்த மந்திரிகள் முன்னர் பிலிப்பை விரட்டியதின் கர்ம பலன் அனுபவிக்கிறார்கள். அவர்களுக்கு இதுவும் வேண்டும். இன்னமும் வேண்டும்.

இப்படிக்கு
பூஜ்யம்

குறிப்பு.-

வவனியா ரயில் விபத்தை சாக்கிட்டு, ஸிட்னி சொய்ஸாவை மீண்டும் ஒரு பெரிய பதவிக்கு நியமிக்கத் தாங்கள் முன்வந்துள்ளதை வரவேற்கிகிறேன்.

சென்ற 1958-ம் வருஷ வகுப்புக் கலகத்தில், பல கலகக்காரர்களை தயவுதாட்சண்யமின்றி அடக்கியதாகப் புகழ் பெற்றவர். இப்போது வகுப்புத் துவேஷத்தைக் கிளப்பி தேர்தலில் வெற்றிபெறச் சிலர் திட்டம் போட்டு வேலை செய்வதாயும், வவனியா, குருணைக்கலை, பம்பலப்பிட்டியா, பரந்தன் முதலிய இடங்களில் ரயில்களைக் கவிழ்க்க நடந்துள்ள முயற்சிகள் அந்த அரசியல்காரர்களின் வேலையே என்றும் தாங்கள் மதித்து, இவர்களை அடக்க ஸிட்னி தான் சரி என்றும் கூறுகின்றீர்கள்.

பப்ளிக் சர்வீஸ் கொமிஷன் தான் இதைப்பற்றி முடிவு செய்யவேண்டுமென்று சிலர் சட்ட நுணுக்கம் பேசலாம். ஆனல் இதைஎல்லாம் தாங்கள் லட்சியம் செய்ய மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

ஏனென்றால், சட்டமெல்லாம் நமக்காகவேயன்றி, நாம் சட்டத்துக்காக அல்லவல்லவா?

தேர்தல் காலத்தில், அதுவும் இச்சமயம் பிரதமர் பதவி வகிப்பது மிக ஆபத்தான வேலை. உயிருக்கும் துணிந்தவர்தான் பிரதமராக இருக்க முடியும். ஆகவே மிகத்துணிச்சலுடன் பிரதமர் பதவி வகிக்கும் வீரராகிய தங்களுக்கு மீண்டும் எனது வாழ்த்துக்கள்.

பூஜ்யம்

# மொழிக் கொள்கை மாறவில்லையாம்

## சமசமாஜக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம்

**'மொழிக் கொள்கையில் நாங்கள் மாறிவிடவில்லை. பொது மக்களிடையே மேலான நல்லுறவு ஏற்படவேண்டியதை முன்னிட்டு, சிறிய திருத்தம் செய்துள்ளோம். ஆனல் தமிழருக்கு இவ்விஷயமாக எவ்வித அநீதியும், வசதியீனமும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள எங்கள் கட்சி உறுதி கொண்டிருக்கிறது" என்று சமசமாஜக் கட்சித் தலைவர் டக்டர் என். எம். பெரேரா 'ஈழநாடு' பிரதிநிதியிடம் தெரிவித்தார்.**

சமசமாஜக் கட்சி வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் மொழிவிஷயமாகக் குறிப்பிட்டுள்ளதாவது:—

"சிங்களம், சட்டமூலம் அரசாங்க மொழி ஆக்கப்பட்டு விட்டது. தமிழையும் ஓர் அரசாங்க மொழியாக்கக்கூடியபடி சட்டமூலம் வழிசெய்ய வேண்டும். இதனல் தமிழர் அரசாங்கத்துடனே தங்கள் சொந்த மொழிமூலம் தொடர்பு வைத்துக்கொள்ளவும், தங்கள் சொந்த மொழி மூலம் கல்வி பயின்று, பரீட்சிக்கப்படவும், தங்கள் மொழிமூலமே ஆட்சிசெய்யப்படவும் வேண்டிய உரிமை பாதுகாக்கப்படும். **இதேசமயம், தமிழ் பேசும் மக்களுக்கு எவ்வித அநீதியும் செய்யப்படாமல், பெரும்பான்மை மக்களின் மொழி என்றமுறையில் சிங்களத்துக்கு அதற்குரிய இடம்கிடைப்பதும் பாதுகாக்கப்படும்"**

"சமஷ்டிக்கட்சி ஏற்கனவே, பண்டாரநாயக்காவுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் சிங்களமே அரசாங்கமொழி என்ற கொள்கையை ஒப்புக்கொண்டு, தமிழுக்குப் பிரதேச மொழி அந்தஸ்து கிடைப்பதாகவே செய்தது என்றும், அவர்களே 'சம அந்தஸ்து' கோரிக்கையை வற்புறுத்தாமல் விட்டுக்கொடுத்துவிட்டார்கள்" என்றும் சமசமாஜக்கட்சி வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் கொழும்பு நகரசபைத் தேர்தலில் டாக்டர் என். எம். பொரளைத் தொகுதியில் தோல்வி அடைந்ததற்கு, அக் கட்சியின் 'சம அந்தஸ்து' கோரிக்கைதான் முக்கிய காரணமாகஇருந்தது. இச் சமயம் அதே கொள்கையைக் கடைப்பிடித்தால், பொதுத் தேர்தலில் சிங்களத் தொகுதிகளில் வெற்றி கிடைக்க முடியாதென்பதைக் கண்டே, இந்தத் திருத்தம் சில சிங்களப் பிரதிநிதிகளின் தூண்டுதலாற் செய்ய வேண்டியதாயிற்றும்.

நியாயமான தமிழ் உபயோக மசோதாவைப் பார்லிமெண்டில் கொண்டுவந்து பேசுகையில், பிரதமர் பண்டாரநாயக்கா அதற்கு ஒரு காரணம் கூறினர். டாக்டர் என். எம். பிரதமராக வந்தாலும், அவர் மொழிச் சட்டத்தை மாற்ற முடியாதபடி செய்யவே, நியாயமான தமிழ் உபயோக மசோதாவைக் கொண்டுவந்ததாகக் கூறினர். அது உண்மையாகி வருகிறது.

மொழி விஷயத்தில் நாடெங்கும் தமிழுக்கு "சம அந்தஸ்து" வேண்டுமென்று எந்தக் கட்சியும் கேட்கவில்லை. சுந்தரலிங்கத்தாரின் தமிழ் ஒற்றுமை முன்னணியும், தமிழ்ப் பகுதியை ஈழத் தனியரசாக்கவேண்டுமென்றே கேட்கின்றது என்றும் எடுத்துக் கூறப்படுகிறது.

### இந்தியர் பிரச்சினை

இந்தியர் பிரச்சினை விஷயமாக, சமசமாஜக் கட்சியின் விஞ்ஞாபனம் கூறுவதாவது:-

**இலங்கையிலுள்ள இந்தியப் பிரஜைகளைப் பதிவு செய்வது விஷயமாக உள்ள தடைகளை நீக்கும்படி இந்திய அரசாங்கத்துடனே உடன் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும். இதன் மூலம், இலங்கையை நிரந்தரத் தாயகமாகக் கொண்ட இந்திய வம்சா வளியினருக்கு, இலங்கை பிரஜா உரிமை கிடைக்கவும், மற்றவர்களுக்கெல்லாம் இந்திய பிரஜா உரிமை கிடைக்கவும் செய்யலாம்.** சட்ட விரோத குடியேற்றக்காரர்களைத் தாய் நாட்டுக்குத் திருப்பி அனுப்ப வேண்டும்.

அதாவது நாடற்றவர்களென்று இலங்கையில் யாரும் விடப்படமாட்டார்கள்.

லங்கா சமசமாஜக் கட்சியின் பார்லிமெண்ட் வேலை திட்டம் பற்றிய விஞ்ஞாபனம் மேலும் கூறுவதாவது:

### பொருளாதாரம்

1. வங்கிகளைத்தேசஉடைமையாக்கவேண்டும். இது பற்றிய சட்டம் செய்வதற்கிடையே, வெளிநாடுகளுடனேயுள்ள வங்கித்தொடர்புகளைக்கட்டுப்பாடு செய்து மேற்பார்வையிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும்.

3. பெரிய தோட்டங்களை தேசஉடைமையாக்கவேண்டும்.

4. எல்லா இன்ஷூரன்ஸ் கொம்பனிகளையும் அரசாங்கமே எடுத்து நடாத்த வேண்டும்.

5. அரசாங்க நிர்வாகத்திலுள்ளஎல்லாத் தொழில் ஸ்தாபனங்களிலுமுள்ள தொழிலாளர், அதன் நிர்வாகத்தில் பங்குபற்ற இடமிருக்க வேண்டும்.

6. மக்களுக்கு அவசியமான பொருள்களுக்கு வரி விதிக்காமலும், வருமானத்துக்கு ஒரு எல்லையைக் குறிப்பிட்டும், வரி முறையை மாற்றி அமைக்க வேண்டும்.

7. உற்பத்தியைப் பெருக்கி, வேலைகளையும் அதிகரிக்கக் கூடிய விரிவான பொருளாதார திட்டம் வகுக்க வேண்டும். பின் தங்கிய பகுதிகளை விசேஷமாகக் கவனிக்க வேண்டும்.

### கிராமங்களுக்கு

எரு, மேலான விதைகள், விவசாயக்கருவிகள் இவற்றைக் குறைந்த விலைக்கு, கமக்காரர்களுக்கு வினியோகம் செய்ய வேண்டும்.

விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு உத்தரவாத விலை அளிப்பதுடன், திறமான மார்க்கெட் விற்பனை வசதிகள் செய்து கொடுப்போம்.

அரசாங்க நில வினியோகத்திலே, கமக்காரருக்குப் பூரண உரிமை அளிப்பதுடன், நெற்காணி சட்டத்திலுள்ள குறைகளை நீக்கி, நாடெங்கும் அதை அமுலுக்குக் கொண்டு வருவோம்.

கூட்டுறவு இயக்கத்தை அபிவிருத்தி செய்வோம். பல நோக்கு கூட்டுறவு ஸ்தாபனங்களையும், கூட்டுறவு வங்கிமுறையையும், கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின்வேலைகளையும் விரிவாக்க வேண்டும்.

கமக்காரர்களுக்கு நீர்ப்பாசன வசதிகளைச் சிறப்பாகவரட்சிப்பகுதியில்செய்துகொடுக்க வேண்டும்.

பெரிய பண்ணைகளைக் கூட்டுறவு முறையில் ஆரம்பித்து நடாத்த உதவ வேண்டும்.

### நிர்வாகம்

நிர்வாகமுறையை அடியோடு மாற்ற வேண்டும். தலைமைக்காரர்முறை, கச்சேரிமுறை இவற்றை நீக்கி, முறையை

(10ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கில் இரு ஹரிஜன் அபேட்சகர் வெற்றி பெறக்கூடும்?

## மூன்று தொகுதியில் போட்டியிடும் இ. ஜ. கா. தலைவர்

— நமது தேர்தல் நிருபர் —

கோப்பாய், உடுவில் இவ்விரு தொகுதிகளிலும் மற்றவர்களுடன் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த இரு அபேட்சகர்களும் போட்டியிடுகிறார்கள். அவ்விருவருக்கும் வெற்றி கிடைக்கக்கூடுமென்று அரசியல் வட்டாரங்களில் ஒரு பேச்சு அடிபடுகின்றது.

கோப்பாய்த் தொகுதியில் மொத்த வாக்காளர் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில், ஹரிஜனவகுப்பைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவுதான். அத் தொகுதியிலே ஒரு ஹரிஜன் உள்ளிட்டு மொத்தம் 6 பேர் போட்டியிடுகிறார்கள். மற்ற ஐந்து பேர்களும் போட்டிபோட்டு, மற்ற ஜாதி வாக்குகளைப் பிரித்துக்கொண்டுவிடுவரென்றும், ஹரிஜனவாக்காளர் தங்கள் சாதியைச் சேர்ந்த அபேட்சகருக்குக் கட்டுப்பாடாக வாக்களிப்பரென்றும், அப்படியாயின, அந்த அபேட்சகர் அதிகப்படி வாக்குகள் பெற்று வெற்றியடைய அதிக சந்தர்ப்பமுண்டென்றும் மதிக்கப்படுகிறது.

மேலும் இம்முறை தேர்தலில் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தக்கூடாதென்று ஒரு புதியகட்டுப்பாடு வந்துள்ளது. இதனல் ஜாதி இந்துக்களும், சிறப்பாகப் பெண்களும், வாக்களிக்க நடந்துசெல்ல விரும்பாமல் வீட்டிலேயே இருந்துவிடலாமென்றும், ஹரிஜன சமூகத்தைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் கார்களை எதிர்பார்க்காமல், நடந்துசென்று கட்டுப்பாடாக வாக்களிப்பாரென்றும் அதனல் ஹரிஜன அபேட்சகருக்கு மற்றவர்களைவிட அதிக வாக்குகள் பதிவாக "சான்ஸ்" உள்ளதென்றும் கூறப்படுகின்றது.

இதேமாதிரித்தான் உடுவில் என்ற புதிய தொகுதியிலும். இங்கு மொத்தம் ஏழு அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர். இதில் ஒருவர் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர், சுயேச்சையாகப் போட்டியிடுகின்றார். மற்ற ஜாதியினரின் வாக்குகள் பிளவுபட்டுப்போக, ஹரிஜன் அபேட்சகர் இங்கும் தமது சமூகத்தைச் சேர்ந்தவர்களின் வாக்குகளை வெகுவாகப் பெற்று வெற்றிபெறக்கூடுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

### இந்தியாவில்

இந்தியாவிலே பல சட்டசபைகளிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஸ்தானங்கள், அவர்களது ஜனத்தொகை விகிதாசாரத்துக்கு அதிகமாக ஒதுக்கப்பட்டன. இந்தச் சலுகை பத்து வருடங்களுக்கு மட்டுமே இருக்குமென்று அரசியல் அமைப்புச்சட்டம் கூறியது. ஆனல் சமீபத்தில், இந்தச் சலுகையை மேலும் பத்து வருடங்களுக்கு நீடிக்கவேண்டியது அவசியமென்று கூறி, அவ்விதமே செய்திருப்பதாகத் தெரிகிறது. அங்கு இரட்டை மெம்பர் தொகுதிகளை அமைத்து, அதில் ஒவ்வொரு தொகுதியிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கென ஒரு ஸ்தானம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்ட வகுப்பு ஸ்தானத்துக்கு அபேட்சகர்களாக நிற்பவர்களுக்கிடையே முதலில் பூர்வாங்க தேர்தல் நடைபெறும். அதில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மட்டும் வாக்குச் செய்வர். அந்தப் பூர்வாங்கத் தேர்லில் முதல் நான்கு ஸ்தானங்களைப் பெற்றவர், பின்பு தங்களுக்காக ஒதுக்கப்பட்ட ஸ்தானத்துக்குப்பொதுத் தேர்தலில் போட்டியிடுவர். இதில் சாதி வித்தியாசமின்றி எல்லாரும் வாக்களிப்பர். அதில் முதன்மைபெறுகிற ஹரிஜன் அந்த ஸ்தானத்துக்கு வெற்றி பெற்றவராவர்.

ஹரிஜனங்கள் விரும்பினல் பொதுத் தொகுதிகளிலும் நேர்முகமாக அபேட்சகராக நின்று போட்டியிடலாம். பொதுத் தேர்தலில் இரட்டை அங்கத்தினர் தொகுதியில், ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த இருவருக்கு மற்றவர்களைவிட அதிகப்படி வாக்குகள் கிடைத்தால் இருவரும் தெரிவுசெய்யப்பட்டவராவர். சமீபத்தில் இவ்விஷயமாக திரு. வி. வி. கிரி, ஓர் ஹரிஜன அபேட்சகரின் வெற்றியை ஆட்சேபித்துத் தேர்தல்மனுச் செய்தார். அதிக வாக்குப்பெற்ற ஹரிஜன அபேட்சகரே வெற்றிபெற்றதாயும், தமக்கு ஒதுக்கப்பட்ட ஸ்தானத்துக்கு மட்டும் அவர்கள் போட்டியிட வேண்டுமென்ற அவசியமில்லை என்

[10ஆம் பக்கம் பார்க்க]

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு தை மீ 3உ (16-1-60)

EELA NADU: National Tamil weekly Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna.
*Colombo Office*: 142, New Bullers Road, Colombo 4.

## தை பிறந்தது

**தை**பிறந்துவிட்டது. தை பிறந்தால் வழிபிறக்குமென்பது அன்ஞேர்வாக்கு. இலங்கைக்கும் சிறப்பாகத் தமிழருக்கும் இனி வழி பிறக்குமா?

இன்னும் இரண்டே மாதங்களில் பொதுத் தேர்தல் வருகின்றது. தேர்தல் மூலம் புதிய பிரதிநிதிகளும், புதிய அரசாங்கமும் ஏற்பட்டு, நமது இன்னல்கள் நீங்கவும் புது வாழ்வு மலரவும் வழிபிறக்குமென்றே நம்மில் ஒவ்வொருவரும் இப்போது புது நம்பிக்கை கொண்டிருக்கிறேம்.

தமிழராகிய நாம் இங்கு எண்ணிக்கையிலே சிறுபான்மையினரே. பல பல கட்சிகளாகப் பிரிந்து ஒற்றுமையின்றிக் கிடக்கின்றேம். தேர்தலில் போட்டாபோட்டிகள் பலமாக வுள்ளன இந் நிலையில் நாட்டிலே புது வாழ்வு மலரவும் நமது சமுகம் தலைநிமிர்ந்து முன்னேறவும் செய்ய நமக்குள்ள அரசியல் பலமும் செல்வாக்கும் எப்படி உதவமுடியுமென்ற ஐயப்பாடு நமக்கு ஏற்படலாம்.

தமிழர் மட்டுமல்ல; பெரும்பான்மைச் சமுகத்தினரான சிங்களரும் இன்று பல பல கட்சிகளாகப் பிரிந்துதான் இருக்கின்றனர்கள். அங்கு பிளவுகள் மிக அதிகம். தேர்தல்காலத்தில் இவ்வித பிரிவினைகளும் போட்டிகளும் இயற்கையே. தேர்தல் முடிந்தபின், புதிய பிரதிநிதிகளும் புதிய அரசியலாரும் எப்படி இருப்பர்? நாட்டில் அமைதிநிலவச்செய்து, முன்னேற்றத்துக்கான வழி வகுப்பார்களா? என்பதே முக்கியமான கேள்வி.

புதிய பிரதிநிதிகளும், புதிய அரசாங்கமும் எப்படி இருப்பரென்பது, இலங்கையிலுள்ள வாக்காளப் பொதுமக்களாகிய நம் கையில்தான் உள்ளது. இதுதான் ஜனநாயகத்தின் தனிச் சிறப்பு. நல்ல பிரதிநிதிகளைத் தெரிவுசெய்தால் நல்ல அரசாங்கம் ஏற்படும். ஆகவே வருகிற பொதுத்தேர்தலில் பொதுமக்களாகிய நாம் எப்படிப்பட்ட பிரதிநிதிகளைத் தெரிவு செய்கின்றேமோ, அதைப் பொறுத்துத்தான் இலங்கையின் எதிர்கால அரசாங்கமும், பொதுவாழ்வும் அமையுமெனலாம்.

பொதுமக்களிடையே இன்று பல்வேறு பிரிவினைகளும் கருத்துக்களும் இருக்கின்றன. என்ருலும் இந்தவேற்றுமைகளுக்கிடையே பொதுவான ஒரு கருத்து அனேகமாக எல்லாரிடமும் இருப்பதைக் காணலாம். அது என்ன? இதுவரை பட்டதெல்லாம் போதும், படமுடியாதினித் துயரம். எப்படியும் அமைதியான வாழ்வு வேண்டுமென்பதே அது. தமிழரிடையேமட்டுமன்றுசிங்களப் பொதுமக்களிடையிலும் இவ்வித கருத்து வெகுவாக நிலவுததைக் காண்கிறேம்.

நாட்டில் அமைதி ஏற்பட வேண்டுமானல் சமுக நல்லுறவு இன்றியமையாதது. ஆகவே, நாட்டில் சமுக நல்லுறவுக்கும் அமைதிக்கும் யார் யார் உண்மையில் உழைப்பரென்ற நம்பிக்கை பொதுமக்களுக்கு உள்ளதோ, அவர்களையே பொதுத் தேர்தல் மூலம் தங்கள் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்வதற்கான அறிகுறிகளைப் பார்க்கின்றேம். வகுப்புவாதமும், சமுக துவேஷமும் வீண் கிளர்ச்சிகளும் நாட்டுக்கோ தங்களுக்கோ நல்லதல்லவென்பதை சென்ற சிலவருட அனுபவங்கள் எல்லாருக்கும் நன்கு அறிவுறுத்தியிருக்க வேண்டும்.

இவ்விஷயத்தில் தமிழ்ப் பொது மக்களின் பொறுப்பும் கடமையும் மிக அதிகம். எல்லா வற்றையும் விட அவர்களுக்கு இப்போது அவசரமாகத் தேவையானது அமைதியும், பயமற்ற வாழ்வும்தான். சிறுபான்மைமக்களுக்கு, ஜனநாயககட்டுக்கோப்பிலே உண்மையான பாதுகாப்பு, பெரும் பான்மையோரின் நல்லெண்ணமேயாகும். வெறும்காகிதச் சட்டங்களோ, பீரங்கியோ அவர்களுக்கு நிரந்தரமான பாதுகாப்பு அளிக்க முடியாது.

சென்ற சில வருடங்களில் இங்கு சிறுபான்மை மக்களுக்குத் தங்கள் பிரதிநிதிகள் இழைத்துவிட்ட தீங்குகளை பெரும் பான்மை சமுகம் சமீப காலத்திலே மெதுவாக உணர்ந்துவருகின்றது. நாட்டுக்கு ஏற்பட்டுள்ள இன்றைய அரசியல் அலங்கோலங்களுக்கெல்லாம் காரணம் சிறுபான்மை மக்களுக்குச் செய்யப்பட்ட அநீதியும் கொடுமையும் தான் என்பதை அவர்களில் பலர் உணர்ந்து, இந்த நிலையை மாற்ற வேண்டுமென்று ஆவல் கொண்டிருக்கிறர்கள்.

ஆகவே, இனி நல்ல காலம் பிறப்பதற்கான சூழ்நிலை அதிகரித்து வருவதாகவே நாம் நம்புகிறேம். சில சுயநலமிகள் சிற்சிலவிஷமங்கள் செய்யலாம். ஆனல் பொதுமக்கள் அவற்றை இனி சகிக்கமாட்டார்கள்.

எனவே, புதிய பொதுத் தேர்தல், நாட்டில் அமைதியும் புதுவாழ்வும் ஏற்படுத்த நல்ல சந்தர்ப்பமாகும். இச் சந்தர்ப்பத்தை வாக்காளப் பொதுமக்களும் சிறப்பாகத் தமிழரும் மிகவும் பொறுப்பு உணர்ச்சியுடன் பயன்படுத்தவேண்டும். தங்களுக்குத் கிடைத்துள்ள அருமையான வாக்குரிமையை அவர்கள் நாட்டில் அமைதியும், நிலையான அரசாங்கமும், சமுக நல்லுறவும் ஏற்படுத்தக் கூடிய சக்திகளைப்பலப்படுத்தப் பயன்படுத்துவதாயின் தங்கள் குறைகளை உணர்ந்து, அன்பு வாழ்க்கை வாழ முற்படுவதாயின், அவர்களுக்கும் நாட்டுக்கும் இனி நல்லகாலம் பிறக்குமென்றே உறுதியாக நம்பலாம். இறைவன் அருளால், அவ்விதமே ஏற்படவேண்டுமென்பது நமது மனப்பூர்வமான பிரார்த்தனையாகும்.

---

## தேர்தல் விஞ்ஞாபனங்களும் பிரசாரமும்

ஏறச்சொன்னல் எருதுக்குக் கோபம். இறங்கச் சொன்னல் முடவனுக்குக் கோபம் என்ற நிலையில் மொழிப்பிரச்சினை விஷயமாக சமசமாஜ, கொம்யூனிஸ்ட் கட்சிகளின் நிலை தர்ம சங்கடமாகியுள்ளது. இவ்விரு கட்சிகளே, இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் தேர்தலில் போட்டியிடுகின்றனவென்பது குறிப்பிடத்தக்கது.

சமஅந்தஸ்து வேண்டுமென்ருல், சிங்களவருக்குக் கோபம் வரும். வேண்டாமென்ருலோ தமிழரின் ஆதரவு கிடையாது. ஆகவே, இரு சார்பினரையும் திருப்தி செய்யும் முயற்சியிலே இவ்விரு கட்சிகளும் தங்கள் மொழிக்கொள்கையை வகுப்பதில் சங்கடப்படுகின்றன. சிங்களப் பகுதியில் மட்டுமோ அல்லது தமிழ்ப்பகுதியில் மட்டுமோ போட்டியிடும் ஏனைய கட்சிகளுக்கு இந்தக் கவலையில்லை.

பல கட்சிகளும் வாக்காளரின் ஆதரவைப் பெறும் நோக்கத்துடனே விஞ்ஞாபனங்களை வெளியிட்டு வருகின்றன. அந்தவிஞ்ஞாபனங்களில்உள்ளவாறே பின்னர் அவை காரியங்கள் செய்யமுடியுமா என்பது பற்றி உத்தரவு எதுவுமில்லை. மேலும் விஞ்ஞாபனங்கள் பலவும் தேர்தலிலே, மக்களின் மனதைக் கவரும் நோக்கத்துடன் தயாரிக்கப்படுவதாலும், பலவற்றினும் அநேகமாகப் பொதுவான அம்சங்கள் அதிகமுள்ளதாலும், வாக்காளர் இந்த விஞ்ஞாபனங்களைக் கொண்டு ஒருதிட்டமான முடிவுக்கு வரமுடியாது.

புதிதாகச் சுதந்திரமடைந்த நாட்டிலே மொழி முதலிய விஷயங்களில் கருத்து வேற்றுமைகள் நிலவுவது இயற்கை. பக்கத்திலுள்ள இந்தியாவில் கூட மொழிப் பிரச்சினை, நேரு உட்பட பலருக்கும் அதிக மண்டையிடி கொடுக்கின்றது. ஆகவே இங்கு அந்தப் பிரச்சினை நமக்குச் சங்கடம் அளிப்பதில் வியப்பில்லை.

மொழி முதலிய பிரச்சினைகளை சிறுபான்மையோராகிய தமிழர் தனிப்பட்ட முறையில் தீர்க்க முடியாது. இதற்குப் பெரும்பான்மை சமுக பிரதிநிதிகளின் ஆதரவும் நல்லெண்ணமும் தேவை. அவற்றைப் பெறும் வகையில் காரியங்கள் செய்தால் தான் இப்பிரச்சினைகள் பின்னர் சுமுகமாகத்தீர வழி பிறக்கும். இவ்வித ஆதரவும் நல்லெண்ணமும் உடனடியாகக் கிடைக்க முடியுமா? இது வேறு விஷயம்.

என்ருலும் தேர்தல் பிரசாரங்களிலே சிறப்பாக தமிழர், வீண் மனக் கசப்பையும், துவேஷத்தையும் கிளப்பிவிடக்கூடிய எதையும் கூருமலும், செய்யாமலும் இருப்பது விரும்பத்தக்கது. மனக் கசப்புகள் இல்லாமல் பிரசாரத்தை மேலான முறையில் நடத்தி, வாக்காளரின் ஆதரவைப் பெறுபவர்களே, தேர்தலுக்குப் பின் ஏனைய பிரதிநிதிகளின் மனதை மாற்றி அவர்களது ஆதரவைப் பெற ஆற்றல் படைத்தவராக இருப்பர்.

---

## கொழும்பின் புதிய மேயர்

**மு**தல்முதலாக முஸ்லிம் சமுகத்தைச் சேர்ந்த திரு. எம். எச். முகமது கொழும்பு நகர சபையின் புதிய மேயராகத் தெரிவு செய்யப்பட்டதற்காக அவரையும் அச்சமுகத்தையும் பாராட்டுகிறேம்.

தங்கள் கட்சியில் சிங்களப் பிரதிநிதிகளே அதிகமென்ருலும், சிறுபான்மைச் சமுகத்தைச் சேர்ந்த ஒருவரை யு. என். பி கட்சி இம் முக்கிய பதவிக்குத் தெரிவு செய்தது சமுக சமரசத்துக்கு உதவ வேண்டும்.

ஒருவர் எந்தக் கட்சியில் சேர்ந்திருப்பினும் மேயரான பின் அவர் சபை அனைத்துக்கும் எல்லாக் கட்சிகளுக்கும் பொதுவானவராகிருர். ஆகவே மேயர் முகமது, தாம் அம்மேலான பதவியை வகிக்கும்வரை யு. என். பி கட்சியிலிருந்து விலகியிருப்பது, நகர சபையின் நிர்வாகத்துக்கும், அப்பதவியின் கௌரவத்துக்கும் உகந்ததாகும்.

தலைநகரான கொழும்பிலே வசிக்கும் மக்களுக்கு எவ்வளவோ பிரச்சினைகள். சேரிகள், சுகாதாரம், கைலஞ்சம் முதலிய பலவற்றையும் புதிய மேயர் குறிப்பிட்டு அவற்றை நீக்க பொது மக்களின் ஒத்துழைப்பை வேண்டினர். நகரில் கொசு உபத்திரவம் தாங்கவில்லை. இது வரவர அதிகரிக்கின்றது. இன்னும் பலபல சங்கடங்கள். மேயர் முகமது இவற்றை எல்லாம் நீக்க பொது மக்கள், மட்டுமன்றி மற்ற எல்லாக் கட்சிகளின் ஒத்துழைப்பையும் நாடி அதைப் பெற்ருல்தான், இப்பிரச்சினை ஓரளவாவது நீங்க முடியும்.

இரண்டு வருஷ காலமாக சபை கலைக்கப்பட்டு, தலைநகர மக்களின் ஜனநாயக உரிமை பறிக்கப்பட்டிருந்தது. வேலை நிறுத்தங்கள் திடீர் திடீரென நடந்த காரணம் கூறி, நகர சபையை அரசாங்கம் கலைத்தது. அவ்வித நிலைமீண்டும் ஏற்படாமல் தடுக்கவேண்டும். ஒவ்வொரு நகர பிதாவும் தமது கட்சி வேற்றுமைகளை மறந்து, நகர மக்களுக்குச் சேவை செய்வதே தங்கள் முதல் கடமை என்பதை மறவாமல் காரியம் செய்தால், நகரம் பலவிதங்களிலும் முன்னேறுவதுடன் நகர மக்களின் வாழ்வும் மேம்படும். அதற்கான வகையில் புதிய மேயர் தமது பொறுப்பை நிறைவேற்றுவாரென்றே நம்புவோம்.

---

## அரசியல் சதியா?

வவனியாவுக்குப் பக்கத்தில் நடைபெற்ற ரயில் விபத்தைப் பற்றி டாக்டர் என். எம். பெரேரா ஒரு பாரதூரமான குற்றச்சாட்டைச் சுமத்துகின்ருர். சென்ற நவம்பர் 25ஆந் திகதி அங்கு ரயில்பாதையில் விஷமங்கள் நடந்திருப்பதாக, பாதுகாப்பு அதிகாரிகள் புகார் செய்தும், பொலிசாரை இவ்விஷயமாக எவ்வித நடவடிக்கையும் எடுக்க வேண்டாமென்று தலைமைப் பாதுகாப்பு அதிகாரி உத்தரவிட்டதாயும், இதை நிரூபிக்கத் தம்மிடம் ஒரு பத்திரத்தின் பிரதி இருப்பதாயும் டாக்டர் தெரிவிக்கின்ருர்.

டாக்டர் என். எம். வெளியிட்ட புகார் உண்மையாயின், தலைமைப் பாதுகாப்பு அதிகாரிமட்டுமல்ல, புகையிரதப் பகுதி ஜெனரல் மனேஜரும் தங்கள் கடமையைச் செய்யத் தவறியவர்களாவர்.

இவ் விபத்தைப்பற்றி நாம் ஏற்கெனவே எழுதினேம். முன் னெச்சரிக்கைகள் பல இருந்தும் ஏன் விசேஷ பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலதிகாரிகள் எடுக்கவில்லை என்றும், அப்படி எடுத்திருந்தால் இந்த விபத்து ஏற்படாமல் தடுத்திருக்கலாமென்றும் குறிப்பிட்டிருந்தோம். டாக்டரின் அறிக்கை, நாம் கூறியதை உறுதி செய்வதாக இருக்கிறது.

பிரதமர் தகநாயக்கா இவ் விஷயமாக அதிக கவலை தெரிவித்துப் பல விசேஷ நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருவது வரவேற்கத் தக்கதே. ஆனல், ஆபத்து நீங்கவில்லை. பிரதமர் கருதுவதுபோல் இது அரசியல் சதியாயின், தேர்தல் நெருங்க நெருங்க இவ்வித சதி வேலைகள் அதிகரித்து அதிக நஷ்டங்களை ஏற்படுத்தலாம். ஆகவே குற்றவாளிகள் யார் என்பதைக் கண்டுபிடித்து இனி இவ்விதம் நடைபெருமல் தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதற்கு இலாகா அதிகாரிகள்மூலம் நடைபெறும் விசாரணை உதவ முடியாது, ஏனெனில் அவர்கள் தங்கள் பொறுப்புகளைச் சரிவர நிறைவேற்றத் தவறியவர்கள். ஆகவே, நீதிபதிகள் அடங்கிய ஒரு பலமான விசாரணைக் கமிஷனை நியமித்து, பொதுமக்களிடமிருந்தும் வாக்குமூலங்களையும் யோசனைகளையும் வரவேற்க வேண்டும். அப்போதுதான் உண்மை விபரங்கள் அம்பலமாகவும், இனி இவ்வித பாதகச் செயல்கள் நடைபெற முடியாமலும் தடுக்கமுடியும். இந்தவிதமான சதிச்செயல்கள் பொதுத் தேர்தலைப் பின்போடுவதற்காகவோ அல்லது வகுப்பு வெறியை மூட்டித்தேர்தலில் வெற்றிபெறுவதற்கோ திட்டமிட்டுச் செய்யப்படுவதாயின் அவற்றை அம்பலப்படுத்துவதுடன் சூழ்ச்சிக்காரருக்குத் தக்க பாடமும் படிப்பித்தேயாக வேண்டும்.

## சின்னச் சிதம்பரம்

மார்கழி திருவாதிரைக்குச் சிதம்பரம் போகவேண்டுமென்றிருந்தேன். பாஸ்போட், விஸா, பர்மிட், ஊசிகுத்தல் எல்லாச் சடங்குகளையும் முடித்துவிட்டு, ரயிலில்போய்க் கேட்டால் "டிக்கெட் இல்லை" என்று கைவிரித்து விட்டார்கள்!

வாரம் ஏழுநாளில் மூன்று நாள்தான் ரயில் ஓட்டுகிருர்களாம்! அதனல் டிக்கெட் கட்டுப்பாடாம்! சந்திரனுக்கும் செவ்வாய்க்கும் மனிதன் ராக்கெட்டில் பாயமுனையும் இக்காலத்திலே நமக்குப் பக்கத்திலுள்ள ஒரே நாடான இந்தியாவுக்குச் செல்ல எவ்வளவு தடைகள்! மனிதனல் ஏற்படும் இந்தப் பிற்போக்குத் தடைகளைச் சீக்கிரத்தில் அந்த சிதம்பரேசன்தான் நீக்கவேண்டும்!

* * *

பின்னர் விமானத்தில் செல்லலாமென்று முனைந்தேன். ஆனல் விடுமுறை முடிந்து மாணவர்கள் திரும்புவதால், அதிலும் டிக்கெட் கிடையாதென்று தெரிவுத்து விட்டார்கள்.

அதுவும் திருவருள் என்று மதித்து இருக்கையில், யாழ்ப்யாணத்திலுள்ள 'சின்னச் சிதம்பர"மான காரைநகர் எனும் திண்ணபுரம் நினைவுக்கு வந்தது.

சென்ற ஆண்டிலே அங்கு மணிவாசகர்விழாவில் கலந்து, திருவாதிரை தரிசனம் காணும்பாக்கியம் பெற்றேன்.

நண்பரிடம் இதைப்பற்றிக் கூறியதும், மற்ருெரு அன்பருக்கு டெலிபோன் செய்தார். அவர் கிடைக்கவில்லை. ஆனல் சிலமணி நேரங்களில் அதே அன்பர் "தற்செய"லாக வந்துவிட்டார்! (இது தற்செயலா? அல்லது அந்த ஆண்டவனின் செயலா? தற்செயலென்று எதுவும் உண்டா? அவனின்றி ஏதும் அசையுமா?) இதைக் கண்டு வியந்து அவருடன் சென்று காணற்கரிய அந்தத் தரிசனத்தைப் பெற்றேன்.

* * *

நாங்கள் சென்ற சமயம், 5 தேர்களும் வடக்கு வீதியாலே கம்பீரமாக ஓடிக்கொண்டிருந்தன. ஓடும் தேரைப் பார்ப்பது ஒரு புண்ணியமென்பார்கள். கடைசியாக மாணிக்கவாசகர் அடக்கமாகச் சென்றுகொண்டிருந்தார்.

அரோகரா கோஷங்களுடனே பொதுமக்கள் பக்தியுடன் தேர்வடங்களைப் பிடித்திழுத்தனர். பக்கத்திலும், பின்னரும், வாயிலே வெள்ளி வேலைக் குத்திக்கொண்டு அவர்கள் நூற்றுக்கணக்கில் அங்கப் பிரதட்சணம் செய்தனர். ஆவேசம் வந்து, விநாடிக்கு ஐந்தாறு முறைவீதம் புரண்டு வெகுவேகமாக அங்கப் பிரதட்சணம செய்துகொண்டே செல்லும் காட்சியைக் காண பிரமித்துவிட்டேன். மறுபுறம் பெண்கள் பக்தியுடன் அடி அழித்துச் சென்றனர்.

இவ்விதம் பக்திக்காட்சிகள் மெய்மறக்கச் செய்து உள்ளத்தை உருக்கின.

* * *

"என் கை உனக்கல்லால் எப்பணியும் செய்யற்க", "கங்குல் பகல் என்கண் மற்ருென்றும் காணற்க", "போற்றி அருளுக நின் ஆதியாம் பாத மலர்" என்றும் கோவில் முன்பாகத் திருவெம்பாவை இன்னிசையுடன் முழங்கியது.

சுற்றிப் பார்த்தேன். பல்லாயிரக் கணக்கான பக்தர்குழாம் இறை அருளைவேண்டி அங்கு நின்ற காட்சியைக்காண, இறைவனையே காண்பதுபோல்,

(9ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் சென்ற ஆண்டிலே நாலாயிரம் தொன் காகித உற்பத்தி

## வாழைச்சேனைத் தொழிற்சாலையின் சாதனை

"இதுவரை என்றுமில்லாதபடி வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலையிலே சென்ற வருஷம் 4187 தொன் காகிதம் உற்பத்தியாகியுள்ளது. அங்குள்ள மெஷின்களைக் கொண்டு ஒரு நாளுக்குச் சராசரி 12அரை டன் தான் உற்பத்தி செய்ய முடியுமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், நாளொன்றுக்கு 16 தொன் வீதம் உற்பத்தி சென்ற வருஷம் நடந்துள்ளது" என்று வாழைச்சேனை கிழக்குப்பகுதி காகிதத் தொழிற்சாலையின் நிர்வாக அறிக்கை தெரிவித்துள்ளது.

1955ஆம் வருடத்தில் கைத்தொழில் இலாகா, புதிய கார்ப்பரேஷனிடம் நிர்வாகத்தை ஒப்படைத்தபின் 3 வருஷங்களில மொத்தம்2990தொன் தான் உற்பத்தி செய்ய முடிந்தது. (1956ஆம் வருஷம் 376 தொன் 57இல் 1379 தொன், 1958இல் 1235) அதாவது சென்ற உற்பத்தியில் முக்கால் பங்குதான், முந்திய மூன்று வருடங்களிலும் சேர்ந்து உற்பத்தியாயிற்று.

பல நிபுணர்கள் கூறியுள்ள யோசனைகளில் சிலவற்றை அமுல் நடத்தினுல் 6000 டன் வரை உற்பத்தியைப் பெருக்கிவிட முடியும்.

இப்போது வெளிநாடுகளிலிருந்தே 40 முதல் 60 சதவிகிதம் மரக் கூழ் வரவேண்டியுள்ளது. இனி தக்க சீர்திருத்தங்களைச் செய்ததும் இந்த விகிதத்தை 15 முதல் 30 சதத்துக்கும் குறைத்துவிடலாம்.

சென்ற ஆண்டில் உற்பத்தியான காகிதத்துக்காக 3150 தொன் நெல் வைக்கோல், 515 இல்லுக் புல்,2391 தொன் இறக்குமதி மரக்கூழ் (பல்ப்) 1850 தொன் ரஸாயனப் பொருள்கள் இவை பயன்படுத்தப்பட்டுள்ளன. மரக்கூழில் பெருமளவு ருஷியாவிலிருந்து கிடைக்கிறது. இலங்கையிலே உள்ள மரங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்தால் தக்கமரங்களைப் பாவித்து இந்த இறக்குமதியை வெகுவாகக் குறைக்கலாம். பரந்தனிலுள்ள ரஸாயன தொழிற்சாலையில் பூரண உற்பத்தி நடைபெறுகையில், அப்பொருள்களையும் இங்கேயே பெற முடியும். ஆகவே நமது, செல்வம், இதற்காக இந்நாட்டைவிட்டு வெளியேருமல் தடுக்கலாம்.

இத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் அநேகமாக எல்லாக் காகிதங்களையும் அரசாங்கமே வாங்கிக் கொள்ளுகிறது. அரசாங்க நிர்வாக அறிக்கைகள்,விண்ணப்பங்கள் ரிஜிஸ்தர்கள், டெலிபோன் புத்தகம் முதலியனவெல்லாம் நமது இலங்கையில் உற்பத்தியாகும் காகிதத்திலேயே அச்சடிக்கப்படுகின்றனவென்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் காகிதத்தின் தரம் மிக திருப்தியாக இருப்பதாயும், எல்லா விதங்களிலும் பாவனைக்கு உகந்ததாக இருப்பதாயும், அரசாங்க அச்சுக்கூட அதிகாரி தெரிவிக்கின்ருர்.

எழுதும் காகிதம் டுப்ளிகேடிங் காகிதம் இவை எல்லா அரசாங்கக் காரியாலயங்களிலும் உபயோகிக்கப்படுகின்றன. பள்ளிக்கூடநோட்டுப்புத்தகங்களுக்கு உகந்த காகிதமும் உற்பத்தியாவதால், இலங்கையில் தயாரிக்கும் நோட்டுப் புத்தகங்களுக்கு இக்காகிதத்தையே உபயோகிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இம்மாதத்திலிருந்து இந்த நோட்டுப் புத்தகங்கள் பொது மக்களுக்கு சரசமான விலைக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கும். தனிப்பட்டவர்களுக்கும் இக் காகிதம் கிடைக்கும்படியாக, கொழும்பிலே, ஒரு விற்பனை டிப்போவை ஆரம்பிக்க ஒழுங்குகள் நடைபெறுகின்றன.

உற்பத்திச் செலவுகள் நியாயமான அளவுக்குக் குறைந்துள்ளன. 1960ஆம் வருஷத்தில் இச் செலவுகள் மேலும் குறைந்து, இந்த வாழைச்சேனை காகித தொழிற்சாலை லாபகரமாக நடக்கும்படியாக இருக்கலாம்.

# 'தமிழ்ப் பிரதேசங்களில் தமிழை அரசாங்க மொழியாக்க வேண்டும்'

—அல்பிரெட் தம்பியையா

'ஈழநாடு' 9-1-60 இதழில் ஊர்காவற்றுறைத் தொகுதியில் போட்டியிடும் திரு. அல்பிரெட் தம்பியையா அவர்களின் மொழிக் கொள்கை பற்றிய கருத்து மிகச் சுருக்கமாக வெளியிடப்பட்டது. இது சில தப்பபிப்பிராயங்களை ஏற்படுத்தியுள்ளது. மொழி சம்பந்தமாக அவர் கூறிய விபரம் வருமாறு:

தமிழ் மக்களின் முன்னேற்றத்துக்காகத் தமிழ்ப்பிரதேசங்களில் தமிழை அரசாங்க மொழியாக்கவேண்டும். இதனை உடனடியாகச் சட்டமாக்க வேண்டும். அத்துடன் இலங்கையின் எந்தப்பகுதியில் உள்ள தமிழ் மக்களும் அரசாங்கத்துடன் தம் தாய்மொழியின் மூலமாகவே தொடர்பு வைத்துக் கொள்ள வசதிகள் பெறவேண்டும். இதுவும் உடனடியாகச் சட்டமாக்கப்படவேண்டும். இக் கொள்கைக்காகப் போராடுவதே எனது இலட்சியம்.

## ருஷிய இராணுவபலம் குறைக்கப்பட்டது

ருஷியா தனது இராணுவத்திலுள்ள ஆள்பலத்தை மூன்றில் ஒன்று குறைத்துள்ளது. "மொத்தம் 36 இலட்சம் பேரிருந்த இராணுவத்தை 24 இலட்சத்துக்குக் குறைத்துள்ளோம். இதனுல் 170 கோடி ரூபிள் லாபமாகும். என்ருலும் ருஷியா புதிய பயங்கர ஆயுதங்களை வைத்திருப்பதால் அதன் இராணுவ சக்தி குறையவில்லை. 100 ராக்கெட்டுகள் 2 இலட்சம் சதுர மைல் விஸ்தீரணத்தை சர்வ நாசமாக்கிவரும். யாரையும் பயமுறுத்துவதற்காக இதைக் கூறவில்லை. எல்லா சர்வதேச பிரச்னைகளையும் சமாதான முறையிலே தீர்க்கவேண்டும் என்பதே எங்கள் அவாவாகும்" என்று குருஷேவ் அறிவித்தார்.

ருஷிய இராணுவ ஆட்பலத்தைக் குறைத்திருப்பதை அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி எல்லாம் வரவேற்றுள்ளன.

# சிங்களவர் தமிழ் கற்க வேண்டும்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தென்ருலும், அதற்கான விதிகளைத் தயாரித்து,அதை நடைமுறைக்குக் கொண்டுவர, பண்டாரநாயக்காவின் அரசாங்காம் கடைசிவரை ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டது.

ஆனல் தனிச் சிங்களச்சட்டத்தைநடைமுறைக்குக்கொண்டுவர பகீரத முயற்சி எடுக்கப்பட்டும் அது வெற்றியடைய முடியவில்லை. சிங்கள பெரிய அதிகாரிகளில் பலருக்குச் சிங்களம் சரியாகத் தெரியாது. சில இலாக்காக்களில் ஆங்கிலத்துக்கு பதில் கட்டாய சிங்களம் புகுத்தப்பட்டதென்ருலும், சிங்களம் தெரியாத அதிகாரிகள், கடிதங்களை தமக்குக்கீழே வேலைசெய்பவர்கள்மூலம் விஷயத்தைத் தெரிந்துகொண்டு உத்தரவுபோடவேண்டியிருந்தது. இதனுல் நிர்வாகஊழல் அதிகரித்து, காரியாலய ஒழுங்குக்குக் கேடு ஏற்பட்டது. அதுமட்டுமல்ல பல காரியாலயங்களிலும், தமிழ் அதிகாரிகள் மானம் மரியாதையுடன் வேலைசெய்ய முடியவில்லை. வகுப்புவேற்றுமை அதிகரித்து நிலமை மிகவும் மோசமாயிற்று.

எந்த மொழியில் கடிதம் வருகிறதோ அந்த மொழியில் பதில் அளிக்கும் கொள்கையால், ஒருவேலைக்கு இரண்டு சிப்பந்திகளைநியமிக்கவேண்டியதாயிற்று. இதனுல் நிர்வாகச் செலவும் அதிகரித்தது.

அரசாங்கத்தில் வேலை செய்ய விரும்புவர்களுக்கெல்லாம் இருமொழிகளிலும் ஓரளவு பயிற்சி இருக்கவேண்டுமென்றும், ஆங்கிலம் கட்டாயமாகத் தெரிந்திருக்க வேண்டுமென்றும் நிபந்தனை இருந்தால், மொழிக்குழப்பங்களின்றிப் போவதுடன், செலவும் குறைந்து, காரியாலத்தில் ஒழுங்கு மீண்டும் ஏற்படலாம்.

இந்த உண்மை பண்டாரநாயக்காவுக்கும் தெரியும்என்ருல் 'தனிச்சிங்கள' புலிவாலை பிடித்துக்கொண்ட அவர் அதைவிட முடியாமல் முடிவில் அந்தப் புலிக்கே பலியாகிவிட்டார்.

யு. என். பி. தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியுள்ள மொழிக்கொள்கைக்கும் களனி மகாநாட்டில் நிறைவேற்றிய கொள்கைக்கும் அதிகவேற்றுமையுண்டு.

களனித் தீர்மானமே, 'தனிச் சிங்களம்' என்று கூறியது. தமிழுக்கோ, ஆங்கிலத்துக்கோ அதில் இடமே அளிக்கப்படவில்லை.

ஆனல் இப்போது டட்லியின் தலைமையில், தயாராகியுள்ள யு. என். பி.யின் புதிய மொழிக் கொள்கையின்படி, சிங்களம், தமிழ், ஆங்கிலம் இம்மூன்றுக்கும் இடமளிக்கப்பட்டுள்ளது.

"சிங்களம் அரசாங்க மொழி" என்று கூறியிருப்பினும், பள்ளிக்கூடங்களில் ஆங்கிலத்தை எல்லாரும் இரண்டாவது மொழியாகக் கட்டாயமாகக் கற்க வேண்டுமென்கின்றனர். ஆகவே, அரசாங்க சேவையில் ஈடுபடுபவர் அனைவருக்கும்ஆங்கிலம் தெரிந்திருக்கும். (ஆங்கிலம் தெரியாத சுயபாஷா குமாஸ்தாக்களை நியமித்துவிட்டு, பல இலாகாக்களிலும் படும் அவதியும் பகிரங்க ரகசியம், அவர்கள் வேலையின்றி சம்பளம் வாங்கி வருகிருர்கள்!)

"அவரவர்கள் தாங்கள் கல்வி கற்ற மொழியில், அரசாங்க சேவைக்கான பிரவேசப் பரீட்சை எழுதலாம். ஆனல் சேவையில் சேர்ந்தபின் மற்ற தேசியமொழியை ஓரளவு பயில வேண்டியிருக்கும்" என்பது விஞ்ஞாபனத்தின் வாசகம். மற்ற தேசியமொழி என்பதென்ன? இலங்கையில் எவ்வளவு தேசியமொழிகளுண்டு? இரண்டென்றும், சிங்களமும், தமிழுமே அவை என்பதும் ஏற்கனவே சட்ட மூலம் ஒப்புக்கொண்ட விஷயம். அதனுல்தான் "நியாயமான தமிழ்" உபயோக மசோதாவையும் எம். ஈ. பி. ஆட்சியும் நிறைவேற்றவேண்டியதாயிற்று.

இதன்படி பார்த்தால் சிங்கள மூலம் கல்வி கற்றவர் அரசாங்க சேவையில் சேர்ந்தபின் மற்றதேசிய மொழியான தமிழை ஓரளவு கற்கவேண்டுமென்றும் தமிழ் மூலம் கல்வி பயின்றவர் மற்றதேசிய மொழியான சிங்களம் கற்கவேண்டுமென்றும் ஏற்படுவதாக இருக்கும்.

இந்த ஏற்பாடு நாடெங்கும் நடைமுறைக்கு வருமானல் அரசாங்கக்காரியாலங்களில்மொழி பற்றிய மண்டையிடிகள் தீருவதுடன் தமிழரும் மானத்துடனே சரிசமமாக எங்கும் வேலை செய்ய முடியும். தமிழ் மொழிக்கு அரசாங்க அந்தஸ்து கிடைப்பதாக இருக்கலாம். இதை சமஅந்தஸ்தென்று கூற முடியாவிடினும், நாடெங்கும் தமிழர் பரவி தன்மானத்துடன் வசிக்க இடமேற்படலாம்.

ஆனல் இதில் பெரிய குறை யாழ்ப்பாணம் முதலிய தமிழ்ப் பகுதிகளில் கச்சேரி முதலியவற்றில் சிங்களமே அரசாங்க மொழியாக மாறிவிடவேண்டியிருக்குமா என்பதுதான்.

அப்படி மாருதென்றும் பொது மொழியாகவுள்ள ஆங்கிலம் நீடித்திருந்து வருமென்றும் இரு பாலாரும் மூன்று மொழிகளையும் கற்கும் போது மொழி பற்றிய மண்டையிடிகளே உண்மையில் நீங்கிவிடுமென்றும் யு. என். பி. யைச் சேர்ந்த ஒரு தலைவர் விளக்கினர்.

ஆனல் இந்த விபரங்களை வகுப்புவாதிகள் சிலர் யு. என். பிக்கு எதிராகத் தேர்தலில் பிரசாரம் செய்ய பயன்புடுத்தலாமென்றும் அஞ்சப்படுகிறது.

## சின்னச் சிதம்பரம்

[8ஆம் பக்கத் தொடர்ச்சி]

மனமெல்லாம் குளிர்ந்தது. இவ்வளவு பக்தி நிறைந்த ஒரு சமுகத்தை இறைவன் என்றும் விடான், எப்படியும் அவன் காப்பான் என்ற நம்பிக்கையுடன் திரும்பினேன்.

விழாவைப் பற்றி எவ்வளவோ எழுத வேண்டும். பிறகு வேறிடத்தில் எழுதுகின்றேன்.

—ஜயாறன்

# மலை நாட்டில் பொங்கல் விழா

— ஸி. வி. வேலுப்பிள்ளை —

தமிழனுக்கு பொங்கல் ஒரு புனித விழா. திண்ணையிலும் சுவரிலும் கோலம் திகழும். வாசலில் மாவிலையும் தோரணமும் பரிமளிக்கும். பாற்சர்க்கரைப் பொங்கல் விம்மியெழுந்து வழிவதை சுடர்விடும் கண்கள் ஆவலுடன் நோக்கும். சங்கநாதமும் சேகண்டியும் வாத்திய இசை ஒலிக்கும். சூரியதேவனுக்கு நன்றிசெலுத்தும் இந்நந்நாளில் ஆண்களும் பெண்களும், முக்கியமாக சிறுவர் சிறுமியர் 'பொங்கலோ பொங்கல்' என்று மகிழ்ந்து கொண்டாடுவார்கள்.

'பொங்கலோ பொங்கல்'— ஆயிரம் சந்ததியாரின் மகிழ்ச்சிக் குரல் இதில் எதிரொலிக்கிறது. அவர்களுடைய ஆனந்தக்களிப்பு இதில் தொனிக்கிறது. கரிய மழைமேகங்கள் மடைதிறந்தாற்போல சொரிந்து, குளங்களையும் வாவிகளையும் நிரப்பின. பூமாதேவி புத்தம் புதிய பச்சை ஆடையை அணிந்து அனந்தகோடி மலராபரணங்களால் தன்னை அழகு செய்துகொள்வாள். பலவகையான பழங்கள் மூலம் தனது அன்பை வெளியிடுவாள். இப்படியான சமயத்தில் தான் தைத் திருநாள் வந்தது. அதை மக்கள் ஆரவாரத்துடன் வரவேற்றனர்.

பொங்கலுக்கு முதல்நாள் போகிப்பண்டிகை. வானத்தையும் மழையையும் ஆளும் தெய்வமாகிய இந்திரனையே போகி என்றழைப்பார்கள். எனவே போகிப்பண்டிகை இந்திரனுக்கு வணக்கம் செலுத்தும் விழாவாகும். இதையே தான் ஆதிகாலத்தில் இந்திரவிழா என்றழைத்து 28 நாட்கள் கொண்டாடினர். நெல்வயல்களில் பாடுபட்டுழைத்த உழவன் அறுவடையை முடித்துக் கொண்டு இவ் விழாவைக் கொண்டாடுவான. சமாதானத்தையும் சந்துஷ்டியையும் கொண்டு வருவது இப்பண்டிகை. இக்காலத்தில் பொங்கலை உழவர் தினமென்று கொண்டாடுகிருர்கள். இதுவே தமிழ் பாட்டாளி மக்களின் ஆனந்தப் பெருநாள்.

போகிப் பண்டிகைக் கடுத்த பொங்கல் பண்டிகையிலன்று பழைய பானை சட்டிகளையும் ஆடைகளையும் அகற்றிவிட்டு புதிய பாத்திரங்களையும் துணிமணிகளையும் வாங்கி, சூரிய பகவானுக்கு நன்றிகூறி புதுப் பொங்கல் பொங்குவார்கள்.

இதற்கடுத்த நாள் மாட்டுப் பொங்கல் நடக்கும். கமக்காரனின் இணைபிரியாத் தோழர்களாகிய இந்தப் பிராணிகளே அவனுடன் அல்லும் பகலுமாக உழைத்து கூடையை நிரப்பின. பசுக்களையும் எருதுகளையும் நன்ருகக் குளிப்பாட்டி, எண்ணை தடவி, சந்தனம், குங்குமம் இடுவார்கள். பசுக்களுக்கு பிரதான கவனம் செலுத்தப்படும். ஏனென்ருல் அவையன்ரே அவனுக்கு பாலையும் எருவையும் அளிப்பன. கால்நடைகள்மீது உழவனுக்கு எவ்வளவு அன்பும் பற்றுதலும் உண்டென்பதை மாட்டுப் பொங்கல் சித்தரிக்கிறது. பொங்கல் படையலுடன் உழவுக் கருவிகளும் சேர்த்து வைக்கப்படும். அடுத்த வருடத்திலும் தானிய நிறைவு வேண்டுமல்லவா?

தமிழன் தான் சென்றவிடமெல்லாம் தனது பண்பாட்டையும் பழக்கவழக்கங்களையும் கொண்டு சென்றிருக்கிருன். யாழ்ப்பாணம், மலைநாடு, தென் ஆபிரிக்கா, பிரிட்டிஷ் கயனு, ட்ரினிடாட்— இவ்விடங்களில் எல்லாம் பொங்கல் கொண்டாடப்படும். கொண்டாட்ட முறைகள் சற்றே வித்தியாசப்பட்டாலும் நோக்கம் ஒன்றுதான்.

இலங்கையின் மலைநாட்டில் பொங்கல் ஆரவாரம் ஒரு மாதத்துக்கு முந்தியே ஆரம்பித்துவிடும். மார்கழி மாதம் பீடை மாதம் என்று கருதப்படுகிறது. எனவே அந்த மாதத்தின் பீடை பிணிகளை அகற்றுவதற்காக, வாலிபர்கள் பஜனை கோஷ்டிகளை ஏற்படுத்துவார்கள். ஒவ்வொரு நாளும் இராப் போசனத்தை முடித்துக்கொண்டு தோட்டத்துக் கோயிலில் கூடியிருந்து ஒத்திகை நடத்துவார்கள். இந்தக் காலத்தில் காந்திஜியின் "ரகுபதி ராகவ ராஜாராமும்", சிலவேளை சினிமாப் பாட்டுகளும்கூட இந்த பஜனைகளில் புகுந்துவிடும்.

(அடுத்த இதழில் முடியும்)

# தமிழினம் போற்றும் தைத்திருநாள்

— கு. நாராயணசாமி, பி. ஏ. —

தமிழ் மக்களின் திருநாட்களில் சிறப்பிடம் பெற்றுவிளங்கும் தைப்பொங்கல் தினம் எவ்வாறு தோன்றியதென்ருே எப்போது தோன்றியதென்ருே எவரும் திடமாகக் கூறுவதற்கில்லை. தமிழ்மக்களின்- குறிப்பாக, இந்துமக்களின் கொண்டாட்டங்களில் ஒன்ருக விளங்கி அவர்களின் கலாச்சார வாழ்வில் ஒன்றிப் பிணைந்துவிட்ட இத்திருநாள் சிறப்பாக உழவர் பெருமக்களுக்கு உரியதாகும். உழைத்து உழைத்து ஒய்ந்து பேரனைகைகளால் ஒய்யாரமாகப் பானைபிடித்து, பால் சொரிந்து, வயல் விளைவாம் நெல்லைக் குற்றி அரிசியாக்கி அதையும் சொரிந்து, ஞாயிற்றின் நல்லுதவிக்கு நன்றிதெரிவித்து ஆடிப்பாடி அகமகிழும் இத்திருநாள் உழவர் வாழும் இடமெல்லாம் தனிச்சிறப்புடன் கொண்டாடப்பட்டு வந்திருக்கவேண்டும். காலப்போக்கில் ஏர் உடையோர் வழியதே உலகம் என்ற கொள்கை வலுப்பெற, உழவர் திருநாள் மக்கள் திருநாளாக— அதுவும் தமிழ்மக்கள் திருநாளாக உருவாகியிருக்கவேண்டும்.

## சூரிய வழிபாடு

சூரியனை வணங்கும்முறை தொன்றுதொட்டு உலகெங்கும் பரவலாக இருந்து வந்தது. எமது மூதாதையரும் சூரியனை வழிபட்டனர் என்றே வரலாறு கூறுகிறது. சூரியவழிபாடுதொன்று தொட்டிருந்து வந்தபோதும்தைமுதல்நாளில் சூரியனைச் சிறப்பாக வழிபடக்காரணமுண்டு. சூரியன் தென்முகம் நோக்கிச் செல்லும் காலம் நோய், பிணி, இறப்பு முதலியவை மலிந்து காணப்படுமென்றும், வடமுகம் நோக்கிச் செல்லும்கால் அமைதியும், இன்பமும், செல்வமும் பூத்துக்குலுங்குமென்றும் நம்மக்கள்நம்பி வந்தார்கள். இதன் விளைவே சூரியன் வடமுகம் நோக்கிச் செல்லப்புறப்படும் தைமுதல் நாள் கொண்டாட்டத்திற்குரியதாக எடுத்துக் கொள்ளப்பட்டது. நோயும் பிணியும் மக்களை வாட்டிவதைக்கும் மாதமே மார்கழி என மக்கள் நம்பினர். மார்கழிமாத நோன்புகளுக்கெல்லாம் காரணமும் இந்நம்பிக்கையேயாகும். தைத்திங்களின் உதயம் மக்கள் மனத்தில் நம்பிக்கையையும்ஒரு உல்லாச மனப்பான்மையையும் வளர்த்தது. "தைபிறந்தால் வழிபிறக்கும்" என்ற அசையாத நம்பிக்கை மக்கள் மனதில் வேருன்றியது. எனவே நற்பண்புகளின் வரவை மக்கள் சூரியனைவழிபடுமுகமாக வரவேற்று பொங்கி மகிழ்ந்து "பொங்கலோ பொங்கல்" எனப்பாடி மகிழ்கின்றனர்.

## மூவகை

பொங்கலிலும் மூன்று வகை உண்டு. இந்தியாவிலும் இலங்கையிலும் மிளகு பொங்கல், வெண்பொங்கல், சர்க்கரைப் பொங்கல் என மூவகைப் பொங்கல்கள் வழக்கிலுண்டு. இலங்கையில் பிற்குறிப்பிட்ட இரு வகைகளுமே பெரும்பான்மையாகக் காணப்படுகின்றன. அரிசியை மாத்திரம் அவித்து அதற்குச் சுவையூட்டும் பண்டங்கள் சேர்க்கப்படாமல் பொங்கப்படுவது வெண் பொங்கல். சர்க்கரை, பால், முதலியவை சேர்த்துப் பொங்கப்படுவது சர்க்கரைப் பொங்கல். இனிப்புச் சேர்க்காது, நெய், மிளகு முதலியவை சேர்த்துப் பொங்கப்படும் பொங்கலே மிளகு பொங்கல் எனப்படும். ஒவ்வொருவீட்டிலுமுள்ள குடும்பத்தவரே பொங்கலுக்கெனச் செய்யப்பட்ட அடுப்பின்மேல் பொங்கற் பானையை வைப்பர். பிராமணர் தமிழ்நாட்டில் ஆதிக்கம்செலுத்தத் தொடங்குமுன் ஒவ்வொரு குடும்பத்தினரதும் தலைவரே குடும்பவிழாக்களில் தலைமை வகித்தார் போலும். வயது வந்தோர் இன்னல்கள் மறைந்து இன்பம் பெருக விழையும் இந்நன்ளில் சிறுவர் பட்டாசுகள் கொளுத்தி மனமகிழ்ந்து இருப்பர். வாலிபர்களும், இளயுவதிகளுமோ, தைபிறந்ததால் திருமணத்துக்கும் வழிபிறக்கப் போகின்றதெனக் குதூகலித்திருப்பார்கள்! வயது முதிர்ந்தோர், வாலிபர், இளையோர் யாவர்க்கும் ஒருங்கே மகிழ்ச்சி பொங்கும் நன்ளாக விளங்கும் தைப்பொங்கல் தினம் தமிழர் திருநாளில் தலைசிறந்ததன்ருே!

## உழவன் செல்வம்

மார்கழிமாத மழையிருட்டில் மூழ்கிக்கிடந்த மக்கள் தைத்திங்கள் முதல்நாளே சூரியன் வரவைக் கண்டு மனமகிழ்ந்து அவனை வாழ்த்தி, பொங்கிப் படைத்துப் பெருமிதம் கொள்வதோடன்றி செல்வத்திற்கெல்லாம் காரணமாக விளங்கும் மாட்டுக்கும் தைத்திங்கள் இரண்டாம் நாள் பொங்குகின்றனர். ஏரும் மாடுமில்லையெனில் உழவரின் வாழ்க்கைவரட்சியுற்றுவிடும். உழவர் வாழ்க்கை வரட்சியுற்ருல் உலகோர் வாழ்க்கையும் அதே நிலைதான்! ஆகவே தான், உழவன் தனது செல்வத்துக்கெல்லாம் காரணமாக விளங்கும் மாட்டைப் போற்றுகின்ருன். வயலில் உழைத்து உருகிப்போன மாட்டுக்கும், பால் தந்து செல்வத்தைப் பெருக்கிய மாட்டுக்கும் வணக்கம் செலுத்தும் முகமாக அவன் பொங்கிப் படைக்கின்ருன். மாட்டின்கழுத்தில் வடையாரத்தையும் பூமாலையையும் போட்டு அழகுபார்க்கிருன். இதுவே "மாட்டுப் பொங்கல்" எனப்படும். உழவனே முதலில் கொண்டாடிய மாட்டுப் பொங்கல் இப்போது எல்லோராலும் கொண்டாடப்படுகிறது மாட்டுப் பொங்கலன்று மாடுகளுக்கு ஒரே சுதந்திரம் தான். வயலில் பயிரைத்தின்ருல்கூட அன்று அவர்களுக்குத் தண்டனையில்லை!

தமிழர் போற்றும் தைப்பொங்கல் தினம் அவர்கள் வாழ்க்கையோடு, அவர்களது பொருளாதாரத்தோடு நெருங்கிய தொடர்புடையது. பொருளாதார வளத்துக்கும் வாழ்க்கை நலனுக்கும் வழிவகுக்கும் நன்ளாக விளங்கும் இத்திருநாள் புதிய தமிழாண்டின் வருகையையும் உணர்த்தித் தமிழ் மக்களின் புத்தாண்டு முயற்சிகளுக்கெல்லாம் அடிகோலுகிறது.

# கோடிக் கரங்கள் குவித்திடுவோம்!

— திமிலைத்துமிலன் —

"ஒல்லிக் குளத்துக் கழனியெல்லாம் ஒரே
நெல்லாய்க் குவியுது பாருமச்சான் – தங்க
நெல்லாய்க் குவியுது பாருமச்சான்!" – "உந்தன்
பல்லெனும் முத்திற் பவளம் தவழ்கையில்
பத்தரை மாற்றுத்தான் ஏதுக்கடி? – அந்தப்
பத்தரை மாற்றுத்தான் ஏதுக்கடி?"

"கோலம் புனைந்து குளத்தில் குளித்தாச்சு
குங்குமத் தட்டைக் கொடுங்கமச்சான் – அந்தக்
குங்குமத் தட்டைக் கொடுங்க மச்சான்!" –"புதுச்
சேலை யுடுத்தித் திரும்பும்முகத்திலே
செக்கச் சிவந்தே தெரியுதடி! – அது
செக்கச் சிவந்தே தெரியுதடி!"

"போதும் பரிகாசம் பொங்கல் முடிக்கல்ல
பூவொடு மஞ்சளும் எங்க மச்சான்? – வைத்த
பூவொடு மஞ்சளும் எங்க மச்சான்?" –"அடி
மாதே குழல்தான் மலராய்ச் சிரிக்குதே
மஞ்சள் முகத்தில் யொலிக்குதடி! – இதோ
மஞ்சள் முகத்தில் யொலிக்குதடி!"

"முக்கனி சர்க்கரை அற்புதப் பொங்கலை
மோதகத்தோடு படையேன் மச்சான்! – இந்த
மோதகத்தோடு படையேன் மச்சான்!" –"இந்தத்
தக்காளிக் கன்னம் அமுதம் படைக்கையில்
சர்க்கரைப் பொங்கல்தான் ஏதுக்கடி? – வெறும்
சர்க்கரைப் பொங்கல்தான்ஏதுக்கடி?"

"தென்றல் மிதந்திடக் கொண்டல் தவழ்ந்திடத்
தெய்வ ஒளிக்கீற்றைப் பாருமச்சான் – ஒரு
தெய்வ ஒளிக்கீற்றைப் பாருமச்சான்!" –"நம்மைக்
கொன்ற பசிப்பிணி அன்றே மறைந்தது
கோடிக் கரங்கள் குவித்திடுவோம் – ஒரு
கோடிக் கரங்கள் குவித்திடுவோம்!"

"பாரைப் படைத்த கதிரவனே! கையில்
ஏரைக் கொடுத்த புவிமகளே! -- இந்த
ஏரைக் கொடுத்த புவிமகளே!" -- "என்றும்
காரைப் பொழியப் புரியவேணும் இவள்
கண்கள் சிரிப்பைச் சொரிய வேணும் -- இவள்
கண்கள் சிரிப்பைச் சொரியவேணும்!"

# பாரபட்சமான குடியேற்றம் சமசமாஜக்கட்சி ஆட்சியில் நடைபெருது

## யாழ்ப்பாணத்தில் சமசமாஜிகள் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் 10-1-60 ஞாயிற்றுக்கிழமை, சமசமாஜக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. இப்பொதுக் கூட்டத்துக்குக் கட்சியின் சார்பில் சாவகச்சேரியிற் போட்டியிடும் அபேட்சகர் திரு. ஏ. எஸ். கனகரத்தினம் தலைமை வகித்தார்.

பொதுக் கூட்டம் ஆரம்பிக்கு முன்னரும், நடைபெற்றுக் கொண்டிருந்த போதும் மழை இடை இடையே பெய்த வண்ணமிருந்தது ஆனுலும்மழையைப் பொருட்படுத்தாமல் மக்கள் பேச்சாளரின் கொள்கை விளக்கங்களைக் கேட்டனர்.

தலைமை வகித்துப் பேசிய திரு. ஏ. எஸ். கனகரத்தினம், லங்கா சமசமாஜக் கட்சியின் கொள்கைளைப் பற்றிச் சுருக்கமாக எடுத்துரைத்தார். சமசமாஜக் கட்சி ஒரு சோஷலிசக் கட்சி என்றும், அது பல வருடகாலமாகத் தனது கொள்கைகளை நிதானமாகக் கடைப்பிடித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

வட பகுதியிற் போட்டியிடும் 11 சமசமாஜக் கட்சிப் பிரமுகர்களும் மேடையிற் பிரசன்னமாயிருந்தார்கள். யாழ்ப்பாணம் தொகுதி அபேட்சகர் திரு. ஏ. விசுவநாதன், சாவகச்சேரி அபேட்சகர் திரு. ஏ. எஸ். கன்கரத்தினம், நல்லூர் அபேட்சகர் திரு. ஏ. துரைராஜசிங்கம், கோப்பாய் அபேட்சகர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன், உடுப்பிட்டி அபேட்சகர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம், பருத்தித்துறை அபேட்சகர் திரு. ரி. ஜெயதேவன், காங்கேசன்துறை அபேட்சகர் திரு. வி. காரளசிங்கம், உடுவில் அபேட்சகர் திரு. பி. நாகலிங்கம், வட்டுக்கோட்டை அபேட்சகர் திரு. எஸ். சுந்தரசிவம், ஊர்காவற்றுறை அபேட்சகர் திரு.வி.வி.நல்லதம்பி, கிளிநொச்சி அபேட்சகர் திரு. வி. ஆனந்தசங்கரி ஆகிய பதினெரு அபேட்சகர்களும் பொதுக் கூட்டத்திற் கலந்து கொண்டனர்.

'மொழிப் பிரச்சினை, இந்தியத் தமிழர்-இலங்கைத் தமிழர் நட்புறவு, முஸ்லிம்- தமிழர் ஒற்றுமை, சிங்கள - தமிழர் கூட்டுறவு ஆகிய பெரும் பிரச்சினைகளிலெல்லாம் தமிரசுக் கட்சி தோல்வியடைந்துள்ளது. இன்று நாட்டிலே ஸ்திரமான அரசாங்கத்தை ஏற்படுத்தி, பொருளாதாரத்தை வளம்பெறச் செய்து, மக்களுக்கு அமைதியையும் சுபிட்சத்தையும் அளிக்கக் கூடிய கட்சி லங்கா சமசமாஜக் கட்சியே. ஆகவே எம்மைப் பார்லிமென்டுக்கு அனுப்பி வைத்து, டக்டர் என். எம். பெரேராவின் சமசமாஜ அரசாங்கத்தை நிறுவுவதற்கும், முதலாளித்துவ, எதேச்சாதிகார யு. என் .பியை முறியடிக்கவும் உதவி புரியுங்கள்' என்ற கோரிக்கையையே எல்லா அபேட்சகர்களும், அங்கு குழுமியிருந்த மக்களிடம் விடுத்தனர்.

குடியேற்றப் பிரச்சினை பற்றியும் பேச்சாளர் குறிப்பிட்டனர். லங்கா சமசமாஜக் கட்சியின் அரசாங்கத்தில், பாரபட்சமான குடியேற்றம் ஒரு போதும் நடைபெருதெனவும், ஒவ்வொரு பிரதேசத்திலுமுள்ள நிலமற்றவருக்கு, அவ்வவ் பிரதேசத்திலுள்ளவர்களுக்கு நிலமளிக்கப்பட்ட பின்னரே, பிறருக்குக் கொடுக்கப் படுமென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

# மொழிக் கொள்கை மாறவில்லையாம்

[7ஆம் பக்கத் தொடர்ச்சி]

விரிவாக்குதல். நிர்வாக சேவையை ஒரே சீரானதாகச் செய்யவேண்டும்.

மொழி விஷயம் (இது மேலே தரப்பட்டுள்ளது.)

லஞ்சம், முதலிய கேடுகளை எதிர்த்து ஒழிக்க தீவிர நடவடிக்கை எடுப்பது.

## சமூக சேவைகள்

மக்களின் அவசிய தேவைப் பொருள்களின் விலைகளைக் குறைத்து, பொதுவாக விலைகளை ஸ்திரப்படுத்தல்.

ஒரு தேசிய சம்பளத் திட்டம். சம வேலைக்குச் சம சம்பளம், பிரசவகால உதவிகள், குழந்தைகள் அலவன்ஸ், வயோதிகர் பென்ஷன் உள்ளிட்டு தேசிய சமூக பாதுகாப்புத் திட்டம்.

நகர, கிராம மக்களுக்கு குறைந்த செலவில் வீடுகள் அமைக்கும் திட்டம்.

தேசிய ஆயுர்வேத வைத்திய சேவையும் மின்சக்தி சுகாதார சேவையும்.

அரசாங்கப்பள்ளிக்கூடங்கள் மூலம் எல்லாருக்கும் போதிய கல்விவசதிகள்.சமயஸ்தாபனங்கள்பள்ளிக்கூடங்களை நடாத்தலாம். ஆனல் அரசாங்க உதவியை அவை எதிர் பார்க்க முடியாது. அரசாங்க விதிக்கிணங்க உயரிய முறையில் அப்பள்ளிக்கூடங்கள் இருத்தல் வேண்டும். இந் நிபந்தனைக்கு உள்ளாகாத பள்ளிக்கூடங்களை அரசாங்கம் எடுத்துநடாத்தும். அரசாங்கப் பள்ளிக்கூடங்கள், மாணவர்களுக்கு,பெற்ருேர்விருப்பப்படி போதனை அளிக்கும். எல்லாப் பள்ளிகளிலும் ஆங்கிலம் கற்பிக்கப்படும். ஆசிரியர்களுக்கு ஒரே சீரான சேவை ஏற்பாடு.

## ஜனநாயக உரிமை

பேச்சு, கூட்டம், சங்கம் கூடுவதற்கான சுதந்திரம் அளிப்பதுடன், இதைத் தடுக்கும் எல்லா அடக்குமுறை சட்டங்களும் நீக்கப்படும்.

அரசாங்க ஸ்தலஸ்தாபன சிப்பந்திகளுக்குப் பூரண தொழிற்சங்க உரிமைகள்.

எல்லா சிப்பந்திகளுக்கும் வேலை பாதுகாப்பு—தொழிற் சங்கத்தில் ஈடுபட்டவர்களை வேலை நீக்கம் செய்தால் தண்டனை. தொழிற் சங்கங்களைக் கட்டாயமாக அங்கீகரிக்கச் சட்டம் செய்ய வேண்டும்.

மத வழிபாடு, ஸ்தாபன சுதந்திரத்துக்கு உத்தரவாதமளிக்க வேண்டும்.


தேசிய கலாசார நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தல். பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளுக்குப் புறம்பான குடியரசைஏற்படுத்தல். செனேட்டை நீக்கி வாக்குரிமை சட்டத்தை ஜனநாயக முறையில் அமைத்தல்.

எந்த வல்லரசு கோஷ்டியிலும் சேராமல், எல்லா நாடுகளுடனும் நட்புறவு வைத்துக் கொள்ளல்.

இக்கட்சி 101 ஸ்தானங்களுக்கு நேர்முகமாகப் போட்டியிடுவதுடன் 8 சுயேச்சைவாதிகளை ஆதரிக்கிறது. வகுப்புவாதமற்ற முறையில் தீவெங்கும் தேர்தலில் ஈடுபடும் கட்சி இது ஒன்றே என்றும், பொருளாதாரத் துறையில் தக்க திருத்தம் செய்வதன் மூலமே நாட்டின் வேலையில்லாக் கஷ்டம் முதலிய வேறு பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமென்றும், இக்கட்சிக்கு சந்தர்ப்பம் கிடைத்தால், நாட்டு நிர்வாகத்தை மேலான முறையில் நடத்துமென்றும் விஞ்ஞாபனம் தெரிவிக்கிறது.

## உண்மைக் கதைகள்

### பனமாக் கால்வாய் - II



**பிரச்சினைகள்:** பனமாக் கால்வாய் வெட்டுவதில் இறங்கிய டி' லெஸெப்ஸ்ஸும், அவரது கோஷ்டியும் பல சிக்கல்களை எதிர்நோக்கவேண்டியிருந்தது. சூயஸ் கால்வாய் உருவாக்கப்பட்ட இடம் வரண்ட பிரதேசம்; வேலை செய்வதற்குச் சுகம். ஆனால், பனமாக் கால்வாய் உருவாக இருந்த இடம் ஈரமான நிலத்தையுடையது. அங்கு அணை கட்டுவது கஷ்டமாக விருந்தது.



**சுகாதாரம்:** கால்வாய் ஆக்குவதிலிருந்த சிக்கல்களுடன் டி' லெஸப்ஸுக்கும், கோஷ்டிக்கும் சுகாதாரப்பிரச்சினையொன்றும் ஏற்பட்டது. மஞ்சள் நோயும், மலேரியாக் காய்ச்சலும் தொழிலாளரைப் பீடித்தன. அந்த நாட்களில் அந் நோய்களுக்குத் தகுந்த மாற்று மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை.



**ஐக்கிய அமெரிக்கா:** டி' லெஸப்ஸ் பனமாவில் கஷ்டப்பட்டு உழைத்துக்கொண்டிருந்த வேளை, ஐக்கிய அமெரிக்கா, மத்திய அமெரிக்கக் கால்வாய்களுக்கான உரிமைகளைப் பிரான்ஸிடமிருந்து விலைக்கு வாங்கிவிட்டது. பின்னர், ஐக்கிய அமெரிக்கா பனமாவுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டது.

(தொடரும்)

# சிறுவர் பகுதி

## பொங்கலும் குரங்கும்

இ. வேந்தன் — பதிவு எண். 221

பொங்கலன்று ஒரே ஆரவாரம். மிருகங்கள் எல்லாம் விதம் விதமான ஆடைகள் அணிந்து குதூகலத்துடன் காணப்பட்டன. அப்போது அவர்களுடைய அரசனான சிங்கம் ஒவ்வொரு மிருகத்திடமும் பொங்கலுக்கு வேண்டிய பொருள்களைக் கொண்டு வருமாறு பணித்தது. காகம் அரிசியும், நாய் பானையும், பசு பாலும், தீக்கோழி நெருப்பும், யானை கரும்பும், குரங்கு பழங்களும் கொண்டு வர வேண்டுமெனச் சிங்கம் தெரிவித்தது. யானையையும் குரங்கையும் தவிர ஏனைய மிருகங்கள் பொங்கலுக்கான பொருள்களைக் கொண்டுவரச் சென்று விட்டன.

குரங்கு யானையிடம் சென்று, 'கஜ முகனே! அதோ அந்த ஆற்றுக்கு அக் கரையில் இருக்கும் தோட்டத்தில் ஏராளமான கரும்பும், பழங்களும் உண்டு. என்னை நீர் முதுகில் ஏற்றிக் கொண்டு சென்ருல் இருவரும் ஆனந்தமாய் சாப்பிட்டுவிட்டு, வரும்போது வேண்டிய கரும்பும், பழமும் கொண்டு வரலாம்' என்றது. மறுகணம் யானை குரங்கை முதுகில் ஏற்றிக் கொண்டு சென்றது. தோட்டத்துக்குள் சென்றதும் குரங்கு அங்குள்ள பழங்களைத் தின்ன ஆரம்பித்தது. யானைக்குக்கரும்பென்ருல் அதிக ஆசை. ஆகவே கரும்புத் தோட்டத்தை ஒரு கை பார்த்தது.

குரங்குக்கு வயிறு நிரம்பி விட்டது. யானைக்கு வயிறு நிறைந்ததா இல்லையா என்று கூட அது கவனியாமல் கூச்ச லிட்டு மரங்களிலுள்ள பழங்களைப் பாழ்படுத்தத் தொடங்கியது. இச் சத்தத்தைக் கேட்ட தோட்டக்காரன் அங்கு ஓடி வரவே குரங்கு இலைக்குள் மறைந்து கொண்டது. கரும்புத் தோட்டத்தில் யானையைக் கண்ட தோட்டக்காரன் ஓடோடியும் சென்று கிராம மக்களை அழைத்து வந்தான். தடிதண்டுகளுடன் அவர்கள் எல்லோருமாய்ச் சேர்ந்து யானையை நன்ருக அடித்து விட்டார்கள்.

யானை அரை வயிறோடு உடம்பெல்லாம் வலிக்க ஆற்றங்கரை போய்ச் சேர்ந்தது. அங்கே குரங்கு யானைக்காகக் காத்துக் கொண்டு நின்றது. யானை அதைப் பார்த்து, 'குரங்கே! நீ பெரும் சத்தமிட்டு சனங்களைவரவழைத்துஎனக்கு அடி வாங்கித் தந்தாயே. இது நியாயமா?' என்று கேட்டது. அதற்கு குரங்கு, 'யானையே, நான் என்ன செய்வேன்! என் மீது ஒரு குற்றமும் இல்லை. வயிறு நிறைந்தால் நான் அப்படித்தானே சத்தமிடுவது?' என்று சொல்லியது. இப்படிக் கூறி அடி வாங்கியதை நினைத்துத் தனக்குள்ளே குரங்கு சிரித்தது.

யானை ஒரு பதிலுமே கூறவில்லை. பின்னர் குரங்கு யானையின் முதுகில் ஏறியது. யானை ஆற்றைக் கடக்க ஆரம்பித்தது. நடு ஆற்றில் ஆழமான இடத்தை அடைந்ததும் யானை குரங்கைப் பார்த்து, 'அன்பனே, சாப்பாட்டுக்குப் பின்னர் நீராடுவதுஎனதுவழக்கம். ஆனபடியால்இப்போது குளிக்கப்போகிறேன்'என்றது. குரங்குக்குத் தூக்கிவாரிப் போட்டது. அதற்கு நீந்தவும் தெரியாது. யானை நீரில் மூழ்கினல், குரங்கின் கதி அதோ கதி தான்!

'ஐயா யானையாரே! என்னை மன்னித்துவிடும். நான் தெரியாத்தனமாய் உம்முடன் விளையாடி விட்டேன்'. என்றுகுரங்கு கெஞ்சிய போதே யானை நீரில் மூழ்கி எழுந்தது. குரங்கு மூச்சு விட முடியாமல் திக்குமுக்காடிப் போய் விட்டது. பல தடவை கெஞ்சிய பின்னரே யானை ஆற்றைக் கடந்து அக் கரை சென்றது. ஆனல் பொங்கலுக்குப் பழமும், கரும்பும் இல்லாமல் காட்டுக்குச் செல்ல முடியாதபடியால் யானை வேறு காட்டுக்குச் சென்றுவிட்டது. பழங்கள் தின்று நீரையும் மூக்குமுட்டக் குடித்தபடியால் குரங்குக்குத் தடிமல் பிடித்து விட்டது. பாவம், யானைக்கும் குரங்குக்கும் பொங்கல் விழா இப்படியாகி விட்டது!

## நரியின் சந்தேகம்

செல்விகா ஜெயகௌரி — பதிவு எண். 199

ஒரு காட்டில் ஒரு மரம். அந்த மரத்தின் நிழலில் ஒரு கல்லும் ஒரு இலையும் இருந்தன. கல் இலையைப் பார்த்து. "நீயும் நானும் சிநேகிதமாக இருக்கலாம்" என்று கூறியது.

இதைக்கேட்ட இலை, "நீயும் நானும் எப்படி ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க முடியும்?" என்று கேட்டது.

"இதென்ன கேள்வி? இப்போது காற்றடிக்கிறது என்று வைத்துக்கொள். உடனே நான் உருண்டு வந்து உன் மேல் உட்கார்ந்து கொள்கிறேன். அப்போது காற்று உன்னை அடித்துக் கொண்டு போக முடியாது" என்றது கல்.

இதைக் கேட்டதும் தன்னல் கல்லுக்கு எந்தவிதமான உதவியும் செய்ய முடியவில்லையே என்றுஇலைஏங்கிற்று. இதனைக் கண்டு கல் கூறியதாவது: 'நீயும் எனக்கு உதவியாக இருக்கலாம். மழை பெய்கிறது என்று வைத்துக்கொள். உடனே நீ வந்து என்மேல் உட்கார்ந்துவிட்டால் நான் மழையில் நனையமாட்டேன். இல்லையா?'

இலைக்குச் சந்தோஷம் தாங்கவில்லை.

இவையிரண்டும் இப்படிப் பேசிக்கொண்டிருந்ததை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த நரிக்கு அடக்க முடியாமல் சிரிப்பு வந்தது. 'ஹிஹ்ஹி' என்று சிரித்தும் விட்டது.

"என்ன நரியாரே? அப்படி என்ன சிரிப்பு?" என்று கேட்டது கல்.

"ஒன்றுமில்லை.' நீங்கள் பேசிக் கொண்டிருந்ததை எல்லாம் கேட்டுச் சிரிப்பு வந்தது, சிரித்தேன்,' என்றது நரி. அப்படிச் சிரிக்கும்படி தாங்கள் ஹாஸ்யமாகப் பேசவில்லையென்றது கல்.

"இல்லை! எனக்கு ஒரு சந்தேகம். மழையும் காற்றும் சேர்ந்தடித்தால் நீங்கள் எங்ஙனம் ஒருவருக்கொருவர் உதவி செய்வீர்கள்?" என்றது நரி. இதற்குப்பதில் என்ன சொல்வதென்றே தெரியாமல் கல்லும், இலையும் திகைத்தன.

தனது காரியம் முடிந்ததை எண்ணி மகிழ்ந்த நரியும் ஓட்டம் எடுத்தது.

அன்பான மருமக்களே,

அனைவருக்கும் வணக்கம். உங்களிற் பலர் எனக்குப் பொங்கல் வாழ்த்துக்கள் தெரிவித்திருக்கின்றீர்கள். அநேகர் அழகிய படங்களுடன் வாழ்த்துக்களை அனுப்பியிருக்கின்றனர். அவற்றை எல்லாம் படித்து மகிழ்ந்து கொண்டிருக்கின்றேன். அன்பு வாழ்க!

சின்னமாமா

## அல்பிரட் நோபெல்

சோ. மகிந்தா — பதிவு. எண்; 269

அல்பிரட் நோபெல் சிறந்த ஒரு கொடை வள்ளல். ஸ்வீடன் நாடு உலகுக்குத் தந்த மாணிக்கம். இவர் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர். உயர்தரப் படிப்பை நினைக்கவும் இல்லை, பள்ளிக்கூடப் படிப்பை முற்ருக முடிக்கவும் இல்லை. ஆனல் பிற்காலத்தில் அவர் டக்டர் பட்டம் பெற்ருர்.

இலக்கியம், வைத்தியம், விஞ்ஞானம், இரசாயனம், சமாதானம் ஆகிய இவை போன்ற துறைகளில் யார் சேவை சிறந்ததாக உலக நாட்டு வல்லுநரால் ஏற்றுக் கொள்ளப்படுகிறதோ அவர்களுக்கு நோபெல்பரிசை ஆண்டுதோறும் வழங்குமாறு ஏற்பாடு செய்துவிட்டுப்போன நோபெல் இவர்தான். அத்தோடு இவர் ஒரு சிறந்த விஞ்ஞானியும் கூட.

வீசி எறியப்படும் வெடி குண்டுகளையும், தகர்த்தெறிய மறைத்து வைக்கப்படும் டைனமிட்டுகளையும் நோபெல் தான் முதன் முதல் 1862-இல் கண்டு பிடித்தார். 1889-இல், புகையின்றி வெடித்து உலகையே நாசமாக்கும் வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்தவரும் அல்பிரெட்நோபெல் தான். இந்த இரண்டு பரிசோதனைகளும் அவரைக் கோடீஸ்வரன் ஆக்கின.

இவரை உலக மக்கள் எவருமே மறந்திட மாட்டார்கள். ஏனெனில், இவரின் மனிதகுல சேவையும், நோபெல் பரிசும் இவரை என்றுமே நினைவுபடுத்திக் கொண்டே இருப்பன.

## எனது பாடசாலை

து. நித்தியானந்தன் - ப. எ. 436

எனது பாடசாலை மன்னரிலே இருக்கிறது. அதன் பெயர் அர்ச்.புனித சவேரியார் கல்லூரி. இங்கே 250 மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். எனது பாடசாலையில் உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டம் போன்ற பல விளையாட்டுகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு வருடமும் விளையாட்டுப் போட்டி நடைபெறுகின்றது.

இங்கே மத்தியூஸ், அன்ருறு, பீட்டர் என மூன்று இல்லங்கள் இருக்கின்றன. எனது பாடசாலை காலைஎட்டரை மணிக்கு ஆரம்பமாகும். மத்தியானப் போசனத்துக்காகப் பன்னிரண்டு மணிக்கு ஓய்வுகிடைக்கும். அதன்பின் ஒன்றரை மணிக்குத்தொடங்கி மாலைமூன்றரைவரை வகுப்புகள் நடைபெறும். இங்கு கடமையாற்றும் தலைமை ஆசிரியர் வண. பிறதர் ஹிலரி. யோசேப் ஆவர். இங்கு ஐந்தாம் வகுப்புத் தொடக்கம் சிரேஷ்ட வகுப்புவரை வகுப்புகள் இருக்கின்றன. இங்கு, கணிதம், சரித்திரம், பூமிசாஸ்திரம், பொதுவிஞ்ஞானம் முதலிய பாடங்கள் படிப்பிக்கிருர்கள். இங்கு அழகிய பூந்தோட்டங்களும், பல புத்தகங்கள் உள்ள வாசிகசாலையும் உள.

## 'ஈழநாடு' சிறுவர் பகுதி

★ ஈழநாடு சிறுவர் பகுதியில் ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய அனைவரும் அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளலாம்.

★ அங்கத்தவராகச் சேரவிரும்புவோர் இங்கு வெளியாகும் விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி 23-1-60க்கு முன்னர் சின்னமாமா, 'ஈழநாடு சிறுவர்பகுதி', தபாற்பெட்டி எண் 49. யாழ்ப்பாணம் என்னும் விலாசத்துக்கு அனுப்பவேண்டும்.

### ஈழநாடு சிறுவர் பகுதி

விண்ணப்பப் பத்திரம்

(16-1-60)

அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு

வணக்கம்,

ஈழநாடு சிறுவர் பகுதியில் என்னை ஓர் அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்..............................................

விலாசம்..........................................

..........................................

..........................................

கையொப்பம்

பெற்ருர் அல்லது ஆசிரியரின் கையொப்பம்.

வயது............

அருள்வழி

# என்றும் மறவாத தூக்கிய திருவடி தரிசனம்

குனித்த புருவமும்,
கொவ்வைச் செவ்வாயில்
குமிண் சிரிப்பும்

பனித்த சடையும்,
பவளம்போல் மேனியில்
பால்வெண்ணீறும்

இனித்த முடைய எடுத்த
பொற்பாதமும்
காணப்பெற்ருல்

மனித்தப் பிறவியும்,
வேண்டுவதே இந்த
மானிலத்தே.

தில்லைச் சிதம்பரத்திலே நடராஜப்பெருமானின் இனித்த முடைய எடுத்த பொற்பாத தரிசனத்தை புனிதமான மார்கழி மாதம் திருவாதிரை நாளிலே இலட்சக்கணக்கானவர் காண்கிருர்கள். எல்லாச் சிவாலயங்களிலும் ஆருத்ராதரிசன ஆனந்தத்தை சைவ மக்களாகிய நாம் மெய்மறந்து பெறுகின்ரேம்.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற பஞ்சகிருத்தியங்களையும் செய்யும் சிதம்பரேசனை நடராஜப்பெருமானின் திவ்விய தரிசனத்தைக் கண்டு கண்டு நம் உள்ளமெல்லாம் குளிர்கின்றது. என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இந்தப் புனிதத் திருநாளிலே ஆனந்தத்தாண்ட அருட்கூத்தைக் காண!

## சச்சிதானந்தப்பொருள்

பாம்பும், புலியும், மெய்ப் பாடுபட்டுத் தேடி சிதம்பரத்திலே இந்த நடராஜப்பயிரைப் பயிரிட்டனராம். ஐயே மெத்தக் கடினம், பொய்யாத பொன்னம்பலத்தையா இருக்குமிடம் நையாத மனிதர்க்கு உய்யாது கண்டுகொள்ள என்று இடித்துச் சொல்லுகிருர் நந்தனர் எனும் திருநாளைப் போவார்.

அவ்வடியார்களுக் கெல்லாம் கண்டுகொள்ள அவ்வளவு அரிதாக இருந்த அந்த சச்சிதானந்தப் பொருளை, நாம் வெகு எளிதாகக் கண்டு கொண்டு விட்டோமே! இதற்கு ஏன் அவ்வளவு பாடுபடவேண்டும்? என்று நாம் நினைக்கின்ரேம்.

தூக்கிய திருவடி தரிசனத்தைக் காண்பது இவ்வளவு சுலபமா? இல்லை, இல்லை, புறக் கண்களால் காணும் இந்தக் காட்சி இன்பம் நீடித்திருக்க முடிகிறதா? அந்தக் காட்சி மறைந்ததும் நாமும் அதை மறந்து விடுகிரேம். அந்த இன்பமும் அத்துடன் முடிந்து விடுகின்றது. மீண்டும் நம் மனதிலே மாயையாகிற பாசி படர்ந்து வந்து பலவிதங்களிலும் நம்மை வருத்துகின்றது. ஆகவே நிலையான இன்பம்பெற முடியவில்லை. அதைப்பெறுவதெப்படி? திருவடிக் காட்சியினை எப்போதும் மறவாமல் அகக்கண்ணல் அதைப் பார்த்துக் கொண்டிருந்தால் தான் அந்த நிலையான இன்பம் ஏற்படலாம். அதைப்பெறத் தான் நமது சமய குருமார்கள் அரும்பாடு பட்டது. அதை நாமும் பெறமுடியுமா? முடியும். எப்படி? கடம்பமா காளை தாதை கழலடி காணக்கூடிய இந்த ரகசியத்தை நாவுக்கரசர் கூறுகின்ருர். அது என்ன?

"உடம்பெனும் மனைஅகத்து,
உள்ளமே தகழியாக
மடம்படு நெய்யை அட்டி,
உயிரெனும் திரிமயக்கி
இடம்படு நடனத்தீயால்
எரிகொள இருந்துநோக்கில்
கடம்பமர் காளை தாதை
கழலடி காணலாமே".

என்கிருர்.

நமது உடலாகிய இந்த வீட்டுக்குள்ளே உள்ளமாகிய தகழியில் உணர்வாகிய நெய்யினை ஊற்றி, உயிராகிய திரியைப் போட்டு ஞானமாகிற தீயால் எரிய விட்டால் அந்தப் பொற்பாதத்தைக் காணலாமென்கின்ருர். நமக்கு இது முடியக் கூடியதா? சுலபமா?

## அவனருளாலே...

நமக்கு இது எளிதல்ல. ஆனல் அந்தக் கூத்தப்பெருமானின் அருள் கிடைத்தால் இக் காட்சியினைநாம் பெறுவது அவலமே! அவன் அருளாலேயே அவன்தாள் வணங்க முடியுமென்கிருர் மாணிக்கவாசக சுவாமிகள். அவன் அருளைப் பெற வழி என்ன? கேட்டால் கொடுக்கப்படும். தட்டினல் திறக்கப்படும். கேட்பதுவே பிரார்த்தனை. கருணைவள்ளலான அவனை இடைவிடாமல் பிரார்த்தனை செய்வது ஒன்றுதான், அவன் திருவருளையும், அதனல் அவனது திருவடிக் காட்சியினையும் பெறுவதற்கு வழியாகும். உணவில்லாமல் நாள் கணக்கில் இருப்பேன். ஆனல் பிரார்த்தனை யின்றி ஒரு கணமும் வாழ முடியாதென்ருர் காந்தி அடிகள்.

இந்தப் பிரார்த்தனை வாயால் மட்டுமன்றி உள்ளத்தாலும், உடலாலும் இருந்தாலே உண்மையாகும். அவன் அளித்த இந்த உடலை அவன் பணிக்கே அர்ப்பணிப்பதே நம் கடன். நம் தூய உள்ளத்திலிருந்து அவன் கூறியதைக் கூர்ந்து கேட்டு, அதன்படி நடக்க உறுதி கொண்டோமாயின் நம்மை அவன் தனது ஆளாகக் கொண்டுவிடுகிருன். பின்னர் உள்ளும், புறமும், எங்கும் அவனையே, அவனது தூக்கிய திருவடிக் காட்சியினையே காணலாம். அதுவே ஜீவன் முக்தி. அதுவே நாம் இந்தப் பிறவி எடுத்ததின் பயனுமாகும்.

இறவாத இன்ப
அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்ருர்

பிறவாமை வேண்டும்,
மீண்டும் பிறப்புண்டேல்,
உன்னை என்றும்

மறவாமை வேண்டும்,

இன்னும் வேண்டும்,
நான் மகிழ்ந்துபாடி,

அறவா! நீஆடும்போது,
உன் அடிக்கீழ்
இருக்க என்ருர்.

இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க!

—அடியார்க்கடியான்.





இலங்கையின் ஏக விநியோகஸ்தர்கள்:

செட்டிநாட் கார்ப்பரேஷன் பிறைவேட் லிமிடெட்,

106/118, கெய்சர் வீதி, கொழும்பு.


# பாணந்துறை கோவிலுக்கு ரூ. 50,000 அரசாங்க மான்யம்

## தை மாதத்தில் திருப்பணி வேலை மீண்டும் ஆரம்பமாகலாம்

சென்ற 1958 ஆம் வருடம் மே மாதத்தில் நடந்த கலகத்திலே சேதமடைந்த பாணந்துறை கதிரேசன் கோவிலைப் புதுப்பிக்கும் வேலை இந்த தை மாதம் ஆரம்பமாகுமென்று திரு. ஸ்பென்ஸர் இராஜரத்தினம் தெரிவித்தார்.

இந்தத் திருப்பணிக்காக அரசாங்கம் ரூ. 50,000 மான்யம் அனுமதித்திருப்பதாயும், நயினதீவிலே சேதமடைந்த புத்தர் கோவிலைப் புதுப்பிக்க ஒரு லட்ச ரூபாய் அளிக்கப்பட்டிருப்பதாயும் தெரிகிறது.

பாணந்துறையிலே சிங்கள பிரமுகர் லியோ பர்னண்டோ முதலியவர்களின் ஒத்துழைப்பையும் உதவியையும் பெற்று, திரு. இராஜரத்தினம் இக் கோவில் திருப்பணியைச் சில வருடங்களுக்கு முன் செய்தார். கலகத்தில் அக் கோவிலிலிருந்தவை யெல்லாம் கொள்ளை போயின. கோபுரத்தின் மீது புத்தரின் பொம்மை யொன்று வைக்கப்பட்டு அது இப்போதுகுப்புறச் சாய்ந்திருப்பதாகத் தெரிகிறது. குருக்கள், பண்டாரம் இவர்கள் சித்திரவதை செய்யப்பட்டு மாண்டது குறித்து, சிங்களவர்களே வெட்கப்பட்டு கோவிலைப் புதுப்பிக்க முன்வந்துள்ளனர். ஏற்கனவே, இக் கோவிலைக் கட்டச் சிங்களவர் உள்ளிட்டுப் பல சமூகத்தவரும் உதவி அளித்தனரென்பது குறிப்பிடத்தக்கது.

திருப்பணி ஆலோசனை சபையிலே வில்மெட் பெரேரா, லியோ பர்னண்டோ முதலிய மூன்று சிங்களப் பிரமுகர்களையும் சேர்த்து திருப்பணி வேலைகளை உடன் ஆரம்பிக்க முயற்சி நடப்பதாயும், வேலை ஆரம்பமானபின்தான், மான்யத்தில் ஒரு பகுதியைப் பெறலாமென்றும் தெரிகிறது. கோவில் வேலையை மீண்டும் ஆரம்பிப்பதில் சேர் கந்தையா வைத்தியநாதன் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது.

## யாழ்ப்பாணத்தில் சைவ – வைணவ சமரசம் வைகுண்ட ஏகாதசி வைபவம்

வைகுண்ட ஏகாதசியன்று யாழ்ப்பாணததிலுள்ள மகா விஷ்ணு கோவிலில் பூசை, வழிபாடு, உற்சவம் எல்லாம் சிறப்பாக நடைபெற்றன. காலை முதல் இரவு வரை ஏராளமான மக்கள் வந்து வழிபட்டனர்.

குருக்கள், வழிபட்ட மக்கள் எல்லோரும் விபூதி பூசிய சைவர்களாகவே இருந்தனர். என்ருலும் வேற்றுமை காட்டாமல், இக் கோவிலில் சென்று பக்தியுடன் வழிபட்டது சைவ - வைணவ சமரசத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது.

கோவிலுக்கு வெளியே ஒலி பெருக்கி மூலம் சினிமாப் பாட்டுக்கள் ஒலித்துக் கொண்டிருந்தன. இது பக்திச் சூழ்நிலையைக் கெடுப்பதாக இருந்தது. பக்திப் பாடல்களை மட்டுமே ஒலிபரப்ப வேண்டும். இன்றேல் பாட்டு ஒன்றுமே தேவையில்லை.

—பக்தன்

## இலங்கை வானெலியில் திருவெம்பாவை

இலங்கை வானெலி வாயிலாகக் கொழும்பு வெள்ளவத்தை சம்மாங்கோடு மாணிக்க விநாயகர் ஆலயத்திலிருந்து பத்து நாளும், திருவெம்பாவை, பூசையும் பாட்டும் வெற்றிகரமாக ஒலிபரப்பப் பெற்று, சென்ற புதன்கிழமை ஆருத்ரா தரிசனத்துடன் பூர்த்தியடைந்தது. ஒவ்வொரு நாளும் ஏராளமானவர்கள் இக் கோவிலுக்கு விடியற்காலை 4 மணிக்கே வந்து, வழிபாட்டில் கலந்து கொண்டனர். கடைசி நாளன்று கூட்டம் அதிகம்.

ஒவ்வொரு நாளும் இன்னிசையுடனும் பக்தியுடனும் இங்கிருந்து காலை 6 மணிக்கு ஒலிபரப்பப்பட்டதை, இலங்கையில் மட்டுமன்றி, இந்தியாவிலும் பலர் கேட்டு இன்புற்று, பாராட்டியிருப்பதாகத் தெரிகிறது.

இந்தச் சிறப்பான பணியில் ஈடுபட்டவர்களையும், இலங்கை வானெலி அதிகாரிகளையும் பாராட்ட வேண்டும்.

## ஸ்ரீ சுப்பிரமணிய வாசிகசாலை ஆண்டு விழா

சுந்தரோடை சனசமூக நிலையத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா சமீபத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் திரு. ஸி. சுப்பிரமணியததின் தலைமையில் நடைபெற்றது. அவர் பேசும் போது, டக்டர் சுப்பிரமணியத்தின் வள்ளன்மையைப் பெரிதும் பாராட்டினர். டக்டர் அவர்களால் தான ஸ்கந்தவரோதயக் கல்லூரியும், ஸ்ரீ சுப்பிரமணிய வாசிகசாலையும் விருத்தியடைந்து வருகின்றன எனவும் அவர் மேலும் கூறினர். யாழ்பபாண மேயர், திரு. தங்கராசா துரையப்பா டக்டர் சுப்பிரமணியத்தின் படத்தைத் திரை நீக்கம் செய்துவைத்தார். ஆசிரியர் திரு. ஸி. ஞானச்சந்திரமூர்த்தி, பண்டிதர் திருநாவுக்கரசு, திரு. வி. தர்மலிங்கம், திரு. அ. அமிர்தலிங்கம், திரு. வ. பொன்னம்பலம் ஆகியோர் பேசினர்.



# துறைக்காரன்

வ. அ. இராசரத்தினம்

## 18. அந்திமாலை

வள்ளம் இக்கரையை அடைந்ததும், ஏற்கனவே அங்கு வந்துவிட்ட காய்கறிக் கூடைக்காரிகளும், தயிர்க்கார மயில்வாகனமும் வள்ளத்தில் ஏறிக்கொண்டார்கள்.

பாவம்! அவர்களுக்குப் போகும் போதும் தலைச்சுமை. வரும்போதும் சுமைதான். வாழ்க்கையே சுமையாக ஆகிவிட்ட அந்த மனித ஜீவன்கள், போகும்போது வெண்டிக்காயையும் கத்தரிக்காயையும் சுமந்தார்கள். வருகையில், கொண்டு போன பெட்டிகள் நிறைய பருப்பு, உப்பு, மிளகாய், சீனி போன்ற கடைச் சாமான்களைச் சுமக்கிறார்கள். மத்தியானம் அவர்கள் என்ன சாப்பிட்டார்களோ தெரியாது. முகத்தைப் பார்த்தாற் சாப்பிட்ட நிறைவு காணப்படவில்லை. இனிமேல் வீட்டுக்குப் போய்த்தான் சாப்பாடு ஆக வேண்டும் போல இருந்தது. வீட்டுக்குப் போவதற்கிடையில் இருட்டினாலும் இருட்டிவிடும்.

அவர்களுக்குப் பசியாக இருந்ததினாலோ என்னவோ, அவிந்த பனங்கிழங்கைத் தும்பை உரித்து உரித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

வேலாயுதத்திற்குத் தான் பதியம் போட்டு வைத்திருக்கும் பனங்கொட்டைகளின் ஞாபகம் வந்தது.

கங்கைக்கரையில் இருக்கும் பென்னம் பெரிய தென்னந் தோட்டத்தின் வேலிக்கரைகளிற் பனைமரங்கள் நிரைத்திருந்தன. ஆவணி புரட்டாதி மாதங்களில் அந்தப் பனைகளிலிருந்து பழங்கள் விழத்தொடங்கிவிடும். அத்தனையையும் தின்று தொலைக்க எவராலும் முடியாது. மேலும் இந்தப் பகுதியில் உள்ளவர்களுக்குப் பனாட்டுச்செய்யவுந்தெரியாது. எனவே, கீழே விழுந்த பழங்களை மாடுகள் தான் தின்னும். ஆனாலும் கொட்டைகளை எவருமே வீணாக விடுவதில்லை. காலையிலும் மாலையிலுமாகப் பொறுக்கிப் பதியம் போடுவார்கள்.

வேலாயுதமும் ஏறத்தாழ நானூறு பனங்கொட்டைகளைப் பாத்தியிற் போட்டிருந்தான். இப்போது அவைகளில் எல்லாம் கிழங்குவிழுந்திருக்கும். பிடுங்கிச்சிலவற்றை அவித்துச் சாப்பிடலாம். காயப் போட்டுப் புழுக்கொடியலும் செய்யலாம்.

வேலாயுதம் இப்படி எண்ணிக்கொண்டிருக்கையில் எல்லோரும் தங்கள் தங்கள் சுமைகளை வள்ளத்தில் இறக்கி வைத்து விட்டார்கள். மயில்வாகனம் தண்டுவலிக்கும் ஆசனத்தில் இருந்து கொண்டான்.

வள்ளத்தைச் செலுத்துவதற்குத் தொடங்கும்போது, 'கண கணகண' வென்று இடைவிடாமற் சைக்கிள் மணிச்சத்தம் கேட்டது. எல்லாரும் திரும்பிப் பார்த்தபோது அசாதாரணமான வேகத்திற் சைக்கிள் ஒன்று வந்து கொண்டிருந்தது.

பார்த்துக் கொண்டிருக்கையிலே அந்தச் சைக்கிள் விரைவாக வள்ளத்தடிக்கு வந்துவிட்டது.

அது சிவப்புச் சைக்கிள். அதைக் கண்ட உடனேயே தாமதமின்றி அக்கரைப்படுத்திவிடவேண்டும் என்பது மேலதிகாரிகளின் கட்டளை.

ஆனால் வேலாயுதம் அவசரப்பட்டது போலச் சைக்கிளில் வந்த அந்தப் பையன் அவசரப்படவில்லை. அவசரப்படவில்லை என்றுஞ் சொல்லிவிட முடியாதுதான். ஏனென்றால் தந்திக்காரனான அந்தப் பையன் எப்போதுமே அவசரக்காரன் தான். ஆனாலும் அவன் இயந்திரம் இல்லை, மனிதன்; களைப்பும் சோர்வும் அவனுக்குண்டு.

வெயர்க்க விருவிருக்க ஓடிவந்த யோசேப், சைக்கிளிலிருந்து இறங்கி மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கிக் கொண்டு, ஓடிக்களைத்த பந்தயக் குதிரை போல இளைத்துக் கொண்டு நின்றான். அவன் நெற்றியிலும் முகத்திலும வெயர்வை ஆறாக ஓடிக்கொண்டிருந்தது. உடலில் அணிந்திருந்த காக்கிச் சட்டை தெப்பமாக நனைந்து உடலோடு ஒட்டியிருந்தது.

யோசப்பைப் பரிதாபகரமாகப் பார்த்த வேலாயுதம், "என்ன தம்பி ஆருக்குத் தந்தி வந்திருக்குது" என்று ஆதரத்துடன் கேட்டான்.

சாதாரணமாகத் தந்திக்காரனைக்கண்டால் எவருக்குமே முதலில் குலைநடுக்கம் எடுத்துவிடும். தந்தி நல்ல செய்தியைக்கூடக் கொண்டுவரலாம். ஆனால் தந்திக்காரனைக் கண்டதும் எல்லோருக்கும் இழவுச் செய்திதான் முதலில் நினைவுக்கு வருகிறது. தங்கள் குடும்பத்தில் யாரோ ஒருவர் பிரிந்துவிட்ட செய்தியைக் கொண்டு வருவதற்காகத்தான் தந்தியே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றுதான் எல்லோரும் எடுத்த எடுப்பில் எண்ணிவிடுகிறார்கள். இதற்கு வேலாயுதம் விதிவிலக்கல்ல.

ஆனால் தந்தி தனக்கு வரவில்லை என்பது வேலாயுதத்திற்கு இதற்குள் தெரிந்துவிட்டது. எத்தனைதான் விசாலமான மனம் படைத்தவனாக இருப்பினும், பிறர் துன்பங்களைக்கண்டு எப்போதுமே மனம் குமுறிக்கொண்டிருந்தாலும், வேலாயுதமும் மனிதப் புழுக்களில் ஒருவன்தான்! சுயநலத்தின் சூழலில், சிக்கித் திணறும் மனிதப்பிராணிதான். எந்தத் துன்பம் தனக்கு வரக்கூடாதென்று ஒவ்வொரு மனிதனும் நினைக்கிறானோ, அத்துன்பம் தன்னைவிட்டு விலகி வேறு யாரையோ சென்றடைகிறது என்பதைத் தெரிந்துகொண்டபோது, தெரிந்து கொண்ட அந்தக் கணப்பொழுதிற்கு வேலாயுதத்துக்கு ஆறுதலாகத்தான் இருந்தது.

ஆனால் துன்பம் தனக்கில்லை எனத் தெரிந்தபோது, இயல்பாகவே இரக்க சிந்தைகொண்டவனான வேலாயுதம், யாருக்கு அந்தத் துன்பந்தருந் தந்தி வந்தது என்பதை அறிய ஆவலானான். அந்த ஆவலிற்தான் "யாருக்குத் தந்தி?" என்று கேட்டான்.

கடைக்கார யோனுக்குத் தான் தந்தி வந்திருக்கிறது என்று யோசப் சொன்னான்.

தந்தியில் வேலாயுதம் பயந்ததுபோல ஒன்றுமே இல்லை.

நாளைக்கு அவனுடைய உறவினர் யாரோ ஒருவர் வருகிறாராம். சீனன்வாடிப் புகையிரத நிலையத்திற் தன்னைச் சந்திக்கும்படி யோனுக்கு அவர் தந்தி கொடுத்திருக்கிறார் என்று யோசேப் விளக்கமுங் கொடுத்தான்.

வேலாயுதத்திற்கு ஆறுதலாக இருந்தது.

இதற்குள்ளாகப் பையன் வள்ளத்தில் ஏறிக்கொண்டான். அக்கரையிலேயே தந்தியைக் கொடுக்கவேண்டியிருந்ததால் சைக்கிளைக் கொண்டு செல்ல அவன் விரும்பவில்லை. வள்ளத்தில் இறங்கியதும் கடைக்காரனுக்குத் தந்தியைக் கொடுத்துவிட்டு, அடுத்த வள்ளத்திலேயே திரும்பிவிட அவன் எண்ணினான்.

வள்ளத்தில் ஏற்கனவே ஏறி இருந்தவர்கள் பெண்கள். இப்போது யோசேப் ஏறியிருக்கிறான். அவன்தான் தண்டுவலிக்க வேண்டும் என்பதுதான் நியதி. ஆனால், வள்ளத்தில் ஏறிக்கொண்ட யோசேப் "என்னாற் தண்டுவலிக்கவே முடியாது" என்று அலுப்போடுசொல்லிக்கொண்டே ஆசனத்தில் அமர்ந்தான். நீண்ட கொட்டாவியும் பெருமூச்சும் அவன் அலுப்பையும் ஆயாசத்தையும் வெளிக் காட்டின.

வேலாயுதத்துக்கு அவன் மேலே அனுதாபமாக இருந்தது. பார்க்கப்போனால் யோசேப்பிற்குப்பத்தொன்பது, மிஞ்சினால், இருபது வயதுதான் இருக்கும். இந்த வயதில் எத்தனையோ இளைஞர்கள் ஒன்றுக்கும் உதவாதவர்களாக, உலகிற்கு வேண்டாதவர்களாகச் சீவிக்கிறார்கள். ஆனால் யோசேப் எத்தனை பொறுப்புணர்ந்தவன்!

இரண்டு வருடங்களுக்கு முன்னர் அவன் தந்தையார் செத்துப்போனதை வேலாயுதம் அறிவான். யோசேப்புக்கு இரண்டு பெண் சகோதரங்களும் இரண்டு ஆண் சகோதரங்களு மிருப்பதும் வேலாயுதத்திற்கு ஞாபகம் வந்தது. மொத்தமாக யோசேப் ஐந்து வாய்களுக்குச்சோறு கொடுக்க வேண்டும்! பொறுப்புணர்ந்த யோசேப் எந்த வேலையைச் செய்யவுந் தயாராகவே இருந்தான்.

ஆனால், நல்லகாலமாக அவனுக்கு மூன்று மாதங்களுக்கு முன்னர்தான் தந்திச்சேவகன் வேலை கிடைத்தது.

வேலையா அது? உயிர் வேதனை. தபாற்கந்தோரிலே இருந்த இருப்பில் இருந்து கணக்கெழுதிக்கொண்டே முந்நூறு நானூறு என்று சம்பளம் வாங்குபவர்கள் இருக்கிறார்கள். ஆனால் யோசேப் நூறு ரூபாய் சம்பளம் வாங்குவதற்காகப் படும் பிரயாசம்! அப்பாடா! வேலாயுதத்திற்கு வேதனையாகவும் எரிச்சலாகவும் இருந்தது.

ஆமாம்; ஐந்து மைல் வட்டாரத்துக்குள் அடிக்கடி அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தந்தி வரும். அவைகளை எடுத்துக்கொண்டு ஓடவேண்டும்! அவன் வாழ்க்கையே ஒரே ஓட்டந்தான். ஒவ்வொரு நாளும் அவன் முப்பது மைல் தூரமாவது சைக்கிள் ஓடவேண்டியிருக்கிறது. ஆனாற் சம்பளம் என்னவோ நூறு ரூபாய்தான்!

எண்ணங்களின் வேதனையிலும், கசப்பிலும், வேலாயுதத்தாற் துரிதமாக வள்ளத்தைச் செலுத்த முடியவில்லை. மெதுவாகத் தவழ்ந்து நெளியும் அலைகளினால் ஏற்றப்பட்டு, வள்ளம் சித்தம் போக்குச் சிவம் போக்காய்ச் சென்றுகொண்டிருந்தது. இப்படியே போய்க் கொண்டிருந்தால், எப்பொழுது கரைசேரப்போகிறது என்று எண்ணிக்கொண்டவனாக, யோசேப் எழுந்து சென்று தண்டை வலித்தான். ஆமாம், அழுதழுதும் பிள்ளை அவளே பெறவேண்டும்!

அவன் தண்டு வலிப்பதைக் கண்ட வேலாயுதத்திற்கும் உற்சாகம் வந்துவிட்டது. சவளைத் தூக்கி நீரைத் துளாவி வலிக்கத் தொடங்கினான். இப்போது வள்ளம் நீரைக் கிழித்துக் கொண்டு வேகமாகச் சென்றது.

மேற்கே கங்கையின் அக்கரையிலே நிமிர்ந்து தெரியும் கோரைப் புல்லுக்கும் இப்பால் உயர்ந்து நுழைத்திருந்த மருதமரங்கட்கும் பின்னால் சூரியன் ஒளித்துக்கொள்ள ஆயத்தமானான். சாய்பொழுதின் செயலற்ற ஒளி, திட்டுத் திட்டாக வான வீதியில் அசைந்து செல்லும் மேகக் கூட்டங்கட்கு வர்ணந் தீட்டத் தொடங்கியது. கணத்துக்குக் கணம் மாறுபட்டு வரும் அந்த வர்ணஜாலங்களை எதற்கு உவமிப்பது? அவ்வர்ணத்தை மஞ்சள் என்று சொன்னாற் சூரிய காந்திப்பூவை என்ன நிறம் என்று சொல்வது? சிவப்பு என்று சொன்னாற் செவ்வரத்தம் பூவுக்கு என்ன நிறங்கொடுப்பது? வேலாயுதம் கவிஞன் அல்ல. எழுத்தாளனும் அல்ல. ஆனால் அந்திமாலைப்போதிலே, மேற்கே ரசவாதவித்தைக்காரனை சூரியன் வினாடிக்கு வினாடி நிறந் தீட்டும் அழகிலே அவனாற் சொக்க முடியும். எத்தனையோ நாட்கள் அவன் அந்த அழகை ரசித்திருக்கிறான். கறிசமைக்கத் தெரியாவிட்டாலும், கறிக்கு உப்பு இல்லை, புளி கூடிவிட்டது என்று சொல்ல அவனுக்குத் தெரியும். நல்ல குழம்பை ரசித்துச் சாப்பிடவும் அவனால் முடியும். அதே போலத்தான் அந்திமாலையையும் ரசிக்க அவனுக்குத் தெரியும்.

இந்த மாலைப் பொழுதைப் போல எல்லாருடைய வாழ்வும், வெப்பமற்றதாய் இருந்தால் என்ன? மாலைப்பொழுதின் வண்ணச் சேர்க்கைபோல மக்கள் வாழ்விலும் வினாடிக்கு வினாடி புதுப்புது இன்பமும் கலகலப்புமாய் இருந்தால் என்ன? என்று வேலாயுதம் யோசித்துக் கொண்டிருக்கையில் வள்ளம் அக்கரையை அடைந்துவிட்டது.

—தொடரும்


யாழ்ப்பாணம்

**ஐக்கிய இலாப நிதி**

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

**வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.**

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

**பங்குப்பணங்கட்டுமுறை**

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

**இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.**

**எஸ். கனகசபை**
சிறாப்பர்

Std. 14.

சினிமா உலகம்

# தமிழ் உணர்ச்சியும் நாட்டுப்பற்றும்
## சினிமா அளிக்கும் நல்வாய்ப்பு

— எஸ். வி. எல். செல்வநாயகம் —

சமீபகாலத்தில் நல்ல தமிழ் எழுதி நல்லபடி தமிழுணர்ச்சியை சினிமாவில் வளர்த்த பெருமை, அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, கவிஞர் கண்ணதாசன், கலைஞர் ஏ. பி. நாகராஜன், ஏ. கே. வேலன், இளங்கோவன் முதலிய தமிழறிஞர்களைச் சாரும். அன்னார் எழுதிய வசனங்களில் நல்ல தமிழ், உணர்ச்சிப் பெருக்குடன் அமைந்து, மக்களைப் பெரிதும் கவர்ந்தது எனலாம்.

இன்றைய சினிமாப் படங்களில் தமிழை உணர்ச்சியுடன் பேசி மக்களைக் கவர்ந்தவர்களில், சிவாஜி கணேசன், எம். ஜி. ராமச்சந்திரன், கே. ஆர். ராமசாமி, எஸ். எஸ். இராஜேந்திரன், மனோகர் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். நடிகைகளிலும் பத்மினி, பண்டரிபாய், கண்ணம்பா, எம். என். ராஜம், ராஜசுலோசனா முதலிய நட்சத்திரங்கள் முக்கியமானவர்கள். உணர்ச்சியுடன் அமைந்த அருமையான அடுக்குத் தொடர்களை மிக அழகாக அள்ளி வீசி மக்களின் மதிப்புக்குப் பாத்திரமானவர்கள் இவர்கள்.

நாட்டுப் பற்றையும் தமிழ் உணர்ச்சியையும் வீரத்தையும் சமீப காலத்தில் மிகப் பெருமளவில் அள்ளி வழங்கிய படம் "வீரபாண்டிய கட்டப்பொம்மன்" எனலாம். இப் படத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் நடிப்பின் பேரிலேயே அன்னாருக்கு "கட்டப்பொம்மன் கணேசன்" என்னும் சிறப்புப் பெயர் கிடைத்தது. இப் படத்துக்கு வசனம் அமைத்துப் பெரும் புகழ் பெற்றவர் சக்தி கிருஷ்ணசாமி.

இன்னும் தமிழ் உணர்ச்சி, நாட்டுப்பற்று, வீரம் முதலிய பெற்றிகளைப் பெருமளவில் அளித்து வெற்றிபெற்ற படங்களுள், சிவகெங்கைச் சீமை, வணங்காமுடி, மனோகரா, முதலியன முன்னணியில் நிற்கத் தகுந்தவை. அவற்றின் வசன கர்த்தாக்கள் முறையே — கவிஞர் கண்ணதாசன், ஏ. கே. வேலன், கலைஞர் கருணாநிதி ஆகியோர். வீரபாண்டிய கட்டப்பொம்மன், சிவகெங்கைச் சீமை முதலிய சரித்திரக் கதைகளுக்குப் புதுமெருகிட்டு, புதிய பாணியில் வீரப் பொலிவுடன் வசனங்களை ஆக்கிய பெற்றி போற்றத்தக்கதாகும்.

புரட்சிக் கருத்துடன் ஆவேச உணர்வையும் நல்ல நாட்டுப் பற்றையும் அளித்தார்கள் வசன கர்த்தாக்கள். சொர்க்க வாசல், நாடோடி மன்னன் முதலிய படங்கள் மூலமாக, இத் துறையில் அறிஞர் அண்ணா, எம். ஜி. இராமச்சந்திரன் ஆகியோரின் பங்கு நிலையானது.

இலக்கியப் பொழிலமைந்த சரித்திரக் கதைகளான, ஔவையார், சம்பூர்ண ராமாயணம், நல்லதங்காள், தங்கப்பதுமை, அம்பிகாபதி, தெனாலிராமன் முதலிய படங்கள் நல்ல தமிழ் உணர்வையும், இலக்கிய இரசனையையும், மக்களிடம் புகுத்தியுள்ளன. இவற்றின் வசன கர்த்தாக்கள் நல்ல தமிழறிஞர்கள். முறையே, கொத்தமங்கலம் சுப்பு, ஏ. பி. நாகராஜன், ஏ. பி. எஸ். அரு. இராமநாதன், நடராஜன், கண்ணதாசன் முதலியோர் இவற்றின் வசனகர்த்தாக்கள்.

சில படங்களில், சிறு சிறு நாடகங்களைப் புகுத்தி நல்ல பணி செய்துள்ளனர் தயாரிப்பாளர்கள். "நான் பெற்ற செல்வம்" எனும் படத்தில் புகுத்தப்பட்ட "நக்கீரன்" நாடகமும், "பிரசிடெண்ட் பஞ்சாட்சரம்" எனும் படத்தில் புகுத்தப்பட்ட "வீரர் சிதம்பரனார்" நாடகமும் இப்பணியில் குறிப்பிடத்தக்கவை.

இலக்கியம் வளர, தமிழ் உணர்ச்சி மேம்பட, நாட்டுப் பற்று வலுக்க, சினிமாத்துறை ஆக்கமும் ஊக்கமும் அளிப்பது தமிழ் உலகுக்கு நல் வாய்ப்பே.

### யாழ் நாடக சினிமா ரசிகர் சினிமா கூட்டம்

யாழ் நாடக சினிமா ரசிகர் சங்கக் கூட்டமொன்றில் 1959ஆம் ஆண்டின் சிறந்த திரைப்படக் கலைஞர்கள் தெரிவு நடைபெற்றது. முடிவுகள் வருமாறு:

1959ஆம் ஆண்டில் இலங்கையில் வெளிவந்த பதிபக்தி, நாடோடி மன்னன், அன்பு எங்கே?, மஞ்சள் மகிமை, கல்யாணபரிசு, தங்கப்பதுமை, வீரபாண்டிய கட்டப்பொம்மன் ஆகிய தரத்தில் சிறந்த படங்களே பரிசீலனை செய்யப்பட்டன.

1. 1959-ம் ஆண்டின் மிகச்சிறந்த படம், 'வீரபாண்டிய கட்டப்பொம்மன்'.

2. 1959-ம் ஆண்டின் சிறந்த டைரக்டர்: எம். ஜி. ஆர். (நடோடிமன்னன்)

3. 1959-ம் ஆண்டின் சிறந்த நடிகர்: சிவாஜி கணேசன். (வீரபாண்டிய கட்டபொம்மன்)

4. 1959-ம் ஆண்டின் சிறந்த நடிகை: பத்மினி. (தங்கப்பதுமை)

5. 1959-ம் ஆண்டின் சிறந்த ஹாஸ்ய நடிகர்: தங்கவேலு. (மஞ்சள் மகிமை)

6. 1959-ம் ஆண்டின் சிறந்த ஹாஸ்ய நடிகை: முத்துலட்சுமி (வீரபாண்டிய கட்டபொம்மன்)

7. 1959-ம் ஆண்டின் சிறந்த சங்கீத டைரக்டர்: ஏ. எம். ராஜா. (கல்யாணபரிசு)

### சாந்தாராமும் குழந்தைகளும்

புகழ்பெற்ற இயக்குநர் திரு சாந்தாராம் ஆண்டுக்கு மூன்று குழந்தைகள் படம் தயாரிக்கத் திட்ட மிட்டுள்ளாரெனத் தெரிகிறது. குழந்தைகளுக்கான படங்கள் எடுப்பதற்காக சாந்தாராம், ராச்கமால் படப்பிடிப்பு நிலையத்தில் ஒரு புதுத் துறையை ஆரம்பித்திருக்கிறார். நுணுக்கமான உத்திகளைக் கையாண்டு, பல படங்களிலும் தனது வெற்றி முத்திரையைப் பொறித்துள்ள சாந்தாராம், குழந்தைகள் படத்திலும் தனக்கெனப் பிரத்தியேகமான ஒரு பாதையை அமைக்கக்கூடுமென எதிர்பார்க்கலாம்.



மன மகிழ்ச்சி முகத்தில் களி நடனம் புரியத் தோன்றும் இம் மங்கையின் மகிழ்ச்சிக்குரிய காரணத்தை, விரைவில் வெளியிடப்படவிருக்கும் சுதர்சனம் பிக்ஸர்ஸாரின் 'அவள் யார்?' தான் விளக்க முடியும்.

### கொஞ்சும் சலங்கை

இராமன் படநிலையத்தார் தயாரித்துவரும் 'கொஞ்சும் சலங்கை' ஒரு முழு நீள டெக்னிக்கலர் படமாக விருக்கும். இப் படத்தில் ஜெமினி கணேசன், கமலா லட்சுமணன், சாவித்திரி, சாரங்கபாணி ஆகியோர் நடிக்கின்றனர். திரு. எம். வி. இராமன் படத்தை இயக்குகிறார். திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் திரைக்கதை வசனம் எழுதியுள்ளார்.



இந்திய சினிமாப்பட இயக்குநரான சத்யஜித் ரேயின் 'அப்புவின் உலகம்' பிரிட்டனில் நடைபெற்ற சர்வதேசப் படவிழாவில் சிறப்புப் பரிசு பெற்றதை முன்னிட்டு, லண்டனில் உள்ள நஷெனல் பிலிம் தியேட்டரில் பாராட்டு விழா கொண்டாடப்பட்டது. அவ்விழாவில் கலந்து கொண்ட ஆங்கிலப் படவுலகுப் பிரமுகர்களையும், இந்திய உதவித் தூதுவர் திரு. எம். ஏ. ஹுஸெயினையும் படத்தில் காணலாம்.


தைப்பொங்கல் தரும் தித்திக்கும் விருந்து!
இப்பொழுது திரையிடப்படுகிறது!
சென்ட்ரல் (மருதானை) ஓடியன் (கல்கிசை) ராணி (யாழ்ப்பாணம்)
ஜோதி (திருக்கோணமலை) ஜோதி (ரத்தினபுரி)
★ என். டி. ராமராவ்
★ ஆர். நாகேஸ்வரராவ்
★ எம். என். ராஜம்
★ கிரிஜா
★ மாலினி
★ தேவிகா
★ ரேலங்கி
நடித்த
பானு பிலிம்ஸாரின்
சபாஷ் ராமு
வசனம்: உதயகுமார்
சங்கீதம்: ரி. எம். இப்றஹிம்

ஜிந்துப்பிட்டி முருகன் தியேட்டரில்
நாகேஸ்வரராவ் — ஜமுனா
நடிக்கும்
கண் நிறைந்த கணவன்

# வடக்கில் இரு ஹரிஜன அபேட்சகர்களும் வெற்றி பெறக்கூடும்?

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)
றும் தேர்தல்விசாரணை நீதிபதி தீர்ப்பளித்தார்.

இலங்கையிலும் ஹரிஜனங்களுக்காக இந்தியாவைப் போல் இரட்டை அங்கத்தினர் தொகுதிகளை எற்படுத்த வேண்டுமென்று ஹரிஜனங்கள் சார்பாகக் கேட்கப்பட்டது. தொகுதி நிர்ணயக் கொமிஷன் இதை ஒப்பவில்லை. ஹரிஜனங்கள் தொகையாக வசிக்கும் தொகுதிகளில், பல அபேட்சகர்கள் போட்டியிட்டால், ஹரிஜன அபேட்சகர் வெற்றிபெற அதிக வாய்ப்பு உண்டென்று அக் கொமிஷனர்கள்கூறிவிட்டனர்.

## மூன்றுதொகுதிகளில் இ. ஜ. கா. அபேட்சகர்

ஜனத்தொகை வீதாசாரப்படி இலங்கை இந்தியருக்கு 101 ஸ்தானங்களிலிருந்த பார்லிமெண்ட் சபையில் 14 ஸ்தானங்கள் கிடைக்கலாமென்று, அரசியல் திட்டத்தை வகுத்த சோல்பரி கொமிஷனர்கள் கூறியுள்ளனர். அந்தக் கணக்கின்படி பார்த்தால் 156 பேருள்ள சபையில் 21 ஸ்தானங்களுக்குமேல் அந்தச் சமூகத்தினருக்குக் கிடைக்க வேண்டும்.

ஆனல், அவர்களது வாக்குரிமை பறிக்கப்பட்டுவிட்டதால், சென்ற இரு பார்லிமெண்ட் சபைகளிலும் அச் சமூகத்தினருக்கு ஒரு பிரதிநிதியுமில்லை. முந்திய சபையில், திரு. வைத்திலிங்கம் நியமன மெம்பராக இருந்தார். சென்ற சபையில் அந்த நியமன ஸ்தானமும் சிங்களர் ஒருவருக்குக் கொடுத்துவிட்டார் பண்டாரநாயக்கா! ஆகவே சென்ற 8 வருடங்களுங்குமேல் பார்லிமெண்டில் இந்திய வம்சாவளியினரான சுமார் 10 லட்சம் பேருக்கு ஒரு பிரதிநிதியுமில்லை.

டில்லிக்கு சேர் ஜோன் கொத்தலாவலை சென்று பிரதமர் நேருவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்திலே, இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளி சமூகத்துக்கு பார்லிமெண்டில் பிரதிநிதித்துவம் அளிக்க ஒப்புக்கொண்டார்.

அதன்படி இங்கு பிரஜைகளாகப் பதிவ செய்யப்பட்ட இந்திய வமசாவளியினரின் பெயர்கள் அடங்கிய தனி இடாப்பைத் தீவனைத்துக்குமாகத் தயாரிப்பதென்றும், அவர்கள் தங்களுக்குள்ளாக 4 பேர்களைத் தெரிவுசெய்யலாமென்றும் இங்கு சட்டமும் நிறைவேற்றப்பட்டது .ஆனல், சட்டத்தை நிறைவேற்றிய சேர் ஜோனும் சென்ற தேர்தலில் அதை அமுலுக்குக் கொண்டுவராமல் இருந்துவிட்டார்.

பண்டாரநாயக்கா பிரதமரானதும், அரசியல் சட்டத்திலிருந்து அதையும் நீக்கிவிட்டார்.

தங்களைத் தனித் தொகுதியாக ஒதுக்கிவிட்டது, இந்திய வம்சாவளியினருக்குப் பிடிக்கவில்லை. இதை அவர்கள் பலமாக ஆட்சேபித்தனர். ஆனல், ஒன்றுமில்லாததற்கு ஏதாவது பிரதிநிதித்துவம்கிடைப்பதால் வேண்டா வெறுப்பாக அதை அச்சமயம் ஒப்புக்கொண்டனர். பின்னர் தனித் தொகுதி நீக்கப்பட்டதைக் குறித்து இவர்கள் வருந்தவில்லை.

இப்போது எந்தத் தொகுதியிலும், பதிவுசெய்யப்பட்ட இந்திய வம்சாவளிப் பிரஜைகளுக்கு மெஜாரிட்டி பலமில்லை. அவர்கள் ஜனத்தொகை அதிகமிருப்பினும், பெரும்பாலோருக்கும் வாக்குரிமை பறிக்கப்பட்டுவிட்டது. இந் நிலையில் அவர்கள் எந்தத் தொகுதியிலும் நேர்முகமாக வெற்றி பெறுவது சுலபமல்ல என்றுலும் இப்போது மூன்று தொகுதிகளில் இலங்கை ஜனநாயக காங்கிரஸ், 3 அபேட்சகர்களை நிறுத்தியுள்ளது.

## நுவரெலியா

நுவரெலியாவில் மொத்தம் 28 ஆயிரம் வாக்குகளில், ஐயாயிரமே தமிழர் வாக்குகள். என்றுலும் பல சிங்களர் போட்டியிடுவதால், சிங்கள வாக்குகள் பிரிந்துபோய், தொண்டமான் (இ. ஜ. கா.) தெரிவுசெய்யப்படக்கூடு மென்பது ஒரு நம்பிக்கை.

மேலும், பல சிங்கள தோட்டத் தொழிலாளரும் இ. ஜ. கா வில் அங்கம் வகிப்பதால், அவர்களும் தொண்டமானை ஆதரிக்கக்கூடும். தொண்டமான் தமது நியமனப் பத்திரத்தைத் தாக்கல்செய்ததும், ஒரு சிங்கள போட்டி அபேட்சகர், "வெற்றி உங்களுக்குத் தான். நாங்கள் பலர் போட்டியிட்டுப் பிரிந் திருக்கிறேம்" என்று தொண்டமானைக் கை குலுக்கிப் பாராட்டியது குறிப்பிடத்தக்கது.

கொழும்பு மத்தியதொகுதியில் இ. ஜ. கா. ஆதரவில் **ஏ. அஸீஸ்** போட்டியிடுகிறுர். இது மூன்று அங்கத்தினர் தொகுதி: மொத்தம் 75 ஆயிரம் வாக்காளர். 13 பேர் போட்டிபோடுகிறுர்கள். இதில் சிங்கள வாக்காளர் 36 ஆயிரம், முஸ்லிம்கள் 28 ஆயிரம். தமிழ்ப் பெயர்கள் 11 ஆயிரம்.

தமிழ் வாக்காளரும் முஸ்லிம் வாக்காளரில் ஒருபகுதியினரும் தம்மை ஆதரிப்பரென்பது அஸீஸ் நம்பிக்கை. ஆனல், திருமதி வசந்தா அப்பாத்துரை என்ற தமிழ்ப் பெண்மணியும், வேறு பல முஸ்லிம்களும் இத் தொகுதியில் போட்டியிடுவதால் தமிழ், முஸ்லிம் வாக்குகள் பிளவுபடக்கூடும்.

திருமதி அப்பாத்துரை ஏற்கனவே தமிழரசுக்கட்சி அபேட்சகராக நிற்க மனுச் செய்திருந்தாராம். ஆனல், இ. ஜ. காவை விரோதித்துக் கொள்ள சமஷ்டிக் கட்சியினர் விரும்பாமல் அவரது மனுவை ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

## தமிழரை நம்பி

தமிழரை நம்பியே தாம் இத் தொகுதித் தேர்தலில் அபேட்சகராக நிற்க முன்வந்ததாக திருமதி அப்பாத்துரை தெரிவித்தார். தமிழ் வாக்காளரை சமசமாஜிக் கட்சியைச் சேர்ந்த பாலா தம்புவும் பெரிதும் நம்பி, அபேட்சகராகக் போட்டியிடுகின்றுர். தமிழ் வாக்குகள் பிளவு படக்கூடும். கணிசமான முஸ்லிம், தமிழ் வாக்குகள் கிடைத்து, மூன்றுவது மெம்பராகவாவது தாம் வரலாமென்பது அஸீஸின் நம்பிக்கை. இதற்கிடையேதிருமதி அப்பாத்துரையை, தேர்தல் போட்டியிலிருந்துவிலக்கிவிடச் செய்ய முயற்சிகள் நடந்து வருவதாகவும் தெரிகிறது. சிங்கள முஸ்லிம் வாக்குகள்ஒன்று கூடக் கிடைக்க முடியாத நிலையில், தனிப்பட்டு சுயேச்சையாக நிற்கும் அவர், தமிழ் வாக்குகளை வீணுகப் பிளவு படுத்த வேண்டாமென்று அவரிடம் சிலர் கேட்டிருப்பதாகத் தெரிகிறது.

மலை நாட்டிலே மஸ்கேலியா தொகுதியிலே இ. ஜ. கா மற்றோர் அபேட்சகரை நியமித்துள்ளது. இங்கும் தமிழ் வாக்காளர் எண்ணிக்கை மிகவும் குறைவுதான். போதாக் குறைக்கு, மற்றோர் தமிழர் இங்கு போட்டியிடுகிறுர். தமிழ் வாக்குகள் பிளவுபட்டால் இங்கு நிலைமை மிகப் பலவீனமாகும். ஆனல் பல சிங்கள அபேட்சகர்கள் இங்கு தங்களுக்குள் போட்டியிடுவதாலும், இ. ஜ. கா. வுக்கு இப் பகுதியில் ஓரளவு செல்வாக்கு இருப்பதாலும், இங்கும் வெற்றி பெற "சான்ஸ்" உண்டென்று இ. ஜ. கா. நம்புகின்றது.

இந்தத் தேர்தலில் வெற்றி தோல்வி எப்படி இருப்பினும் சரி, இலங்கை இந்திய சமூகம், சாகவில்லை என்றும் இலங்கை அரசியலில் ஈடுபட்டுத் தங்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகளைச் சட்ட ரீதியான ஜனநாயக முறையில் தீர்த்துக்கொண்டு, இலங்கைக்குத் தொண்டாற்ற உறுதி பூண்டிருப்பதாயும் இத் தேர்தல் மூலம் மறைமுகமாக அறிவுறுத்துகின்றுர்கள்.

மேலும் மற்றும் பல தொகுதிகளில், சிங்கள அபேட்சகரும், பதிவுப் பிரஜைகளான மலை நாட்டுத் தமிழரின் ஆதரவை நாடி, அவர்களிடம் வருவார்களாதலால், அச்சமயம், தங்களுக்கு உதவி செய்யக் கூடிய அபேட்சகருக்கு அவர்கள் ஆதரவு தந்து, பார்லிமெண்டுக்கு அனுப்ப சந்தர்ப்பம் வாய்த்துள்ளது.

# புதிய தேர்தல் தொகுதிகள்

[5ஆம் பக்கத் தொடர்ச்சி]
பஹா, பள்ளே கம்பஹா ஆகிய கிராம சங்க வட்டாரங்கள்.

இங்கு வாழும் மக்கள் தொகை 1,00,500. வாக்காளர் தொகை 94,000. மொத்தக் குடிசனத் தொகையில் 70 சத விகிதம் மேல் நாட்டுச் சிங்களவரும், 5 சத விகிதம் கரையோரப் பகுதிச் சிங்களவரும், 0·9 சத விகிதம் இலங்கைத் தமிழரும், 17.0 சத விகிதம் சோனகரும், 6·7 சத விகிதம் ஏனையோருமாவர். இவர்களில் 75·2 சத விகிதம் பெளத்தர்களும், 6·1 சத விகிதம் இந்துக்களும், 17·7 சத விகிதம் முஸ்லிம்களும், 1·0 சதவிகிதம் கிறிஸ்தவருமாவர்.

## தொகுதி இல: 39 கலகெதர

எல்லைகள்: வடக்கில் வடமேல் மாகாணமும் அரிஸ்பற்றுப் பிரிவின் எஞ்சிய பாகங்களும். கிழக்கில் அரிஸ் பற்றுப் பிரிவின் எஞ்சிய பாகம். தெற்கில் உடுநுவர, யட்டினுவர பிரிவுகளும் சப்பிரகமுவா மாகாணமும், மேற்கில் சப்பிரகமுவா மாகாணமும் வடமேல் மாகாணமும்.

பிரிவுகள்: உடபலாத்தை கிழக்கு, மேற்கு, பள்ளே பலாத்தை, கணப்பலாத்தை ஆகிய கிராம சங்க வட்டாரங்கள். மெதசியப்பற்று கிராம சங்கத்தின் ஒரு பிரிவு.

இங்கு வாழும் மக்கள் தொகை 42,800. வாக்காளர் 41,000. இவர்களில் 85.8 சத விகிதம் மேல்நாட்டுச் சிங்களவரும், 4.2 சத விகிதம் கரையோரப்பகுதிச் சிங்களவரும், 0.3 சத விகிதம் இலங்கைத் தமிழரும், 4.0 சத விகிதம் சோனகரும் 5.1 சத விகிதம் ஏனையோரும் ஆவர். 90.2 சத விகிதம் பெள்த்தர்களும், 4.3 சத விகிதம் இந்துக்களும், இஸ்லாமியரும், 1.2 சத விகிதம் கிறிஸ்தவரும் வசிக்கின்றனர்.

## தொகுதி இல: 40 யட்டினுவர

எல்லைகள்: தும்பனே, அரிஸ்பற்றுப் பிரிவுகள் வடக்கிலும், கிழக்கில் உடுனுவர யட்டினுவர பிரிவுகளின் பகுதிகளும், கண்டி, பாத்த ஹேவாஹெட்ட பிரிவும். தெற்கில் உடுனுவர யட்டினுவர பிரிவுகளும், சப்பிரகமுவா மாகாணமும், மேற்கில் சப்பிரகமுவா மாகாணம்.

பிரிவுகள்: கங்கப்பலாத்த, மெதப்பலாத்த ஆகிய கிராம சங்கங்களின் பிரிவுகளும்; கந்துபலாத்த, கிராம சங்க வட்டாரமும் கடுகண்ணுவ நகரசபை வட்டாரமும்.

இங்கு வாழும் 53,100 சனங்களில் 49,200 வாக்காளர் உளர். இவர்களில் 73.0 சத விகிதம் மேல்நாட்டுச் சிங்களவரும் 13.0 சத விகிதம் கரையோரப்பகுதிச் சிங்களவரும், 2.0 சத விகிதம் இலங்கைத் தமிழரும், 3.0 சத விகிதம் சோனகரும், 9.0 சத விகிதம் ஏனையோரும் வசிக்கின்றனர். இவர்களில் 85.1 சத விகிதம் பெளத்தரும், 8.3 சத விகிதம் இந்துக்களும், 3.3 சத விகிதம் முஸ்லிம்களும், 3.2 சத விகிதம் கிறிஸ்தருவமாவர்.

(தொடரும்)


தாய்ப்பாலுக்கு நிகரான
சிறந்த மாற்றுப்பால்—

மில்க்கோஸ்




தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு தாய்ப்பால் ஊட்டவே விரும்புவார்கள். உங்களால் அது முடியாது போனல், குழந்தைக்கு தாய்ப்பாலுக்குப் பதிலான சிறந்த மாற்றுப்பாலைக் கண்டு பிடிப்பதற்கு நீங்கள் முனைவீர்கள். சிசு உணவுகளில் சரியான விகிதாசாரப்படி பிசிதம், கரி நீரகைகள், கொழுப்புச் சத்துகள் மட்டும் இருந்தால் போதாது, அதில் தொற்று நோய்களை எதிர்ப்பதற்கும், சோகை மந்தம். எலும்பு உருகுதல் போன்ற வியாதிகள் பிடிக்காது தடுப்பதற்கும், எதிர்ப்பதற்கு முகந்த இரும்புச் சத்துகளும் விட்டமின் சத்துகளும் கொண்டதாகவிருக்க வேண்டும்.

மில்க்கோஸ் பத்திரமான, முழுச்சத்துள்ள சிசு–உணவாகும். இது சுத்தமான முழுப்பாலாடை நிறைந்த பசுப்பாலிலிருந்து தயாரிக்கப்படுகிறது. குழந்தைகளுக்கு வேண்டிய சத்துக்களை இது பூர்த்தி செய்கிறது.

மில்க்கோஸ், நன்கு பத்திரமாக குழந்தைகளின் மெல்லிய ஜீரண உறுப்புகளுக்கு ஏற்றதாகத் தயாரிக்கப்படுகிறது. மில்க்கோஸ் நவீன ரீதியாகப் பொதியப்பட்டு, உங்களுக்கு பத்திரமாகவும், பரிசுத்தமாகவும் கிடைக்கிறது.

உங்கள் குழந்தைகளை ஆரோக்கிய குழந்தைகளாக வளர்க்க அவர்களுக்கு இன்றே மில்க்கோஸ் ஊட்ட ஆரம்பியுங்கள்.

மில்க்கோஸ்
இன்றியமையாத சிசு–உணவு

ஹார்லிக்ஸ் தயாரிப்பாளரால்
தயாரிக்கப்படுகிறது

HLM 3486

## இப்பொழுது திரையிடப்படுகிறது!

சீனிமாஸ் லிமிட்டெட் தாபனத்தாரின் மகத்தான பொங்கல் வெளியீடு!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி)

மற்றும் ஆறு திரைகளில்

சிவாஜி கணேசன், சாவித்திரி,

பாலையா, கண்ணாம்பா,

சந்திரபாபு, தங்கவேலு,

ஈ. வி. சரோஜா

நடிக்கும்

ஆர். ஆர். பிக்சர்ஸ்

# காத்தவராயன்

சிவன் பார்வதி நடனம்:

கோபி கிருஷ்ணா - கமலா லக்ஷ்மணன்

தமிழகத்தின் பழம் பெரும் நாட்டுக்கூத்தை வெள்ளித்திரையில் கண்டு களியுங்கள்!



## இப்பொழுது திரையிடப்படுகிறது!

சிலோன் தியேட்டர்ஸ் தாபனத்தாரின் உன்னத பொங்கல். வெளியீடு!

எல்பின்ஸ்டன் (மருதானை) ரெக்ஸி (வெள்ளவத்தை) வேல்ஸ் (கண்டி) வின்ஸர் (யாழ்ப்பாணம்) குயின்ஸ் (காலி) இம்பீரியல் (மட்டக்களப்பு) கிங்ஸ் (பதுளை) நெல்சன் (திருக்கோணமலை)


ஜெமினி கணேசன்

டி. ஆர். ராமச்சந்திரன்

டி. எஸ். துரைராஜ்

சகஸ்ரநாமம்

நாகையா



ஜமுனா

எம். என். ராஜம்

பி. கண்ணாம்பா

எம். சரோஜா

ராகினி

நடிக்கும்

# நல்ல தீர்ப்பு

பின்னணி:

பி. லீலா, டி. எம். சௌந்தரராஜன்,

சுசீலா, ஜிக்கி.

வசனம்:

முரசொலி மாறன்

நல்ல நாளில் அளிக்கப்படும் இந்த நல்ல தீர்ப்பு என்ன வென்பதை அறியத் தவறிவிடாதீர்கள்!


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1960-ம் ஆண்டு ஜனவரி மாதம் 16-ந் திகதி வெளியிடப்பெற்றது.